KALKI
22.6.86
ரூ.1.50

கல்கி




"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷிஃப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
NEW CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL FOR FRESHNESS ALL DAY LONG
PROTECTIVE • SOOTHING • FRAGRANT
Godrej
NEW CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
இப்பொழுது
புதிய பேக்கில்
CHAITRA-B-G-4031 TAM
கோத்ரெஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் — நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்



கடற்கரையில் குண்டு—

அருண்குமாரின் அனுபவம்

சென்னை மெரினா கடற்கரை. சீரணி அரங்கில் கலைஞர் சுவாரசியமாக உரையாற்றிக் கொண்டிருக்கும் நேரம். சற்றுத் தூரத்தில் திடீரென்று ஒரு குண்டு வெடித்துப் பெரும் பரபரப்பை உண்டாக்கி விடுகிறது. ஒரு படகு தூள் தூளாகச் சிதறி விட்டிருக்கிறது.

அந்த இடத்தில் யார் குண்டு வைத்திருப்பார்கள். எதற்காக என்றெல்லாம் ஒருபுறம் எல்லோரும் அலசிக் கொண்டிருக்க— அருண் குமார் என்னும் பதினொரு வயதுச் சிறுவன் இந்தச் சம்பவத்தால் அதிகமாகவே பாதிக்கப்பட்டு தன் அப்பாவை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். புகைப்படக்காரர் திரு சுபா சுந்தரத்தின் மகன் அருண் குமார்.

நிகழ்ச்சியை வீடியோவில் பதிவு செய்ய சுபா சுந்தரம் அழைக்கப்பட்டிருந்தார்.

கடற்கரைக் கூட்டத்துக்கு அவர் கிளம்பிய போது, கூடவே அவருடைய பையன் அருண் குமாரும் ஒட்டிக் கொண்டு கிளம்பினான்.

இரவு ஒன்பதே முக்கால் மணி — மேடையில் சுபா சுந்தரம் மும்முரமாக வீடியோ எடுப்பதில் ஈடுபட்டிருக்கும்போது, அருண் குமாருக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. அப்பாவை நச்சரிக்க ஆரம்பித்தான். சுபா தம் உதவியாளர் ஒருவருடன் பையனை அனுப்பி ஏதாவது சாப்பிட்டுவிட்டு வரச் சொன்னார்.

ராமச்சந்திரன் என்கிற உதவியாளருடன் (20 வயதுக்கு உட்பட்டவர்) குஷியாகக் கிளம்பினான் அருண் குமார். சுற்று வட்டாரத்தில் விற்றுக் கொண்டிருந்த சிப்ஸ் வகையறுக்களை வாங்கி அடுக்கிக் கொண்டு ராமச்சந்திரனும் அருண் குமாரும் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது ஒரு விஷயம் அவர்கள் கண்ணில் பட்டது. நின்றுவிட்டார்கள்.

சற்றுத் தள்ளி ஒரு சூட் கேஸ், வெள்ளைத் துண்டால் மூடப்பட்டிருந்தது. அது என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள இரண்டு பேருக்கும் ஆர்வம் அதிகமானது. புதையலா? கள்ளக் கடத்தல் சமாசாரமா? கிட்டப் போய்ப் பார்க்க ஆசை இருந்தாலும் பயம் தடுத்தது. பெட்டியைப் பார்த்தபடியே

இரண்டு பேரும் ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீடியோவை இயக்கிக்கொண்டிருந்த சுபா சுந்தரம் கடிகாரத்தைப் பார்க்கிறார். 'பையன் ஏதோ சாப்பிட்டுவிட்டு வரேன்னு போனான். இன்னும் காணுமே' என்று சின்ன அச்சம் ஏற்பட அருண் குமாரைத் தேடி அழைத்து வர தம்முடைய இன்னொரு உதவியாளரை அனுப்புகிறார்.

"இங்கேஎன்னடா பண்றேடாய்!" என்று அதட்டலான ஒரு குரல் சற்றுத் தூரத்திலிருந்து கேட்க, அருண் குமார் திரும்பிப் பார்த்தபோது தன் அப்பாவின் இன்னொரு உதவியாளர் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அருண் குமாரை மிரட்டுவதற்காக உதவியாளர் கோபக் குரல் கொடுத்தது, உண்மையிலேயே யாருக்கோ பயத்தை உண்டாக்கிவிட்டது!

இவர்கள் திரும்பி மறுபடியும் பெட்டி இருந்த பக்கத்தைப் பார்க்கும்போது —

பெட்டி அங்கே இல்லை! ஆனால் சற்றுத் தூரத்தில் ஓர் ஆசாமி பெட்டியுடன் ஓடுவது தெரிந்தது. இப்போது மூன்று பேரும் அவனைத் துரத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தார்கள்.

ஒரு படகுக்குப் பின்னால் அந்த ஆசாமி மறைந்துவிட்டான். திரும்பி வந்து சுபா சுந்தரத்திடம் அருண் குமார் விவரம் கூற,

"யாரிட்டயாவது சொல்ல வேண்டியது தானே! நீ ஏன் பின்னாலேயே ஓடணும்?" என்று மகனை சுபா கண்டித்துக் கொண்டிருக்கும்போதுதான் அந்தக் குண்டு வெடித்தது!

இந்த விவரங்களைக் கூறிவிட்டு, சுபா சுந்தரம் தொடர்ந்து சொன்னார்:

"பெட்டியைப் பையன் முதலில் பார்த்ததாகச் சொன்ன இடத்திலேயே அது இருந்திருக்குமானால் மிகச் சமீபத்தில் குண்டு வெடித்துப் பெரிய அளவிலேயே சேதம் ஏற்பட்டிருக்கும். இவர்கள் துரத்திக் கொண்டு போனதால் குண்டு சற்றுத் தள்ளிப் போய் வெடித்திருக்கிறது. இந்தச் சம்பவம் அருண் மனத்தில் ஒரு ஆழமான பாதிப்பை உண்டாக்கிவிட்டது. அன்று இரவு முழுவதும் விழித்துக் கொண்டு பயந்தபடி உட்கார்ந்திருந்தான். எதுவுமே சாப்பிடவில்லை: அவனுக்கு விபரீதமாக ஏதும் ஆகிவிடக் கூடாது என்பதால் நிறையத் தைரியம் சொல்லி என் கூடவே சில நாட்களாக ஆபீஸில் வைத்துக் கொண்டிருக்கிறேன்!"

நிகழ்ச்சியில் எடுத்த வீடியோவைப் போட்டுக் காட்டினார் சுந்தரம். கலைஞர் பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு வெடி சத்தம்—அந்தச் சத்தத்தில் வீடியோவில் அசைவு ஏற்பட்டது திரையில் தெரிந்தது!

—ராமசாமி

புகைப்படம்: நன்றி 'குங்குமம்'

'தங்கமான' செய்திகள் சில:

1. ஆதாம் ஏவாள் காலத்திற்கு முன்னமேயே தங்கம் தோன்றிவிட்டதாக பைபிள் கூறுகிறது.

2. ஓர் அவுன்ஸ் தங்கத்தை 100 சதுர அடிக்குத் தகடாக மாற்ற இயலும். 50 மைல் நீளத்திற்கு அதைக் கம்பியாக நீட்ட இயலும்.

3. முதல் முதலாகத் தங்க நாணயம் வெளியிட்ட அரசன் கோரிஸஸ் என்பவன். இவன் லிடியா நாட்டு அரசன். இது தற்பொழுது மேற்குத் துருக்கியில் உள்ளது. வெளியிட்ட வருடம் கிறிஸ்து பிறப்பதற்கு 550 ஆண்டுகளுக்கு முன்னர்!

4. அமெரிக்க அரசின் தங்கம் கென்ட்டக்கி மாநிலம் நாக்ஸ் கோட்டையில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது. அதன் எடை 147 மிலியன் அவுன்ஸ்கள்.

5. அமெரிக்காவின் மொத்தத் தங்க உடைமையினை டாலர்களில் கூறுவதென்றால் அவற்றின் மதிப்பு 11,652 பில்லியன் டாலர்கள். (பில்லியன் என்பது அமெரிக்காவில் ஆயிரம் மில்லியன்) இந்த மதிப்பு 1973 ஆம் ஆண்டின் தங்க விலையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அதன் பிறகு 4 மடங்கு தங்கத்தின் விலை உயர்ந்துள்ளது. எனவே இன்றைய மதிப்பை நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

6. உலகிலேயே மிக அதிகமான தங்கம் உற்பத்தி செய்யும் நாடு தென் ஆப்பிரிக்கா.

7. 'புல்லியன்' என்று கூறப்படும் தங்கம் கலப்படமற்றது: தூய்மையானது.

— ஜி. சீனிவாசன்.



ரோஹன் கவாஸ்கர்



சுனில் காவஸ்கர் — மார்ஷனீல் இவர்களின் ஒரே பையன் பெயர் ரோஹன்.

ஃபுட் பால், ஹாக்கி, டென்னிஸ் தவிர கிரிக்கெட்டும் ஆடுகிறான். கிரிக்கெட்டில் ஆல் ரவுண்டராக வேண்டும் என்று ஆசை.

வாரத்துக்கு முப்பத்தைந்து ரூபாய் பாக்கெட் மணி தருகிறார்கள். பள்ளிக்கூட கான்டீனில் லஞ்ச் சாப்பிடவும் காமிக்ஸ் வாங்கவும் செலவழிக்கிறான்.

அப்பா, பௌலராக இல்லையே என்பதில் இவனுக்கு வருத்தம்.

நாய்க் குட்டி (புல் டாக் இனம்) வாங்கித் தரச் சொல்லி அப்பாவை நச்சரித்தாலும், அப்பாவுக்கு நாய்கள் என்றால் பயம். மறுத்து விடுகிறார்.

ரோஹன் பயப்படுவது திருடர்களுக்கும், பேய், பூதத்துக்கும்தான்.

அம்மா பிடிக்குமா? அப்பா பிடிக்குமா? இரண்டு பேரையும் விட பாட்டி மேல்தான் கொள்ளை ஆசை!



இன்னொரு குழந்தை கண்டிப்பாய் வேண்டாம் என்பது தான் ரோஹனின் அப்பா அம்மாவின் தீர்மானம். ('ஒரு வேளை முதலாவது பெண்ணாய்ப் பிறந்திருந்தால் கிரிக்கெட்டில் அப்பா போல வர இன்னொரு பிள்ளைக்கு ஆசைப் பட்டிருப்பேனோ என்னவோ' என்கிறார் மார்ஷனீல்.)

ரோஹன் சிசேரியன் கேஸ். இரண்டாவது குழந்தை வேண்டாமென்ற முடிவுக்கு மார்ஷனீலின் பலவீன உடல் நிலையும் முக்கிய காரணம்.



மார்ஷனீலுக்கு ரோஹன் பிறந்தபோது காவஸ்கர் இருந்தது நியூஸிலாந்தில். போன் பண்ணினால் டீம் மானேஜரான உம்ரீகர்தான் பேசினார். காவஸ்கர் முகவாய்க்கட்டையில் அடிபட்டு, ஆக்லாந்த் நகரிலேயே தங்கிவிட்டார். டீம் இருந்ததோ கிரைஸ்ட் சர்ச் நகரில். உம்ரீகர் காவஸ்கருக்கு போனில் விஷயத்தைச் சொன்னபோது, "என்ன குழந்தை ஆணா? பெண்ணா?" என்று காவஸ்கர் கேட்டார். உம்ரீகர், "ஐயோ! சொன்னார்கள். சட்டென ஞாபகம் இல்லையே!" என்று சொல்ல, அப்புறம் மூணு நாட்கள்வரை காவஸ்கருக்கு பம்பாய் டெலிபோன் தொடர்பு எவ்வளவு முயன்றும் கிடைக்கவில்லை. மூணு நாள் வரை பயங்கர சஸ்பென்ஸ்!

— பிரியங்கா

நன்றி: சவ்வி







பதின்மூன்று வாரங்கள் டீ.வி.யில் தொடர்ந்து ஒளிபரப்பாகி லட்சக்கணக்கான வர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த வண்ணக் கோலங்கள் முடிந்தவுடன் எஸ்.வி. சேகர் குழுவில் விரிசல் ஏற்பட்டுச் சில மனக் கசப்பளிக்கும் சம்பவங்கள் நடந்திருக்கின் றன. வண்ணக் கோலங்களுக்குக் கதை—வசனம் எழுதி இசை அமைத்தவர்கள் இரட்டையர்களான கோபு—பாபு. தயாரித்த வர்கள் அரவிந்த் அஸோஸியேட்ஸ். இந்த நிறுவனத்தை நடத்துபவர் எஸ்.வி. சேகரின் அப்பா. நடந்தது என்ன? பாபு சொல்கிறார்:

வண்ணக்கோலங்கள்



• வண்ணக்கோலம் உருவாகிறது

EPISODE ONE

மே 19, வண்ணக் கோலங்களின் கடைசி நிகழ்ச்சியை எடிட் செய்துவிட்டு வீட்டுக்கு வருகிறார் எஸ்.வி. சேகர். அங்கு பாபுவைச் சந்திக்கிறார். அப்போது ஒரு பேப்பரை நீட்டு கிறார். "இதில் கையெழுத்துப் போட்டுக் கொடு" என்கிறார். படித்துப் பார்த்த பாபுவுக்குப் பகீரென்றிருக்கிறது.

EPISODE TWO

வண்ணக் கோலங்களை வீடியோ கேசட்டி லும், ஆடியோ கேசட்டிலும், இந்தியாவின் எல்லா டீ.வி. நிலையங்களிலும், மலேசியா, இலங்கை போன்ற பிறநாட்டு டீ.வி. நிலையங் களிலும், வேறு மொழிகளிலும் சினிமாவாக வும் மற்றும் சகலவிதமாகவும் உபயோகித்துக் கொள்ளச் சர்வதேச உரிமைகளை அரவிந்த் அஸோஸியேட்ஸுக்குத் தாரை வார்த்துக் கொடுத்திடும் வண்ணம் எழுதப்பட்டிருந்த அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட பாபு மறுக்கிறார்.

EPISODF THREE

"நீ கொடுத்ததே பத்தாயிரம் ரூபாய் தானே, இதற்குச் சகல உரிமைகளையும் கேட் கிறாயே, இது சரியா?" என்று பாபு கேட்க, "உனக்கு எது சரியில்லையோ, அதை அடித்து விட்டுக் கையெழுத்துப் போடு" என்கிறார் சேகர். "அப்படியென்றால் எல்லாவற்றையும் அடித்துவிட்டுப் புதிதாக எழுத வேண்டியது தான்" என்று பாபு சொன்னவுடன் சேகரின் முகபாவம் மாறுகிறது.

EPISODE FOUR

"நீ கையெழுத்துப் போட்டுக் கொடு; பணம் வேண்டுமானால் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்" என்று சேகர் சொல்கிறார். ஆனால் பாபுவோ, "கையெழுத்துப் போட்ட பிறகு எப்படி பேச முடியும்?" என்று கூறி மறுக்கிறார். இதில் வேடிக்கையும் வேதனையு மான இன்னொரு விஷயம் என்னவென்றால்

சேகர் நீட்டிய ஒப்பந்தத்தில் இதுவரை எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரமே குறிப்பிடப்படவில்லை. தொகையேகுறிப்பிடாமல்தான்ஏற்கெனவே கொடுத்துள்ள 'தொகை' மேலே குறிப்பிட்ட சகல உரிமைகளுக்கும் ஈடாகிவிட்டதாக எழுதப்பட்டிருந்தது!

EPISODE FIVE

இருவருக்கும் பொதுவான நண்பர்கள் வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் கோபு—பாபுவிடம் ''நீ கையெழுத்துப் போட்டுக் கொடுத்திடறதுதானேடா'' என்று சொல்கிறார்களே தவிர, நியாயத்தைப் பேச மாட்டேனென்கிறார்கள்.

EPISODE SIX

கடைசி நிகழ்ச்சி டி.வி.யில் ஒளிபரப்பானது ஜூன் 1ம் தேதி. இதற்கு இரண்டு நாட்களுக்கு முன் டி.வி. நிலையத்தினரிடம், ''நான் கொடுத்த வீடியோ டேப்பைக் கொஞ்சம் கொடுங்கள்'' என்று கேட்டுப் பார்த்திருக்கிறார் சேகர். ''முடியாது'' என்று மறுத்துவிட்டார்கள், டி.வி. நிலையத்தினர். கடைசி நிகழ்ச்சியின்போது கோபு—பாபு என்ற பெயர் டி.வி. திரையில் இடம் பெறுமல் அழித்துவிட சேகர் நினைத்தது பலிக்கவில்லை.

EPISODE SEVEN

''நாம்தான் படைப்பாளர்கள்'' என்பது மக்களுக்குத் தெரியட்டும் என்ற எண்ணத்தில், ''நாங்கள்தான் படைப்பாளர்கள்; எங்களுக்கு உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்'' என்று கோபுவும் பாபுவும் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கிறார்கள்.

EPISODE EIGHT

இவர்களது பத்திரிகை விளம்பரம் வரப் போகிறது என்று தெரிந்தோ தெரியாமலோ

..விசாரமாகிறது



• சேகரின் தோள் மீது தோழமையுடன் கைபோட்டிருப்பவர் பாபு.

அதேமுதல் தேதியன்று அரவிந்த் அஸோஸியேட்ஸ், பத்திரிகை விளம்பரம் மூலமாக வண்ணக் கோலங்களின் தயாரிப்பாளர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அபிப்ராயங்களைத் தெரிவிக்குமாறு ரசிகர்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். இந்தப் பதின்மூன்றாவது நிகழ்ச்சியைப் பலவிதங்களில் எஸ்.வி. சேகரே உருவாக்கியதாக அந்த விளம்பரம் கூறுகிறது.

EPISODE NINE

''வண்ணக் கோலங்களின் சகல உரிமைகளும் அரவிந்த் அஸோஸியேட்ஸ் கையில் தான் இருக்கிறது!'' என்று பத்திரிகை விளம்பரம் வெளியாகிறது.

தவளைகளின் வெற்றி

மேற்கு ஜெர்மனியில் நடந்த விநோதமான வழக்கு இது!

ஒரு குட்டையில் தவளைகள் ஏழு கட்டை சுருதியில் காதைப் பிளக்க வைத்துக் கொண்டிருந்தன.

அருகில் ஒரு வீட்டில் வசித்து வந்த இளம் தம்பதியினருக்கு இந்தக் காட்டுக் கத்தல் இம்சையாகவும், தூக்கத்துக்கு இடையூறாகவும் இருந்தது. உடனே தவளைகளின் மீது வழக்குப் போட்டு விட்டார்கள்.

தம்பதியினருக்குக் கீழ்க் கோர்ட்டு சாதகமான தீர்ப்பை வழங்கினாலும், தவளைகள் சார்பில் மேல் கோர்ட்டுக்குப் பிராணி மித்திரர்கள் போனார்கள்.

அங்கே நீதிபதிகள், 'தவளைகளின் இயற்கை நியதி இது. இதற்காக அவற்றை அழிப்பது கூடாது. இதைப் பெரிய பாதிப்பாகக் கருதுவதற்கில்லை' என்று கூறிவிட்டனர்.

வழக்கில் வெற்றிபெற்ற தவளைகள் கோஷ்டி அமர்க்களமாகத் தொடர்ந்து கச்சேரி நடத்திக் கொண்டிருக்கிறது!

நன்றி: ஹிந்து

தகவல்: ஆர். அரிகோபி.



EPISODE TEN

''எல்லாவிதமான உரிமைகளும் எங்களிடம்தான் இருக்கின்றன'' என்று கோபுவும் பாபுவும் பதில் விளம்பரம் கொடுக்கின்றனர்.

ஒரு FLASH BACK

கோபுவும் பாபுவும் 'காட்டுல மழை', 'ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி', 'வால் பையன்' ஆகிய மேடை நாடகங்களை சேகருக்காக எழுதிக் கொடுத்தவர்கள்.

ஏற்கெனவே தமக்கு நாடகம் எழுதிக் கொடுத்த கிரேஸி மோகன், ஜி.கே., போன்றோரை விரோதித்துக் கொண்டு பிரிந்தவர் தான் சேகர். (இப்போது ஜி.கே. மறுபடி சேகருடன் தோழமை கொண்டாடுகிறார் என்பது வேறு விஷயம்.)

* * * * *

கோபு—பாபுவிடம் ''எஸ்.வி. சேகரால் நீங்கள் பயனடைந்துள்ளதை மறுக்க முடியுமா?'' என்று கேட்டபோது அவர்கள் கூறியது:

''ஸார்! எங்களை அறிமுகப்படுத்தியது, புகழ் வாங்கிக் கொடுத்தது எஸ்.வி. சேகர் தான். அதை நாங்கள் மறுக்கவில்லை. எங்கள் கதை—வசனத்தால் மட்டுமே வண்ணக் கோலங்கள் பிரபலமடைந்தது என்று கூறவும் நாங்கள் தயாராக இல்லை. டீம் வொர்க் தான் வெற்றிக்குக் காரணம். சேகரின் நடிப்புத்திறனும் முக்கிய காரணம்தான். ஆனால் அதற்கென்று கதை—வசனம் எழுதிக் கொடுத்தஎங்களை அவரதுசுயநலத்துக்காகப் பயன்படுத்தி (exploit)க் கொள்ள அனுமதிக்க முடியாது. எழுத்தாளனின் உரிமைகளை மதிக்காததோடு பறித்துக் கொள்ளவும் முயலும் சேகரைப் பார்த்தால் எங்களுக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஒரு நல்ல நண்பன் இவ்வாறு செயல்படுகிறானே என்று வருத்தமாகவும் இருக்கிறது. ஒன்று கேட்கிறோம்: எஸ்.வி. சேகர் எழுத்தாளராக இருந்து, நாங்கள் தயாரிப்பாளராக இருந்து, இத்தனை உரிமைகளை எங்களுக்கு விட்டுக் கொடுக்குமாறு நாங்கள் கேட்டால் அவர் அதற்குச் சம்மதிப்பாரா? இன்னொன்று: இத்தனை உரிமைகளைப் பட்டியலிட்டு, 'இவற்றை விட்டுக்கொடுங்கள்' என்றுஎங்களை எஸ்.வி. சேகர் கேட்கும்போதே எழுத்தாளருக்கு இத்தனை உரிமைகள் உள்ளன என்பதை ஒப்புக் கொண்டவராகவும் ஆகிறார் அல்லவா?''

பாபு நம்மிடம் கூறியவற்றின் அடிப்படையிலும் அவற்றில் உள்ளடங்கியிருப்பதாக நமக்குத் தோன்றிய தார்மீகப் பிரச்னைகளின் அடிப்படையிலும் சேகரின் அப்பாவும் அரவிந்த் அஸோஸியேட்ஸ் உரிமையாளருமான திரு எஸ்.வி. வெங்கடராமனைச் சந்தித்தோம். அவர் கூறினார்:

எழுத்தாளர்களின் உரிமைகளைக் காக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பது பற்றி சந்தோஷம். எனக்கும் அந்த எண்ணம் நிறையவே உண்டு. ஆனால் உண்மைகளுக்கும் நீங்கள் மதிப்புக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் பேசுகிறேன்.

உண்மை 1: வண்ணக் கோலங்கள் அத்தியாயங்களை முழுக்க முழுக்க பாபு—கோபுவே எழுதினார்கள் என்று சொல்ல முடியாது. பல எபிஸோட்களுக்கு ஐடியா கொடுத்தது எஸ்.வி. சேகர். அவையும் சேகரின் சொந்த ஐடியாக்கள் என்று கூற முடியாது. பல்வேறு சந்தர்ப்பங்களில் சேகர் பார்த்த அல்லது படித்த காட்சிகள் மனத்தில் உறைந்து போயிருக்க அவற்றில் சிலவற்றை அவ்வப்போது கூறி எழுதச் சொல்லியிருக்கிறான்.

உண்மை 2: வண்ணக் கோலங்களுக்காக பாபு எழுதிக்கொண்டுவந்த சில அத்தியாயங்களை நான் நிராகரித்துக் கூட இருக்கிறேன். 'பிரும்மா எழுதியதே சில சமயங்களில் சரியாக அமைவதில்லையே' என்று பாபுவுக்காகப் பரிந்து பேசி சேகர் கதை வசனங்களைத் திருத்தி அமைத்ததும் உண்டு. இந்தக் காரணங்களால் பாபு இதற்குப் பூரண காப்பி ரைட் உரிமை கோர முடியாது.

உண்மை 3: சேகர் சொன்ன சில ஐடியாக்களின் அடிப்படையில் கதை வசனத்தை நகைச்சுவை உணர்வுள்ள எந்த ஒரு நல்ல எழுத்தாளனும் எழுதலாம். ஆனால் பாபுவையே நாங்கள் முழுக்க முழுக்க எழுதச் சொன்னது அவன் மீது சேகருக்குள்ள அபிமானத்தினால்தான். இந்தப் பாசம் எப்படி ஏற்பட்டது? திருவண்ணாமலைக்கு ஒருசமயம் சேகருடன் பாபு சென்று வந்தபோது கார் விபத்துக்குள்ளாகி பாபு காலில் பலத்த அடி பட்டுவிட்டது. கார் ஓட்டியது சேகர் அல்ல என்றாலும் அப்போது முதல் தன்னால்தான் பாபுவுக்கு அடிபட்டுவிட்டது என்று சேகருக்கு ஒரு தவிப்பு. அதனால் தனக்கு வந்த இன்ஷூரன்ஸ் பணத்தின் ஒரு பகுதியைக்கூட பாபுவுக்குக் கொடுத்தான். வேறு பல தருணங்களில் பலவிதமாக உதவி வந்திருக்கிறான். பேசிய தொகைக்கு மேலேயே கொடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

உண்மை 4: பாபு பத்தாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டுள்ளதாக உங்களிடம் ஒப்புக் கொண்டிருக்கிறான். ஆனால் பொதுவாக இம்மாதிரி டி.வி. நாடகங்களுக்கு எழுத்தாளருக்குத் தரப்படும் ஊதியம் சராசரி ரூ 200 முதல் 250 வரைதான். நாலு மடங்கு அதிகமாக நாம் வாங்கியிருக்கிறோமே எதற்கு என்று பாபு யோசித்திருக்க வேண்டும். யோசிக்க அவசியமின்றி சேகர் அவனிடம் சொல்லியும் இருக்கிறான், 'எல்லா உரிமைகளுக்காகவும் சேர்த்துத்தான் தருகிறோம்' என்று.

உண்மை 5: நான் செய்த ஒரே பிசகு ஒப்பந்தம் என்று முன்கூட்டியே போட்டுக் கொள்ளாததுதான். ஏன் போட்டுக் கொள்ளவில்லை என்றால் பாபு என் இன்னொரு பிள்ளை மாதிரி, சேகரின் சகோதரன் மாதிரி வீட்டிலே கருதப்பட்டு வந்ததுதான். 'என்ன அவசரம்? அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்' என்று அலட்சியமாக இருந்துவிட்டேன்.

உண்மை 6: பாபுவிடம் இதற்காகக் காப்பி ரைட் உரிமை பற்றி இப்போது மட்டும் கையெழுத்து வாங்க அவசியம் நேர்ந்தது என்றால், நாங்கள் எந்த நிறுவனத்துக்காக இந்த நாடகத்தை டி.வி.யில் ஒளிபரப்புகிறோமோ அவர்கள் காப்பி ரைட் பிரச்னை ஏதும் எழாமல் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். நான் என்னைப் பாதுகாத்துக் கொள்ளாமல் அவர்களுக்கு எப்படி பாதுகாப்புத் தரமுடியும்? எனவே, 'கையெழுத்தே போட மாட்டேன்' என்று பாபு கூறுவது முறையல்ல.

உண்மை 7: எல்லா உரிமைகளையும்விட்டுக் கொடுத்துக் கையெழுத்துப் போடுமாறு எஸ்.வி. சேகர் தன்னிடம் டைப் செய்த தாளை நீட்டியதாகப் பாபு சொல்கிறான். அவனுக்கு அது பிடிக்கவில்லை என்றே வைத்துக்கொள்வோம். அவன் என்ன செய்திருக்க வேண்டும்? என்னிடம் நேரில் வந்து பேசியிருக்க வேண்டும். ஏனென்றால் நான்தான் நிறுவனத்தின் உரிமையாளன்; சேகர் அல்ல. பாபுவுக்குப் பணம் தந்து வந்தது நான்தான். அவன் நேரே என்னிடம் வந்திருந்தால் விஷயங்களை உணர்த்தியிருப்பேன்; மனக் கசப்பு ஏற்பட்டிராது.

உண்மை 8: ஆனால் பாபு என்ன செய்தான்? என்னிடம் வராமல் (நான் ஊரில் இல்லை என்றால் திரும்பி வரக் காத்திராமல்) பத்திரிகையாளரிடம் போய்விட்டான். பல பத்திரிகைகளில் தரக்குறைவான முறையில் அருவருப்பான வார்த்தைகளில் உண்மைக்குப் புறம்பான விஷயங்கள் வெளியாகியுள்ளன.

உண்மை 9: இதனால் நான் மனமுடைந்து போயிருக்கிறேன். என் பிள்ளை பாபு எனக்குத் துரோகம் செய்து முதுகில் குத்திவிட்டது போல் உணர்கிறேன்.

* * * * *

பாபு கூறுவதிலிருந்தும் அதற்குப் பதில் சொல்லுமுகமாக திரு வேங்கடராமன் கூறுவதிலிருந்தும் அடிப்படையில் இது எல்லாமே ஒரு கௌரவப் பிரச்னை என்பதாக நமக்குத் தோன்றுகிறது. ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இடைவெளி ஏற்பட்டுப் போயிருக்கிறது. ஏதேனும் ஒரு தரப்பில் கௌரவத்தை விட்டுக் கொடுத்து இலேசாகக் கைநீட்டிவிட்டால் போதும், அடுத்த கணம் ரத்த பாசக் காட்சியொன்றை நாம் காணக் கூடும்!

— ப்ரியன்


புகைப்படங்கள்: ஏ.வி. பாஸ்கர்

ஒருவன்: பெண்ணோட அப்பா பசையுள்ள இடம்னு கேட்டுக் கலியாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு.

மற்றவன்: ஏன்?

ஒருவன்: அவர் கோந்து தயாரிக்கிறாராம்; மற்றபடி சொத்து, பணம் ஒண்ணும் கிடையாதாம்!

— என். ஜி. நடராஜன்




நீதியின் தீர்ப்புக்குத் தலை வணங்கி பதவி
துறக்கும் தியாகி பங்காரப்பா வாழ்க!
பதவியில் ஒட்டிக் கொண்ட ஹெக்டே
ஒழிக!..
நேரம் காலம் தெரியாம இங்க வந்து நீங்க மூச்சி காமிச்சுக்கிட்டு..
அர்ஜுன் சிங்
இ.காங்கிரஸ்
அப்பாடா!
மேலவை ஒழிப்புக்கு மறைமுக ஆதரவு
இ.காங்கிரஸ்
ஆஹா, என்ன சுகம்!
ராஜ்ய சபைத் தேர்தலில் ஆதரவு
பாதல் கோஷ்டி
22 எம்.எல்.ஏக்கள்
பதவி இழக்கும் நடவடிக்கை
பர்னாலா
பாதல்



கல்கி

1986 ஜூன் 22
மலர் 44 இதழ் 47
அக்ஷய ஆனி 8



ஐயோ பாவம், வேங்கடராமய்யா!

பஞ்சாப் ஹரியானாவுக்கிடையே மத்யஸ்தம் செய்து வைக்கத் தனி நபர் கமிஷனாக நியமிக்கப்பட்ட நீதிபதி வேங்கடராமைய்யா, "நாட்டில் இனிமேல் மொழி அல்லது மதத்தின் அடிப்படையில் எந்தப் பிரிவினையும் இருக்கக் கூடாது" என்று கூறியிருப்பதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது! "குறிப்பிட்ட ஒரு மொழி அதிகமாகப் பேசப்படும் சில சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பு இன்னொரு மாநிலத்தில் இருந்தால் என்ன? அது இந்தியாவில் தானே இருக்கிறது? அதை நாம் இழந்துவிடவில்லையே?" என்று அவர் மேலும் சொல்லியிருப்பதைப் பார்த்தால் 'த்சொ, த்சொ! ஐயோ பாவம்!" என்று அவருக்காக அனுதாபப் படத்தான் வேண்டியிருக்கிறது.

வேங்கடராமைய்யா கூறியிருப்பது மிக உன்னதமான மனப் பக்குவத்தை வளர்த்துக் கொண்டுவிட்ட மனிதர்களுக்கே சாத்தியம். சாமானியருக்கு இதெல்லாம் புரியாது. சராசரி மனிதன் தன் குடும்பம், தன் வீடு என்று தொடங்கி, தன் சொந்த ஊர், தன் மாவட்டம், தன் மாநிலம் என்று படிப்படியாகத்தான் மனம் விசாலப்பட்டு பிறகுதான் தேசம் என்ற உணர்வை அடைவான். இதற்குப் பிற்பாடுதான் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற சர்வதேச மனப்பான்மையை அவன் அடைய வேண்டும். தாய்க்கு அடுத்தபடியாக அவன் தாய்மொழியைத்தான் எண்ணுவான். தாய்மொழிக்கு ஆபத்து என்றால் பெற்ற தாய்க்குத் தீங்கு இழைக்கப்பட்டது போல் துடிப்பான். வேங்கடராமைய்யா கூறுகிற மனப்பக்குவம் எல்லோருக்கும் இருக்குமானால் ஈழத் தமிழர் படும் அவதி காஷ்மீர மக்களைத் துடித்தெழச் செய்திருக்க வேண்டுமே! இந்தியன் என்ற உணர்வு இவ்விஷயத்தில் செயல்படவில்லையே!

'ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு' என்று கூறிக் கொண்டே நம் தலைவர்கள் பாரத ஒருமைப்பாடுக்கு விரோதமான காரியங்களையே செய்து வந்திருக்கிறார்கள். மொழிவாரி மாநிலங்களைப் பிரித்தார்கள். ஒரு மொழிக்கு மட்டும் தனி உயர் அந்தஸ்து அளித்து அதனைத் தேசிய மொழி ஆட்சி மொழி என்று மற்றவர்கள் மேல் திணித்தார்கள். இந்தச் செயலுக்கு எதிர்ச் செயலாக மாநிலங்களில் மாநில மொழி வெறி அதிகமானதில் வியப்பில்லை. இரு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் எல்லைப் பிரதேசங்களில் மொழிப் பிரச்னையும் மனப் புகைச்சலும் தோன்றுவதில் அதிசயமில்லை. அரசியல்வாதிகள் தூண்டி விடுவதாகப் புகார் செய்து பிரயோஜனமென்ன? ஜனநாயகம் என்று இருக்கும்வரை அரசியல்வாதியும் இருப்பான். எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்பது போல் ஒரு பிரச்னையைத் தூண்டிவிட்டுத் தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் பார்ப்பான்.

தமிழ்நாடு—கேரளா எல்லைத் தகராறு இன்றும் இருக்கிறது. ஆந்திராவுக்குத் தமிழ் நாடு திருப்பதியைவிட்டுக்கொடுத்துவிட்ட ஆதங்கம் இன்றும் நமக்கு உண்டு. கர்நாடகா—மகாராஷ்டிரா எல்லைத் தகராறும் மொழிக் கலவரமும் சமீபத்தில் மூண்டெழுந்து இன்னும் முற்றிலும் அணையாமல் கனன்று கொண்டிருக்கிறது.

இவையெல்லாம் இல்லாதிருக்க வேண்டுமானால் அமெரிக்கா போல் நேர்கோடுகளைக் குறுக்கும் நெடுக்கும் இழுத்து மாநிலங்களைப் பிரித்திருக்க வேண்டும். மதச் சார்பின்மை என்பதற்கு மதங்களைப் புறக்கணித்தல் என்று அர்த்தம் செய்யாமல் எம்மதமும் சம்மதம் என்று புரிந்து கொண்டிருக்க வேண்டும். இரு மொழி திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். செய்தார்களா? இல்லையே? ஏதோ லட்சியக் கனவுகளைக் கண்டு கொண்டு மக்களின் உணர்ச்சிகளைப் புறக்கணித்தார்கள்; இன்றும் புறக்கணித்து வருகிறார்கள். விளைவுகளைச் சந்தித்துத்தானே ஆக வேண்டும்?

வேங்கடராமய்யா கூறியிருப்பது லட்சிய நோக்கு. அது கறிக்கு உதவாது. பிடிவாதங்களை ஒதுக்கி யதார்த்த நோக்கில் மக்களின் உணர்ச்சிகளை மதித்து நடந்து கொள்கிற தலைமைதான் நாட்டில் அமைதியை நிலைநிறுத்த முடியும். அத்தகைய தீர்க்க தரிசிகள் ஆளும்போது புகையவே செய்யாது எனில் நெருப்பு ஏது? எனவே அதைப் பெட்ரோல் ஊற்றி வளர்ப்பதும் சந்தர்ப்பவாதிகளுக்குச் சாத்தியமாயிராது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

மேலட்டையில் ஒரு மாடல்:

"நாங்களும் நடிகைகள் மாதிரிதான்!"

விளம்பரங்களுக்கு மாடலாக விளங்குவது என்பது ஓர் அரிய கலையாக வளர்ந்துவிட்டிருக்கிறது. அதுவும் டி.வி.யில் விளம்பரங்களுக்கு மாடல்கள் நிறையவே தேவைப்படுகின்றனர்.

பி.ஏ. சோஷியாலஜி படித்துவிட்டு மாடலாகப் பிரகாசிக்கிறார் அட்டைப் படத்தில் நாம் பார்க்கும் ஜீவா.

"அதிக அளவில் புடைவை, சோப்பு விளம்பரங்களுக்கு மாடலாகப் பணி புரிந்திருக்கிறேன்; நாங்களும் நடிகைகள் மாதிரிதான்" என்கிறார் ஜீவா.

அது எப்படி?

"கண்கள் சிரிக்கப் பழக வேண்டும். அதில் ஒரு பிரகாசம் தெரிய வேண்டும். விளம்பரப் பொருளின் தன்மையை எங்கள் முகபாவத்தால் உணர்த்த வேண்டும். நடிப்பு எவ்வளவு சிரமமோ அந்த அளவுக்கு இதுவும் கஷ்டம் தான்."

பணம்?

"அதை ஏன் கேட்கிறீர்கள்?" என்கிறார் ஜீவா. "பல நிறுவனங்கள் இழுத்தடிக்கின்றன. உடனுக்குடன் பேசிய தொகையைக் கொடுத்து கணக்குத் தீர்ப்பவர்கள் சொற்பப் பேர்தான்!"

வேறு மனக் கசப்பு?

"அனுராதா மாதிரி கவர்ச்சி உடை அணிந்து மாடலிங் செய்யச் சொல்லிக் கேட்கும் நிறுவனங்களும் உண்டு. நான் ஒப்புக் கொள்வதில்லை."

அனுபவம்?

"ஒருமுறை என்னுடன் சேர்ந்து ஒரு விளம்பரத்துக்காகப் போஸ் கொடுக்க ஓர் ஆண் மாடல் தேவைப்பட்டார். டி.ஷர்ட் அணிந்து என்னுடன் ஜோடியாக நடித்தார். அந்த நடிப்பு நிஜமாயிற்று. கிறிஸ்துவப் பெண்ணாகிய நானும் பிராமணராகிய அவரும் வாழ்க்கையிலும் ஜோடியானோம்!"

பிரச்னை?

"நான் அதிர்ஷ்டசாலி. எனக்குப் பக்க பலமாக இருந்து ஊக்கமளிக்கிறார், கணவர் சுரேஷ். என் மாமியாரும் சொந்த தாய் போல ஆதரவு தருகிறார்."



கணவர் சுரேஷ்



மாடல் ஜீவா

சுரேஷ்?

"மாடலாக எனக்கு அறிமுகமானவர், சிறந்த புகைப்படக் கலைஞர் என்றும் அறிந்தேன். அவரே என்னை மாடலாக வைத்துப் பல விளம்பரங்களுக்குப் படம் எடுக்கிறார். இப்போது வீடியோ நிபுணராகவும் ஆகி விட்டார். டி.வி. விளம்பரங்களுக்காக வீடியோ படம் எடுக்கிறார்."

சவால்?

"ஒரு பாத்திர விளம்பரத்துக்கு டி.வி.க்காக வார்த்தைகளே இல்லாமல் பாவத்திலேயே நடித்தேன். 'நீங்களும் என்னைப் போல் இந்த பிராண்ட் பாத்திரங்களையே உபயோகிக்க விரும்புவீர்கள்' என்று சொல்லாமல் சொல்லி உணர்த்தினேன். பெரிய வெற்றி என்று கருதப்பட்டது அந்த விளம்பரம்."

வேடிக்கை நிகழ்ச்சி?

"ஒருமுறை எங்கள் வீட்டுக்குத் தேன் விற்கும் வியாபாரி ஒருவர் வந்தார். ஒரு பாட்டில் தேன் வாங்கினேன். 'அம்மா பாவமுங்க. ரொம்பத்தான் வேலை வாங்கறீங்க' என்று சுரேஷைப் பார்த்துச் சொன்னார்.

"எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"நான் அப்படியொன்றும் பெண்டாட்டியைக் கஷ்டப்படுத்துகிறவன் இல்லையே!"

"நான்தான் நேத்து சினிமாவிலே கண்ணுக்கு மெய்யாப் பார்த்தேனுங்களே, எவ்வளவு கஷ்டப்பட்டுத் துணி துவைச்சாங்க!' என்றார்.

"சோப்பு விளம்பரப் படத்தைத் தியேட்டரில் பார்த்துவிட்டுப் பேசுகிறார் என்பது புரிந்தது.

"குபீரென்று சிரித்துவிட்டோம். ஆனாலும் அந்த வெள்ளை மனம் எங்களை நெகிழவும் வைத்தது."

பேட்டி: சிக்கி

மேலட்டை வண்ணப்படம்: உத்ரா

கோடையில்

சரணாலயத்தில் ஒரு கொடுமை!

நான் பரத்பூர் பறவைகள் சரணாலயத்தில் பறவை இயலில் ஆராய்ச்சி செய்து வருகிறேன். சென்ற கோடையில் ஒரு நாள் யாரோ வீசிய சிகரெட் துண்டால் காய்ந்த புற்கள் தீப்பற்றிக் கொண்டு, வனப் பகுதி முழுவதும் பயங்கரமாகத் தீ பரவிவிட்டது. தீயணைக்கும் படையினர் எவ்வளவோ முயன்றும் சில நாட்களுக்குத் தீயை அணைக்க முடியவில்லை. இத்தீயில் கருகிய குஞ்சுகள் மற்றும் முட்டைகள் கணக்கில் அடங்கா! இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பறவைகள் பரத்பூர் திரும்பச் சில மாதங்கள் ஆயின. என் மனத்தை உலுக்கிய இந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது.

— பூ. ஸ்ரீதரன், பரத்பூர்.

நள்ளிரவு நிகழ்ச்சி

கோடையின் உச்ச கட்டம். வீட்டின் தரையும் சுவரும் கூடச் சூடேறிப் போய் இரவெல்லாம் தகித்தது. நடு நிசி வரை உறக்கம் வரவேயில்லை. என் தம்பி மொட்டை மாடியில் சென்று படுக்கலாம் என்று போனபோது வீதியில் நாய் குரைத்தது. சுவர் ஓரமாக நின்று எட்டிப் பார்த்தான். துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் ஏந்திய நான்கு பேர் எதிர் வரிசையிலிருந்த வீடு ஒன்றுக்குள் நுழைந்து கொண்டிருப்பதைக் கண்டான். பதற்றத்துடன் அப்பாவிடம் வந்து சொல்ல, அவர் போலீஸுக்கு போன் பண்ண, அடுத்த இருபதாவது நிமிடம் அந்தக் கொள்ளைக் கும்பல் பிடிபட்டது. என் தம்பிக்கு 1500 ரூபாய் பரிசும் போலீஸ் இலாகாவிடமிருந்து கிடைத்தது.

— நீரஜா மூர்த்தி, பெங்களூர்.

எதிர்பாராத குளுமை

நான் கல்லூரியில் பி.எஸ்ஸி இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த சமயம். கோடை விடுமுறையை எப்படிக் கழிப்பது





ஓர் அனுபவம்

என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். தக்க தருணத்தில் என்.சி.சி. காம்ப்புக்கு என்னைத் தேர்வு செய்திருப்பதாகச் செய்தி கிடைத்து என்னைச் சந்தோஷத்தில் ஆழ்த்தியது. இருபத்தியொரு நாட்களுக்கு நீடித்த அந்த 'காம்ப்' நடந்த இடம்: ஊட்டி!

— செ. அன்பு மதியழகன், கொப்பம்பட்டி

கை கொடுத்த வாட்டர் பாட்டில்

நல்ல சித்திரை வெயில்.கிராமப்புறத்தில் என் எட்டு வயது மகளுடன் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். நான் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் என் பெண் தான் பள்ளிக்கு எடுத்துச் செல்லும் வாட்டர்-பாட்டிலில் நீர் நிரப்பிக் கொண்டு வந்திருந்தாள். வழியில் பஸ் திடீரென்று நின்றுவிட்டது. காரணம்: வெயில் தாங்காமல் சாலையின் குறுக்கே ஒருவர் மயங்கி விழுந்திருந்தார். அந்த நபரின் மயக்கத்தைத் தெளிவித்து அவர் தாகத்தைத் தணிக்க என் மகள் கொண்டு வந்த தண்ணீர் மிகவும் உபயோகமாக இருந்தது. தண்ணீர் முழுவதையும் குடித்துவிட்டு அவர் நன்றியுடன் என்னைக் கைகூப்பி வணங்கியதை எப்படி மறக்க முடியும்!

— சந்திரா, பரமக்குடி.

கோடையே வருக வருக!

கோடைக் காலம் பிறந்துவிட்டால் எல்லோரும் வேர்வையும் உஷ்ணமும் தாங்காமல் தவிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் என்னைப் போல் 'சைனஸைடிஸ்'வால் அவதிப்படுபவர்களுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சிதான்! நாங்கள் எந்தவிதமான உடல் தொந்தரவும் இல்லாமல் இருப்பது இந்தப் பொசுக்கும் கோடையில்தான்! ஆதலால் நாங்கள் கோடையை ஆறத் தழுவி வரவேற்கிறோம்.

— கி. திலீபன், தர்மபுரி.

கைச் செலவுக்கு ஆச்சு!

கோடை வந்தாலே ஒரே குஷிதான்! காரணம் — எனக்குப் பணத் தட்டுப்பாடே இருக்காது! எப்படி என்கிறீர்களா....? என் அத்தையின் உதவியுடன் அப்பளம், வடகம் போன்றவை தயாரித்து மொட்டை மாடியில் உலர்த்தி, அவற்றை நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு 'சப்ளை' செய்து 'பாக்கெட் மணி' சம்பாதித்துவிடுவேன்.

— போடி ரவிராஜ், மதுரை.

அளவில்லாத ஆச்சரியம்!

போன வருடத்திற்கு முந்திய வருடம் கோடை விடுமுறையைக் கழிக்கச் சேலத்திலிருக்கும்என் உறவினர் வீட்டுக்குச் சென்றபோது என் குடையை பஸ்ஸிலேயே தவறவிட்டுவிட்டேன். போன வருடம் மீண்டும் அதே சேலத்துக்கு, அதே பஸ்ஸில் சென்றபோது, அதே கண்டக்டர் ஞாபகமாக என் குடையைத்திருப்பித் தந்ததும் நான் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

— கே. சுகுணா, கடலூர்.

ஜீவகாருண்யம்

வெயிலில் வெளியே அலையும் சமயம் நா வறண்டு தவிக்கும்போது தண்ணீர்ப் பந்தல் தென்பட்டால் புதிய உயிர் வந்த மாதிரி இருக்கிறது நமக்கு. ஆனால், கால்நடைகளுக்குத் தாகம் உண்டு என்பதை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. சில ஆண்டுகளுக்கு முன் கிண்டி தொழிற்பேட்டையில் ஒரு தொழிற்சாலையின் வாயிலில் 'கால் நடைகளுக்கு இங்கே தண்ணீர் கிடைக்கும்' என்று போர்டு எழுதி மாட்டியிருந்ததைப் பார்த்தபோது என் மனம் இன்பம் கலந்த ஆச்சரியத்தில் திளைத்தது.

— பி. தேவகி, சென்னை—4.

இங்கே இது புதுசு!

ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள ராயகாடா என்ற ஊரில் எனக்கு வேலை. சென்ற ஆண்டு




கோடையின் போது வெயில் பொறுக்க முடியவில்லை. 'பவர் கட்' வேறு. சக அலுவலர்கள் காற்றில்லாமல் 'உஸ் உஸ்' என்று புழுங்கித் தவித்தனர். சென்னையிலிருந்து ஓலை விசிறிகளை வரவழைத்து ஆளுக்கு ஒன்று கொடுத்தேன். அதற்காக அவர்கள் பொழிந்த நன்றிப் பெருக்கில் நான் இன்னமும் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறேன்.

— என். ரமேஷ், ராயகாடா.

எத்தியோப்பியா அனுபவம்

எத்தியோப்பியாவின் டிக்ரே மாகாணத்தில் நாங்கள் இருந்தபோது, இந்திய வேளாண்மைத் துறை வல்லுனராக இருந்த திரு மஸ்லேக்கர் தமது பண்ணையையும் அதனருகே இருந்த நீர்வீழ்ச்சியையும் காண வரும்படி எங்களை அழைத்திருந்தார். குழந்தைகள் உள்படப் பலர் அடங்கிய எங்கள் குழு கால் நடையாகப் புறப்பட்டது. மே மாதம், மாலை வேளை. சில கி.மீ. நடந்திருப்போம். திடீரென்று மழை கொட்ட ஆரம்பித்துவிட்டது. ஒதுங்குவதற்கு மருந்துக்குக் கூட ஒரு குடிசையோ, மரமோ கிடையாது. மழையைத் தொடர்ந்து ஆலங்கட்டி மழை வேறு. குண்டு போல் தாக்க ஆரம்பித்தது. உடம்பெல்லாம் நனைந்து, கால் சகதியில் சிக்கிக் கொண்ட நிலையில் தலை, கை, கால், முதுகு என்று எல்லா இடத்திலும் ரண வேதனை. என் மூக்குக் கண்ணாடி உடைந்தே போய்விட்டது! எங்களுடன் வந்த சிறுவனுக்கு ரத்தக் காயமே ஏற்பட்டுவிட்டது. இப்படியாக முடிந்தது எங்கள் இன்ப உலா!

— டி. விஸ்வநாதன், அ. தெக்கூர்.



ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

பி. தேவகி,
34/2, ஆடம் தெரு,
சென்னை — 600 004.



விமானப் பிரயாணி: மிஸ், சொன்னு தப்பா நினைக்கக்க மாட்டீங்களே? உங்க அழகையும் கவர்ச்சிகரமான புன்னகையையும் பார்த்து அப்படியே சொக்கிப் போயிட்டேன். நாம இரண்டு பேரும் கை கோர்த்துக்கிட்டு காலம் பூராவும் வாழ்க்கையிலே சிறகடிச்சுப் பறக்கணும் போல இருக்கு!

ஏர்ஹோஸ்டஸ்: பிழைச்சுக் கிடந்தா பறக்கலாம். எதுக்கும் இப்போ சீட் பெல்டைப் போட்டுக்குங்க. இன்ஜின்லே தீப்பிடிச்சிருக்கு!

— பராசரம் நீலகண்டன்

தர்மபுரி மாவட்டத்தில் கல்கி



வாசகர்கள் எழுதிய நூற்றுக்கணக்கான கடிதங்களைப் பரிசீலித்து அவற்றின் அடிப்படையில் நமது நிருபர்கள் தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் அனுபவங்கள்,

ஜூலை 13, 20 கல்கி இதழ்களில் இடம்பெறும்.

அனுராதா ரமணன் 11

நெருப்பாக நீ



அவினாஷ், தன் கையிலிருந்த பொருட்களை மாறி மாறிப் பார்க்கிறான்.

இன்பா, அவன் பக்கத்தில் அமர்ந்து, சிறு குழந்தையிடம் சொல்வது போலச் சொல்கிறாள்:

''இதைப் பாருங்க... இது பேரு பேப்பர்... இதெல்லாம் கலர் கலரா எழுதற பேனா... உங்களுக்கு என்ன கலர் பிடிக்கும்...?''

''உம்?''

''சொல்லுங்க... உங்களுக்கு எந்தக் கலர் பிடிக்கும்?''

''ஐஸ் போட்டு... வின்சென்ட் கலர்... நன்னாரி சர்பத்து... கலர் எங்கே... இதுக்குள்ளேயா இருக்கு?''

''ஐயோ!''

நந்தகுமார் தலையில் அடித்துக் கொள்கிறான். அவினாஷோ இதைக் கொஞ்சமும் லட்சியம் பண்ணாமல், கையிலிருந்த 'ஸ்கெட்ச் பென்னை'த் திருகி, உடைப்பதிலேயே கவனமாக இருக்கிறான்.

''இன்பா... இவன்கிட்டே உட்கார்ந்து பேசறதை விட, குட்டிச் சுவத்துல முட்டிக்கலாம்... இன்னிக்கு உன்னை எங்க பண்ணைக்குச் சொந்தமான தோட்டத்துக்கு அழைச்சிட்டுப் போறேன்...''

இன்பா, அவனைப் பார்த்துப் பொய்யாய் முறைக்கிறாள்.

''இருபத்து நாலு மணி நேரத்துல — ஒரு அரை மணி நேரம், கூடப் பொறந்த பொறப்புக்காக ஒதுக்கக் கூடாதா நந்து?''

''இருபத்து நாலு மணி நேரத்தையும் அவனுக்காக ஒதுக்கினாக் கூட — அவன் புரிஞ்சுக்கப் போறதில்லே... டைம்தான் வேஸ்ட்!''

இன்பா, நந்துவைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிச் சிரிக்கிறாள்.

''பாவம், இவர் ஒருத்தருக்குத்தான் விலங்கை மாட்டி, பைத்தியம்கிற பட்டப் பேரைச் சூட்டி, அறைக்குள்ளே தள்ளிப் பூட்ட முடிஞ்சது நம்மாலே... நமக்கு விலங்கு மாட்டத்தான் யாரும் இல்லே...''

''ஏய், என்ன சொல்றே?''

''ஆமா... நீ என்னைச் சுத்தி வர்ற பைத்தியம்; உங்க அம்மா — ஏதோ இனம் புரியாத பயத்துல படுக்கையோட கிடக்கிற பைத்தியம்; உங்க அப்பாவுக்கு உன் மேல் பைத்தியம்; இங்கே வர்ற டாக்டருக்குப் பணப் பைத்தியம்; மாதையனுக்கு விசுவாசப் பைத்தியம்... எனக்கு...''

''உனக்கு?''

''நான் கூட ஒருவிதத்துல பைத்தியம்தான். மனசுக்குள்ள என்னென்னவோ ஞாபகங்கள்... கனவுகள்... நிஜமாவே அதெல்லாம் எப்பவாவது நடந்த சம்பவங்களா... இல்லே — என்

கற்பனையான்னு ஒண்ணும் புரியலே... மொத்தத்துல — நான் இங்கே வந்து, உங்க வீட்டோட பழகறது உங்க குடும்பத்தைப் பத்தி நல்லாப் புரிஞ்சுக்கணும்கிறதுக்காக இல்லே. ஏன்னா — ஏற்கெனவே இந்தக் குடும்பத்தோட நான் கொஞ்ச நாள் பழகியிருக்கேன்!''

''அதெல்லாம் நீயா நினைச்சுக்கிறது இன்பா...''

இவர்களது பேச்சைக் கேட்டபடி அவினாஷின் அறையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த மாதையன், 'சட்'டென இன்பாவை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, நந்தகுபாரிடம் சொல்கிறான்:

''எனக்குக் கூடத் தோணுதுங்க... இன்பாம்மா போன ஜென்மத்துல இந்தக் குடும்பத்து ஜமீன்தாரிணியா இருந்திருப்பாங்களோன்னு... பெரியம்மாவோட தோரணை, ஏழைங்ககிட்ட அவங்க காட்டற பரிவு — இதோ, இது மாதிரி பட்டு உடுத்தி, தலை நிறைய மல்லியப்பூ வெச்சுக்கிட்டு, தலையைக் கவுத்து, கண்ணை மட்டும் மேலே உசத்திப் பார்த்தபடி பேசற பேச்சு... எல்லாமே இவங்ககிட்டே பார்க்கறேன்... போன பிறவியில் குறையோட செத்தவங்க — மறுபடியும் பிறந்து, தங்களோட குறையைத் தீர்த்துப்பாங்களாம்...''

இதைக் கேட்ட இன்பா, கலகலவெனக் கைகளைக் கொட்டிச் சிரிக்கிறாள்.

''ஏன் மாது... உங்க எஜமானியம்மா காணாமப் போய் எத்தனை வருஷமிருக்கும்?''

''......''

''சுமாரா எத்தனை வருஷமிருக்கும்னு யோசிச்சுச் சொல்லு போதும்!''

''சுமாரா என்னங்க... தேதி, கிழமை வாரியா சொல்ல முடியும் என்னால... ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தியெட்டுல ஒரு டிசம்பர் மாசம் பதினஞ்சாம் தேதி ராவு — அம்மாவும், அய்யாவும் ஊருக்குப் போறாங்க... ஸ்டேசனுக்கு வண்டியோட்டிட்டுப் போனது நான்... அவங்க, இப்படி திரும்பியே வராமல் போயிடுவாங்கன்னு தெரிஞ்சிருந்தா, மனசு குளிர நாலு வார்த்தை பேசியிருப்பேன். பாவி நான்... வண்டி புறப்படற மட்டும் அய்யா கூடத்தானே பேசிட்டிருந்தேன்!''

''அறுபத்தியெட்டாம் வருஷம் உங்க எஜமானியம்மா ஊரை விட்டுக் கிளம்பினப்ப — எனக்கு ஒன்றரை வயசோ — ரெண்டு வயசோ... எங்கே, எந்த இடத்துல இருந்தேனோ... பெத்தவ இருந்தாளோ... இல்லே, அப்பவே அநாதையாயிட்டேனோ... அதனால — உங்க எஜமானியம்மாவோட மறுபிறவியா நான் இருக்கிறதுக்கு சான்ஸே கிடையாது!''



சொல்லிக் கொண்டே அவினாஷின் பக்கம் திரும்பிப் பார்த்தவள், சற்று அதிர்ந்து போகிறாள்.

சற்று முன் அவள் கொடுத்த வண்ணப் பேனாக்களில் ஒன்றை—கிராமவாசி, வேப்பங்குச்சியைக் கடித்துத் துப்புவதைப் போலத் துப்பிக் கொண்டிருந்தான்.

''அச்சச்சோ... என்ன இது...''

''நீதானே சொன்னே... இதுக்குள்ளே கலர் இருக்கும்னு...''

''இது அந்தக் கலர் இல்லே அவினாஷ்..''

அவினாஷ், அவளை விநோதமாய்ப் பார்க்கிறான்...

''யாரது அவினாஷ்?''



''நீங்கதான்...''

''ச்சீய்...''

அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு, தலையைப் பலமாய் அசைக்கிறான்...

''என் பெருராஜா... ராஜப்பா... கண்ணு... இப்படித்தான் எங்க பெரியம்மா கூப்பிடுவா...''

''ஓ...''

இன்பா, ஒரு 'ஸ்கெட்ச் பென்'னை எடுத்து, காகிதத்தில் பெரிய பூ ஒன்றை வரைந்து காட்டுகிறாள். அவன், நாக்கைத் துருத்திக் கொண்டு, அவள் வரைவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அவள், பூவின் காம்பிற்கும் இலைக்கும் பச்சை வர்ணத்தை உபயோகிக்கும் போது மட்டும், சிவப்பு நிறப் பேனாவை எடுத்துக் கொடுத்து, சிறுபிள்ளைத்தனமாய்ப் பிடிவாதம் பிடிக்கிறான்.

''இதைப் பூசு...''

''ஐய்யே... இலையெல்லாம் பச்சையாத்தான் இருக்கும்... இது சிவப்பு... பூ வேணுமானால் சிவப்பு நிறத்துல இருக்கலாம்...''

''எனக்கு இதுதான் பிடிக்கும்... இதையே பூசு...''

நந்து, இன்பாவின் தோளைத் தட்டுகிறான்.

''அவன் சொன்னபடி கேட்டுடு இன்பா. இல்லேன்னு முரட்டுத்தனமாக எதையாவது செஞ்சிடுவான்...''

''ஷ்... கொஞ்சம் சும்மா இரேன். அவர் அடிக்கலையின்னாலும் நீங்க எல்லாருமா

சேர்ந்து அடிக்க வெச்சிடுவீங்க போல இருக்கே...''

இன்பா, அவினாஷைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

''ஜன்னல் வழியாப் பாருங்க... மரமெல்லாம் பச்சையாத்தானே இருக்கு...''

''ஆனா, வெத்தலே சிவப்பா இருக்குமே..''

''பாக்கு,சுண்ணாம்போட சேர்த்துப்போட்டாத்தான் வெத்தலே சிவப்பா இருக்கும்..''

அவினாஷ், திடீரெனக் கையிலிருந்த பேனாக்களைவிட்டெறிந்தபடியேகத்துகிறான்:

''போடீ... எங்க பெரியம்மா கையில் வெச்சிருந்த வெத்தலே எல்லாம் சிவப்பாத்தான் இருந்தது... அன்னிக்கு ராத்திரி... மேல் புடவையெல்லாம் இப்படித்தான் சிவப்பா இருந்தது... 'ஏன் பெரியம்மா'ன்னு கேட்டேன். அவங்கதான் பேசவே இல்லேயே... தலையைச் சாய்ச்சு இதோ — இப்படி என்னேயே பார்த்தாங்க...

அவினாஷ், தலையைத் தொங்கப் போட்டு, கண்கள் செருக அவளைப் பார்க்க —

அவனே அதற்கு மேலும் பேச விடாதபடி, லோகநாதன், டாக்டர் பின் தொடர வந்து விட்டார்.

''என்னடா அளந்துக்கிட்டிருக்கே?''

டாக்டர், எகத்தாளமாய்க் கேட்க, அவனும் — வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல, இவரைக் கண்டதும் வெடுக்கெனப் பதிலளிக்கிறான்.

''உன் மூஞ்சி!''

''அவினாஷ்!''

லோகநாதன், மகனை அதட்ட — அவனோ, அவரது கையிலிருந்த சவுக்கையே பயத்துடன் வெறிக்க...

''டாக்டரை எதிர்த்துப் பேசினா, கொன்னுடுவேன்... ராஸ்கல்! ஸாரி சொல்லு...''

''......''

''இப்ப ஸாரி சொல்லப் போறியா... இல்லே—''

அவர் சவுக்கை ஒரு முறை வெட்ட வெளியில் சொடுக்கி இழுக்க —

அவினாஷ், தரையளவு குனிந்து டாக்டருக்குக் கும்பிடு போடுகிறான், கண்களில் நீர் பளபளக்கிறது.

இன்பாவினால் அதற்கு மேலும் அங்கே நிற்க முடியவில்லை. சட்டென வெளியேறுகிறாள்.

நந்துவும் அவளைப் பின்தொடர.... டாக்டர், அவனை ஓரக் கண்ணால் பார்த்தபடியே அழைக்கிறார்.

''நந்தகுமாரா....''

அவன், நின்ற இடத்திலிருந்தே திரும்பிப் பார்க்கிறான்.

''உன் சினேகிதியை அநாவசியமா, அவினாஷ் விஷயத்துல எல்லாம் தலையிட வேண்டாம்னு சொல்லு. சின்னஞ் சிறுசு. பயம் தெரியாது. இவனுக்கு இருக்கிற பலத்துக்கு, வெறி வந்தா — அப்புறம் உன் வருங்கால மாமனாருக்கு, அவரோட பெண்ணை முழுசா அனுப்பி வைக்க முடியாது. எலும்பைத்தான் பார்சல் பண்ண வேண்டியிருக்கும்....''

இதை, நந்து, இன்பாவிடம் சொன்னபோது அவள் அலட்சியமாய்த் தோளைக் குலுக்கிக் கொள்கிறாள்.

''என்ன.... பயமுறுத்திப் பார்க்கிறாரா?''

''அவருக்கு, உன்னைப் பயமுறுத்தணும்னு என்ன அவசியம் இன்பா?''

''அசட்டு நந்தூ.... இப்படியெல்லாம் ஏதாவது சொன்னா நான், பயந்து உன்னை விட்டுஓடிடுவேன்..அப்புறம்,தன்பொண்ணை உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம் இல்லே.... நந்து... டாக்டரோட மூளை அவரோட தலையில இல்லே.....''

''பின்னே?''

''அந்தப் பானை மாதிரி இருக்கிற தொந்தியிலதான் இருக்கு..... ஏன் நந்து, அவர் பொண்ணும் இப்படித்தான் இருப்பாளா?''

''யாருக்குத் தெரியும்? எப்பவோ பார்த்தது.''

நந்து விட்டேற்றியாகப் பதில் சொல்கிறான்.

''ஹேய்.... இந்த அலட்டல்தானே வேண்டாம்கறேன்...

இன்பா, அவனைச் சீண்டினாலும் சற்று முன் நடந்த சம்பவங்களைத்திரும்பத்திரும்ப, மனசுக்குள் கொண்டு வந்து அசை போட்டுப் பார்க்கிறாள்.

'போடீ.... எங்க பெரியம்மா கையில் இருந்த வெத்தலே எல்லாம் சிவப்பாத்தான் இருந்தது...

அவினாஷ் சொன்ன வார்த்தைகள்.... அடுத்தாற்போல் தலையைச் சாய்த்து, கருடப் பார்வையாய் அவன் பார்த்தது....

இத்தனை நாளும் சாந்த சொரூபியாய் இருந்த லோகநாதனுக்கு — அந்தக் கணத்தில் உண்டான பொல்லாத கோபம்....

அது, மகன், மதிப்பிற்குரிய டாக்டரை அவமதித்துவிட்டதால் ஏற்பட்ட ஆத்திரமா, இல்லே, பைத்தியப் புலம்பலிலும் தங்கள் குடும்பத்தின் அந்தரங்கங்களை இவன் உளறுகிறானே என்கிற எரிச்சலா....

அன்றிரவு, பாயை உதறிப் போட்டுக் கொண்டு அமர்ந்த மாதையனை உற்றுப் பார்க்கிறாள் இன்பா.

'இவனுக்கு எந்த அளவுக்கு, இந்தக் குடும்பத்திலுள்ளவர்களைப் பற்றித் தெரியும்.... அப்படியே தெரிந்தாலும் சொல்லுவானா...'

அவளை நிமிர்ந்து பார்த்த மாதையனும் புன்னகை புரிகிறான்.

''ஏம்மா.... தூக்கம் வரல்லேயா?''


''இல்லே மாது....''

''காலாகாலத்துலகல்யாணத்தைமுடிங்க. இதெல்லாம் வயசுக் கோளாறு.''

''இது வயசுக் கோளாறு இல்லே மாது. மனசுக் கோளாறு.''

அவன், பழுப்பும் பஞ்சு வெள்ளையுமாய்ப் பறக்கும் தாடியை நீவி விட்டவாறே அவளைப் பார்க்கிறான்.

(தொடரும்)



Sista's-HMT-1341



மாலைவரை ஒரு மகிழ்ச்சி!

கல்யாணகுமார்

ஸ்கூல் விட்டதும் ரமேஷ் விளையாடக் கூப்பிட்டும் கூட நிற்காமல் வீட்டிற்கு ஓடி வந்தேன்.

சுமதி அக்காவைப்பெண் பார்த்துவிட்டுப் போயிருப்பார்களோ? அவர்களுக்கு அக்காவைப் பிடித்திருக்குமோ? கடவுளே பிடித்திருக்க வேண்டும்!

என் அக்காவுக்கு என்ன குறைச்சல்? வாய்தான் பேச முடியாமல் திக்கும். மற்றபடி என்ன குறை சொல்ல முடியும்? எப்படியோ கல்யாணம் ஆயிட்டாப் போதும்.

அதோ... கடையிலிருந்து அக்காவே வராளே? "அக்கா, சுமதிக்கா!" — என அழைத்தபடி ஓடினேன். மூச்சு வாங்கியபடியே, அவங்க வந்துட்டுப் போயிட்டாங்களா? ஒன்னைப் பிடிச்சிருக்காமா? சொல்லுக்கா!

முகம் ஜிவ்வென்று சிவக்க, "ம்.. ம்..." — என்று வாய் கொள்ளா மகிழ்ச்சியை நாணம் திரைபோடச் சொன்னாள்.

சுமதி அக்கா —

எனக்குக் கூடப் பிறந்தவங்க யாருமேயில்லே. இந்த அக்கா எங்க பக்கத்து வீட்டு சுந்து மாமாவோட தங்கச்சி. அது என்னமோ சின்ன வயசுல இருந்தே ஒரு ஒட்டுதல். இது நாளுகப் பற்றிக் கொண்ட பாசப் பிடிப்பு.

சுந்து மாமாவிற்கு என் வயதில் ஒரு பையனும், அவனுக்குக் கீழ் ஒரு பெண்ணும் இருந்தனர்.

சுமதி அக்காவின் மன்னி இருக்காளே.... ஐயோ! அம்மா கூட அடிக்கடி சொல்வாள்.'இந்தத்தீசச்சிகிட்ட இந்தப்பொண்ணு மாட்டிக்கிட்டாளேன்னு.

தீபாவளியானாலும், எந்த விசேஷ நாளானாலும் அவர்கள் வீட்டில் எல்லோரும் புதுசு உடுத்திக் கொண்டு இருக்கும் போது ஒரு கிழிந்த தாவணியில் இவள் ஆட்டுக் கல்லில் அரிசி அரைத்துக் கொண்டோ, கொல்லையில் பத்துப் பாத்திரம் தேய்த்துக்கொண்டோ இருப்பாள்.

வெள்ளிக்கிழமை தோறும் நரசிம்மஸ்வாமி கோவிலுக்குச் செல்வோம். குளத்துப் படிகளில் அமர்ந்து கொண்டிருக்கும் சமயங்களில் அவள் என்னைக் கட்டிக் கொண்டு அழுவாள். நான் ஏனென்று கேட்டால் அவள் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் மனம் வெடித்து அழுவாள்.

என் வீட்டில் என்ன பட்சணம் செய்தாலும் சட்டைக்குள் மறைத்து எடுத்து வந்து அவளிடம் தருவேன். நான் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டேன் எனச் சொன்னாலும், எனக்குத் தந்துவிட்டுத்தான் சாப்பிடுவாள். அப்போதெல்லாம் என் நெஞ்சுக்குள்ளிருந்து ஏதோ ஒன்று சுழன்று வந்து தொண்டைக்குள் கப்பென அடைத்துக் கொள்ளும்.

அவளின் அண்ணா குழந்தைகள் கூட அவளை, "ஏய், திக்கு வாய், அம்மா கூப்பிட முடி!" — என மரியாதையில்லாமல் கூப்பிடும் போது அப்படியே அவர்களை அறையலாம் போல் ஆத்திரமாய் வரும்.

ம், இனி அப்படியெல்லாம் நடக்காது. இவளை யாரும் கேவலமாய், கேலியாய், வேலைக்காரியாய் நடத்த முடியாது. இவளுக்குத் தான் கல்யாணம் ஆகப் போகிறதே!

மறுநாள் மாலை அவள் வீட்டிற்குச் சென்றேன்.

"எங்கக்கா யாரையும் காணோம்?"

அவளின் சொற்களிலிருந்து மற்றவர்கள் மேட்னிக்குப் போயிருப்பதாய் அறிந்து கொண்டேன்.

கொல்லையில் ஒரு பெரிய மரமல்லி மரம். பூத்துக் குலுங்கியபடி... கீழே விழுந்து கிடந்த பூக்களில் பாதிக் காம்பைக் கிள்ளிவிட்டு மீதியை வாயில் வைத்து... நாதஸ்வரமாய்ப் பாவித்து ஊதி... தேய்க்கப் போட்டிருந்த தட்டை மத்தளமாக்கி, அவளைத் துவைக்கும் கல்லில் அமர்த்தி...

"அக்காவுக்குக் கல்யாணம்
காரு மேல் ஊர்கோலம்
காசு உள்ள மாப்பிள்ளே
ஆசை வச்சா தப்பில்லே!"

...எனப் பாடியபடி அவளைச் சுற்றிச் சுற்றி வந்து இறைந்து கிடந்த பூக்களை அவள் மீது வாரியிறைத்தேன். ஒரே சமயத்தில் நாலைந்து பூக்களை வாயில் வைத்துச் சத்தமாக அவளின் காதுகளில் ஊதியபடி... அவள் முகத்தைப் பொத்திக் கொண்டு அடக்க முடியாத மகிழ்ச்சியில் உடல் குலுங்க...

"ஏண்டி, பாத்திரங்களைத் தேய்க்காம அவன் கூட வெளையாடிக்கிட்டா இருக்கே, தட்டுவாணிக் கழுதை?" — எனக் கத்தியபடி சுமதியின் மன்னி அவளின் முடியைக் கொத்தாகப் பிடித்துக் கல்லிலிருந்து உந்தித் தள்ள... மண்டியிட்டபடி பாத்திரங்களின்



முன் போய் விழுந்தாள்.

பதறியபடி சென்ற என்னைப் பற்றியவள், "பயலே, படிக்காமல் இங்கே வந்து குதியாட்டமா போடற?"—என்றபடி முதுகில் இரண்டு வைக்க... எனது வலியை விட "ம்மாவ்" எனக் குமுறியபடி கீழே விழுந்த அக்காவைப் பற்றியே அதிகமாய் வலிக்க....

அடுத்த சில நாட்களில் மாப்பிள்ளை வீட்டார் திருமணத்திற்குத் தேதி வைத்துக் கொள்ளச் சொல்லிக் கடிதம் போட்டு விட்டனர்.

அன்று இரவு வீட்டில் அம்மா, அப்பாவுடன் படுத்துக்கொண்டிருந்த போது அம்மா சொன்னாள்.

"ஏங்க, மாப்பிள்ளை வீட்டாரே எல்லாச் செலவும் செஞ்சு கல்யாணம் பண்ணிக்கறாங்களாம். எவ்வளவு நல்ல மனசு பாருங்க அவங்களுக்கு. இவா பட்ட கஷ்டத்துக்கு எவ்வளவு நல்ல இடம் கெடைச்சிருக்கு பாருங்க!"

"ம்.. எப்படியோ பொண்ணு நல்லா இருந்தா சரி."

மறுநாள் அக்காவைப் புதுப் புடைவையில் பார்த்தபோது என்னால் நம்பவே முடியவில்லை. அன்னை மீனாட்சியே அருகே வந்தாற் போல்... இதுநாள்வரை இந்த அழகு எங்கே புதைந்து கிடந்தது?

கோவிலுக்குப் போனோம். இந்த முறை குளத்தின் படிகளில் அமர்ந்திருந்த போது அவள் பலமுறை சிரித்தாள். சிரிக்க வைத்தேன். தண்ணீரை என் மீது விசிறினாள். விளையாட்டு சற்று நேரம் நீடித்தது.

"அக்கா, இன்னிக்குத்தாங்க நீங்க ரொம்ப நல்லா இருக்கீங்க. என்னிக்கும் இதே மாதிரி சிரிச்சிக்கிட்டே இருக்கணும்."

வீடு திரும்பினோம்.

அவள், அம்மாவை நமஸ்கரித்து எழுந்ததும், "ம்... நீ இத்தனை நாள் பசலை பிடிச்ச குத்து விளக்காட்டம் மூலைல இருந்தே. இன்னைக்குத்தான் அந்த விளக்கைப் புளி போட்டுத் தேய்ச்சி, அதைக்கூடத்துல வெச்சு சுடரை ஏத்தின் மாதிரி பிரகாசிக்கறே. இந்தப் பிரகாசம் இன்னிக்கு மாதிரியே என்னைக்கும் உங்கிட்டே இருக்கணும்!"

ஆனால் அந்த மகிழ்ச்சி மாலை வரைதான் நீடித்தது. மாலை பேப்பர் வந்ததிலிருந்தே ஊர் பரபரப்பாகி விட்டது. எல்லாம் பேப்பரில் முதல் பக்கம் வந்திருந்த செய்திதான்!

அந்த ஆள், அதான் சுமதிக்குப் பார்த்திருந்த மாப்பிள்ளை இதுக்கு முன்னேயே பல தடவை கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்தப் பொண்ணுங்களை பம்பாய்க்குக் கொண்டு போய் வித்துடறது வழக்கமாம். அதுக்காகவே இது மாதிரி அனாதைப் பெண்களை, இல்லை இந்த மாதிரி சொந்தம் இருந்தும் கட்டமண்ணாயைச் சேராதிருக்கும் குடும்பத்துல அவள் போனால் போறும்ங்கிற குடும்பமாப்பார்த்து, சிக்கனமா கல்யாணம்ங்கிற பேர்ல தாலி கட்டிக்கிட்டுக் கூட்டிப் போய்... போலீஸ் கைது பண்ணிட்டாங்களாம்.

ஓடிப் போய் அக்காவைப் பார்க்கணும் போல இருந்தது. வீடு உட்பக்கமாய் தாழ்





அஸம்சயம் மஹாபாஹோ
மநோதுர் நிக்ரஹம் சலம்

''சலம்'' என்றால் சஞ்சலம்தான். சஞ்சலித்துக் கொண்டேயிருக்கும் மனஸை அடக்க முடியாதுதான். ''துர் நிக்ரஹம்'' — நிக்ரஹம் செய்வதற்கு முடியாது. ''அஸம்சயம்'' — இதிலே சந்தேகமில்லை. ''அர்ஜுனா! (அர்ஜுனனை 'மஹா பாஹு' என்கிறார். மஹா வீரனதலால் அவனுடைய தோள் வலியைக் குறிக்க 'மஹா பாஹு' என்று கூப்பிடுகிறார். வெளி யுத்தத்தில் போலவே உள் யுத்தத்திலும் அவன் மஹா வீரன் ஆகணும் என்று தாத்பர்யம்.) ஸந்தேகமில்லாமல் நீ சொன்ன மாதிரிதான் மனஸ் சஞ்சலித்துக் கொண்டேயிருக்கிறது. அதை நிக்ரஹம் பண்ணுவது லேசில்லைதான்'' என்று, அவன் சொன்னதற்கு 'ஆமாம்' போட்டுவிட்டு, அதற்குப் பரிஹாரமும் சொல்கிறார்.

ரொம்பவும் முக்யமான விஷயத்தைச் சொல்கிறார்: ''அப்யாஸம், வைராக்யம் என்ற இரண்டில் தீவிரமாயிருந்தாயானால் மனை நிக்ரஹம் பண்ணிவிடலாம்'' என்கிறார்.

''எத்தனை திமிறினாலும், உன்னைத் திசை தப்பி எத்தனை தரம் இழுத்துக் கொண்டு போனாலும்ஸரி, அதற்காக மனஸைக் கட்டுப்படுத்தப்ரயாஸை எடுக்காமல்விட்டுவிடாதே. வெளியிலே ஓடுகிற அதை ஒவ்வொரு தரமும் மறுபடி உன் வழிக்கு இழுத்துக்கொண்டு வரப் பார். இப்படி விடாமுயற்சியுடன் எதிர்த்துப் போராடிக் கொண்டேயிருந்தால், அது ஒரு நாள் அடங்கிப் பணிந்து போக ஆரம்பித்துவிடும். எதனிடமும் ஆசை வைக்கப்படாதுஎன்றவைராக்கியசிந்தை, எத்தனை வழுக்கிவிட்டாலும் ஊன்றி நிற்க அப்யாஸம் செய்து கொண்டே இருப்பது — ஆகிய இந்த இரண்டால் முடிவிலே ஒரு நாள் ஜயித்துவிடலாம்'' — இப்படி பகவான் ஆறுதலாகப் பதில் சொல்கிறார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

போட்டிருந்தது.

''அந்த ஆள்கிட்டே இருந்து ஏதோ பணம் கூட வாங்கிட்டு இருக்காங்க போல. அந்தப் பொண்ணுக்கு இப்படி ஒரு அண்ணனும், அவனுக்கு ஒரு ராட்சஸியும் வாய்க்க வேணும். அதனால்தான் அவங்க வெளியே வர வெட்கப்பட்டுண்டு கதவை மூடிண்டுட்டாங்க'ன்னு அம்மா சொன்னாள்!

சாயந்திரம் கறுப்பு கறுப்பாக மேகங்கள், ஈர விறகை வெச்சி ஊதினா குப்புனு கௌம்பற அடைச்ச பொகையாட்டம் ஊரை அடைச்சிக்க... மழை, மழை... அத்திக்கட்டி, ஆலங்கட்டியோட.... பெரிய சத்தத்துடன் இடிகள்... ஜன்னல் வழியா மின்னல், கண்ணாடியை வெயில்ல காட்டினா பளீர்னு பிரதிபலிக்கிற மாதிரி... வெளிச்ச வெள்ளம்.... 'அர்ஜுனா, அர்ஜுனா'' — என முனகியபடி அம்மாவினுள் ஒடுங்கிக் கொண்டேன். தூங்கியும் விட்டேன்.

திம்'மென்று வீடே இடிந்து விழுவது போல் தடதடவென்று பலத்த ஓசை... ஏதேதோ நசுங்கி... நொறுங்கி...

வானம் சிறிது வெளி வாங்கி, விடிவெள்ளி தெரிந்தது. கதவைத்திறந்து, அப்பா வாசலுக்குச் சென்றார். கூடவே அம்மாவும், நானும்.

அதற்கு முன்பே அக்கா வீட்டின் முன் சிலர் இருந்தனர். தெருவெல்லாம் சகதியாய் இன்னமும் மழைநீர் ஓடிக் கொண்டிருந்தது.

அவர்கள் வீட்டுக் கொல்லையில் போய்ப் பார்த்தால் அந்தப் பெரிய மரமல்லி மரம் அடியோடு சாய்ந்து கிடந்தது.

ஏராளமாய்ப் பூக்கள் சிதறிக் கிடக்க... அதனை எடுக்க மனம் வராமல்...

''ம், எப்படியும் ஏழெட்டு மணு வெறகாகும். நல்ல விலை கெடைக்கும்!'' — சுமதி அக்காவின் மன்னி சொன்னாள்.

'யாராவது செத்தாக் கூட அதுலயும் லாப நஷ்டக் கணக்குப் போட்டுப் பாக்கற ஜென்மங்க இதுங்க'ன்னு அப்பா ஒரு தடவை சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

''நல்லவேளை. யாருக்கும் தொந்தரவு தராமல் தானாகவே ஒதுக்குப்புறமா விழுந்துடுச்சி. அதுவரைக்கும் நல்லதுதான்!'' — அப்பா சொன்னார்.

அப்போது யாரோ வாசலில், ''ஐயா... ஐயா...'' — எனக் கத்தியபடி ஓடிவர,

''என்ன...? என்ன...?'' — என எல்லோரும் வினவ, அசந்தர்ப்பமாக யாரோ ஒரு சிறுவன் பூவை வாயில் வைத்துக் கொண்டு ஊத...,

...நம்ப சுமதி தெப்பக்குளத்துல... மெதக்குதுங்க. சீக்கிரம் ஓடியாங்க...

''என்ன?'' — எல்லோரும் ஒரு விநாடி அதிர,

''நல்லவேளை யாருக்கும் தொந்தரவு தராமல் தானாகவே ஒதுக்குப்புறமா விழுந்துடுச்சி. அதுவரைக்கும் நல்லதுதான்'' — அப்பாவின் குரல் மனத்தில் ஒலிக்க...

''சுமதிக்...க்...கா...!'' — எனக் கதறியபடி குளத்தை நோக்கி ஓடத் தொடங்கினேன்.

சருக்கம் 41

கண்ணீர் துடைத்த திருநடனம்

இரவு, நீண்ட நேர விசாரணைக்குப் பிறகு கண்ணயர்ந்த சேக்கிழார், பொழுது பொல்லென்று விடிய, புள்ளினங்கள் கொல்லென்று சிரிக்க, புருவங்களை வில்லென வளைத்து இமைகளைத் திறக்கிறார்.

நமசிவாய மந்திரத்தை ஆன்மாவில் ஓதி எழுந்து கொள்கிறார்.

அறையின் வாசலிலிருந்து வீணையின் நாதம் கேட்கிறதே....!

புறநீர்மைப் பண்ணல்லவா பொழிந்து நெளிகிறது! வாசிப்பது யார்? இனிமையாகவும் அருமையாகவும் இருக்கிறதே!

எழுந்து வந்து கதவைத் திறந்து கவனிக்கிறார். அங்கே....

வான வீதி உலா வரும் விஞ்சையர் தம் அழகினை, ஞான நீதி உலாக்கென நேர்மைப் படுத்திக் கொண்ட ஜோதி நிலாவல்லவோ வீணை வாசிக்கிறது....!

''ஜோதி! நீ எப்போது வந்தாய்?''

வாசிப்பை நிறுத்தி எழுந்து கொண்ட ஜோதி, வசந்த நிலவாய் வணங்கிச் சிரிக்கிறான்.

திமுலைத் தொடர்ந்து வந்த நெருப்பு.

நெருப்பு.....

தனது கற்பினைச் சொல்லுகிறானோ? ஜோதி என்கிற பெயரில் அடங்கிய சூத்திரத்தைச் சொல்லுகிறானோ?

''சுவாமி! நேற்றே வந்துவிட்டேன்! இரவு வெகு நேரம் பொறுத்துக் கண் துயின்றீர்கள். வைகறைத் துயிலெழ மறந்துவிடுவீர்களோ என்று வீணை மீட்டி எழுப்பினேன்.''

மலைத்து நோக்குகிறார் மாண்புமிகு முதலமைச்சர்.

''நல்லது ஜோதி! காலைக்கடன்கள் முடிந்து விட்டனவா?''

''ஓ....''

''சசன் எங்கே?''

''எங்கும் இருப்பார். இப்போது நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் மாளிகையில் இருக்கிறார்.''

''ஏன்? இங்கு தங்குவதற்கென்ன?''

பேரின்பப் போதை தரும் பிறை நகை புரிந்தான் ஜோதி; பின்னர் சொன்னான்.

''நீங்கள் பிரமசாரி; நாங்கள் காதலர்கள். மணம் இடம் தந்தாலும் இந்த மாளிகை இடம் தராது.''

என்ன அற்புதமாக, ரசனையோடு பேசுகிறான்!

''நான் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு திரும்புகிறேன் ஜோதி!''

''காத்திருக்கிறேன் சுவாமி!''

சேக்கிழார் புறப்படுகிறார்.

நாழிகைப் போதுக்குள் குளித்து முடித்துத் திரும்புகிறார்.



அறையினுள் ஜோதியைக் காணோம்.

சிவச் சின்னம் தரித்துத் தியானத்தில் அமர்ந்து திருநாகேச்சுரத்து ஈசனை நெஞ்சில் நிறுத்திச் சிவ மந்திரம் ஓதுகிறார்.

கிணுங், கிணுங், கிணுங்....

ஜோதியின் காற்சிலம்போசை....

அறையினுள் நுழைகிறான்.

சேக்கிழார் செய்யும் தியானத்தை முதன் முறையாகக் கண்டு துய்க்கிறான்.

அந்த முகத்துக்குப் பின்னே ஒரு ஜோதி பிரபை யிட்டிருப்பது அவனுக்குப் புலனாகிறது.'

தியானம் முடிந்து கண்மலருகிறார் சேக்கிழார். அந்தக் கண்களின் தாம் என்னே ஒளி நர்த்தனம்!

''எப்போது வந்தாய் ஜோதி?''

''சற்று நேரத்துக்கு முன்பு சுவாமி!''

நேரத்தைக் காட்டும் நாழிகை வட்டிலைக் கவனிக்கிறார்.



—கோவி. மணிசேகரன்

"காலையுணவு?"

"உங்களுடன்."

"கபாலீச்சுரன்?"

"மண்டையோட்டில் உண்ணும் மாவிரதர். இப்போதுதான் பாத்திரத்தில் உண்ணப் பழகிக் கொண்டிருக்கிறார். வெளியில் சென்றிருக்கிறார்."

இருவரும் காலையுணவு உண்ணச் சென்றனர்.

உண்டு முடித்துச் சற்றே இளைப்பாற மாளிகைக் கூடத்தில் அமர்ந்தனர்.

"இரவு விசாரணை செய்த விதம் அபாரம்! ஆனால் அந்தக் குற்றவாளியை ஏன் மன்னித்து விட்டீர்கள்?"

"மன்னிக்கப்படக்கூடாதவர்கள் வெளியில் இருப்பதனால்தான் ஜோதி! இப்போதைய மன்னர் ஆட்சியில் தண்டனையை வழங்குகிறவன் மன்னனாக இருப்பதால்தான் பலமுறைகளில் மன்னன் கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொள்கிறான். மன்னன் வெகுமதிகளைத்தான் வழங்க வேண்டும். தண்டனைகளை அமைச்சர்கள்தாம் வழங்க வேண்டும். அப்போது மன்னன் நற்பெயருடன் திகழ்வான்."

"அமைச்சர்கள் கெட்ட பெயரைச் சம்பாதிக்க மாட்டார்களா?"

"நல்ல முதலமைச்சன் வெகுமதிகளை மன்னரிடம் எடுத்துத் தருபவனாக இருக்க வேண்டும்; தண்டனைகளை அதிகாரிகளை விட்டு வழங்கி விட வேண்டும். அப்போது கசப்பு ஏற்படாது. இதுவே சிறந்த ராஜ தந்திரம்."

ஜோதி வியந்தாள். புலமைமிக்க சேக்கிழாரின் செம்மாந்த அறிவு அவளை மேனி சிலிர்க்கச் செய்தது.

"சுவாமி! அடுத்து உங்கள் நிகழ்ச்சி?"

"இங்கிருக்கும் முக்கிய கோயில்களைப் பார்வையிட்டும் தரிசித்தும் திரும்பலாம்



"புருஷன் பெண்டாட்டி ரெண்டு பேரையும் ஒரே ஆபீசிலே வேலைக்கு வச்சுக்கிட்டது ரொம்பத் தப்பாப்போச்சுது!"

"ஏன், ரெண்டுபேரும்வேலையேசெய்ய மாட்டேங்கிறாங்களா?"

"சே, சே! அதில்லே. புருஷனைத் திட்டும் போதெல்லாம் பெண்டாட்டி 'ஒன்ஸ் மோர்' கேட்க ஆரம்பிச்சுட்டா!"

— ச. கமலதியாகராஜன்

என்றிருக்கிறேன். நாளைக் காலை பயணம். இரவு உனது நாட்டிய நிகழ்ச்சியாமே! விவசாயிகளின் கண்ணீர் மீது நாட்டியமாட நீ எப்படி ஒப்புக் கொள்ளலாம்?"

"சூழ்நிலையைச் சொல்லுகிறீர்களா? விவசாயிகள் கண்ணீரை ஓரளவு துடைக்கவே ஒப்புக் கொண்டேன். செல்வந்தர்கள் விரும்பினார்கள். சிவன் கோயிலில் ஆடத்தான் ஆயிரம் பொன் கேட்டேன். ஆகா, என்று பத்து செல்வந்தர்கள் முன் வந்தார்கள். தவிர்க்கலாமா? ஈசன்தான் ஒப்புக் கொள்ளச் சொன்னார். ஏழை விவசாயிகளுக்கு அப்பொன்னை ஈந்து விடுவேன்"

"நல்ல சேவை" என்று வாழ்த்திய சேக்கிழார் கோயில்களைக் காணப் புறப்பட்டார். ஜோதி தனது மாளிகை நோக்கிச் சென்றாள்.

திருவாறைமேற்றளியில் திகழ்ந்திருந்த செந்தீயின் உருவாளனை ஈசனைத் தரிசிக்கிறார் சேக்கிழார்.

பழையாறையில் புகழ் பெற்ற கோயில்கள் மேற்றளி, வடதளி, தென் தளி ஈசன் கோயில்கள். பிறகு பட்டீச்சரம், திருசக்திமுற்றம் அருள்மொழி தேவேச்சரம் முதலிய ஆலயங்களைக் கண்டும் வழிபட்டும் திரும்புகிறார். பகற்போதுக்குச் சற்று அதிகமாகவே கால தாமதமேற்பட்டுவிட்டது.

அளவோடு உண்டு ஓய்வு கொள்ளலானார். இரவு நாட்டிய நாடகம் இருக்கிறதே!

மாலைப்போது அவரை எழுப்பியது.

இரவு நாட்டியம் காணத் துடித்த அனைவரையும் ஆர்வமுடன் எழுப்பியது.

மாமன்னன் இராஜ ராஜ சோழன் கட்டிய அருள்மொழி தேவேச்சரக் கோயில் சபாநாத மண்டபத்தில்தான் நாட்டிய நிகழ்ச்சி.

* சோமநாதரும் சோம கலாம்பிகை தேவியாரும் எழுந்தருளிய அந்தத் திருக்கோயிலில் ஆண்களும் பெண்களும் குழுமிக் கொண்டிருந்தனர்.

சபாநாத மண்டபத்தில் முக்கியமான பிரபலங்கள் தரையில் விரிக்கப்பட்ட பூவேய்ந்த துணி விரிப்பில் அமர்ந்திருந்தனர். வெளியில் மக்கள் கூட்டம் வழிந்தது. தூணுக்குத்தூண் தீப்பந்தங்கள் ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தன. புகழ் பெற்ற ஜோதியின் நாட்டியத்தைக் காண அவற்றுக்கும் ஆவல் போலும்!

சேக்கிழாருக்கெனத் தனியாசனம் ஒரு மருங்கே போடப்பட்டிருந்தது.

கூட்டத்தில் சலசலப்பு.

முதலமைச்சர் வருகிறார் என்பதை அந்தச் சலசலப்பு எடுத்துக் கூறுகிறது.

எதிர்பார்க்கிற சமயத்தில்தான் பிரசன்னமாக வேண்டும்; அதன் மூலம்தான் புகழ், ஏணி கட்டி ஏறுகிறது என்கிற ராஜதந்திரம் அறிந்தவராயிற்றே மாண்புமிகு முதலமைச்சர்.

யக்க வாத்தியங்கள் சுருதி கூட்டுகின்றன.

ஜல்!

மலரஞ்சலி தொடங்குகிறது.

இருக்கையில் அமருகிறார் சேக்கிழார்.

திரை விலகுகிறது. ** ஒருமுக எழினி மட்டுமே அங்கு பயன்படுத்த முடிந்தது.

இனிய பண்ணில் சொற்கொட்டுகளைத் தொடங்குகிறான் வல்லரசி. தொடர்ந்து மத்தளம், முழவு, குழல், வீணை, சல்லரி போன்ற வாத்தியங்கள் சுருதியில் இழைகின்றன.

மலரஞ்சலி நாட்டியத்து முத்தாய்ப்பில், மலர்களை வாரிக் கூட்டத்தின் மேல் இரைக்கிறாள் ஜோதி.

பெரும்பாலான மலர்கள் சேக்கிழாரையே அர்ச்சிக்கின்றன.

அரங்கத்து ஒருமருங்கே அமர்ந்து ரசிக்கிறான் கபாலீச்சரன்.

நாட்டியக் கதையினை நளினமாகத் தொடங்குகிறாள். அமர் நீதி நாயனார் கதை.

திருநல்லூரில் மடம் அமைத்து அடியவர்களுக்கு அமுது படைத்து கோவணங்களைத் தானமாகத் தருகிற அமர் நீதி நாயனாரைக் கண்முன் நிறுத்துகிறாள்!

சிவன், ஓர் அடியவர் கோலம் தரித்து வருகிறார்; கோவணத்தைக் கொடுத்து இதனை

---

* 'பார் மகிழ வாழும் பழையாறை யூர்மேவும் சோமகலா நாயகிசேர் சோமேசா' — உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள்

** நாட்டியத்துக்குமுன் தொடங்கும் அக்கால அவையடக்கம். அலாரிப்பு மாதிரி.

*** Flat Screen (சிலப்பதிகாரம்)

பாரதி புதையல்

கல்கி-வானதி பரிசுத் திட்டம்

பாரதி புதையல் பெருந்திரட்டு' — விடை விளுப் போட்டி முடிவுகள்:

முதல் பரிசு ரூ 1000/— (ரூ 500 வீதம் இருவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது)

பரிசு பெறுவோர்:

இ. பாலசுப்ரமணியன்
முதுகலைத் தமிழாசிரியர்
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
வெள்ளியணை 639 118.

திருமதி பவானி ராமஸ்வாமி,
2/3, Type III,
Westland,
Khamaria,
Jabalpur 482 005.

இரண்டாவது பரிசு ரூ 600/—

ரூ. 200 வீதம் மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பரிசு பெறுவோர்:

திருமதி லலிதா துரைசாமி
W/o. P. துரைசாமி,
3, வ.உ.சி. முதல் தெரு,
இராசிபுரம் 637 408
சேலம் மாவட்டம்

நீரஜா மூர்த்தி,
'ஸ்ரீநிவாஸ்'
11, 9வது கிராஸ்,
ஹனுமந்தா நகர்,
பெங்களூர் 560 019.

ஆர். பி. சாரதி,
'ஸ்ரீராகவம்'
3C, ஜெயராமன் தெரு,
இலக்குமிபுரம்,
குரோம்பேட்டை,
சென்னை 600 044.

மூன்றாவது பரிசு ரூ 501/—

ரூ 167 வீதம் மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.


பரிசு பெறுவோர்:


கே. என். லலிதா,
8, குஹாலயம்,
கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாவரம், சென்னை 600 023.

று. தேன்மொழி
D/o. எம். கோவிந்தராஜு,
45, கிழக்கு தெரு,
திருவிடைமருதூர்,
612 104 தஞ்சை மாவட்டம்.


கே.எஸ். சுகுமார்
'காவேரி' பிளாட் எண்: 181,
ஸ்ரீஸாயி நகர்,
விருகம்பாக்கம், சென்னை 600 092.








பிரமிக்கத்தக்க குழாய்கள் மற்றும்
இயந்திரங்களுடன் இதயத்தைத்
தொடும் இயக்கங்களும் நிறைந்துள்ள
நிறுவனம்: எம் ஆர் எல்



SAA/MRL/3974

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய மற்றும் பல்வேறு தரப்பட்ட சுத்திகரிப்புகளைச் செய்யும் ஆலைகளில் ஒன்றான மதராஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட், பலதரப்பட்ட தொழில்களுக்கும் வளர்ந்துவரும் தேவைக நக்கேற்ப தன்னுடைய உற்பத்தி அளவினை ஆண்டுக்கு 2.8 மில்லியன் டன்கள் என்ற நிலையிலிருந்து 5.6 மில்லியன் டன்களாக உயர்த்தியுள்ளது. ஆனால் எம் ஆர் எல்லின் எண்ணமெல்லாம் மணலியிலும் அதன் சுற்றுப்புற வளர்ச்சியிலும் இரண்டறக் கலந்துவிட்டது. ஆம், அங்குள்ள மக்கள் அதனை ஒரு தொழிற்கூடமாகக் கருதாமல் தங்களுக்கு உதவிகள் புரிந்திடும் அருகிலுள்ள ஒரு உற்ற நண்பனாகவே கருதுகின்றனர்.



மணலியைப் பொறுத்தமட்டில், எம் ஆர் எல்லின் செயல் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளித்ததோடு நின்றுவிடவில்லை. அது சமுதாய வாழ்வின் பல வேறுபட்ட துறைகளிலும் மிக அதிக அளவில் அரும்பணிகளைச் செய்து வருகிறது.

கல்வி பணியில் . . .

எம் ஆர் எல் வருவதற்குமுன் மணலி உயர்நிலைப்பள்ளி மரநிழலில் வகுப்புகளை நடத்தி வந்தது. எம் ஆர் எல் ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள கட்டிடங்கள், குடிநீர், விளையாட்டு சமதள வசதிகள், ஐந்து ஏக்கர் நிலப்பரப்பிற்கான சுற்றுச் சுவர் போன்றவற்றினை அளித்து உதவியுள்ளது.

குழந்தைகள் மட்டுமல்ல, வயது வந்தவர்களும் கற்பதற்கு ஒரு வாய்ப்பளிக்கப்படுகிறது. எம் ஆர் எல்லினால் அமைக்கப்பட்ட 'தி நான் பார்மல் அடல்ட் எஜுகேஷன் சென்ட்டர்' மணலியில் வயது வந்தோர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. மேலும் கிராம மக்களின் நலன் கருதி எம் ஆர் எல் ஒரு நூலகத்தையும் நடத்தி வருகிறது.

சுகாதார வளர்ச்சிப் பணியில். . .

எம் ஆர் எல், இம்பாக்ட் இந்தியா பவுண்டேஷன் மற்றும் லயன்ஸ் கிளப் இன் இந்தியா என்ற இரண்டு சேவை நிறுவனங்களுடன் இணைந்து, மணலியைச் சுற்றி உள்ள 7 கிராமங்களில் விஸ்தரிக்கப்பட்ட போலியோ தடுப்பு ஊசி திட்டத்தின்கீழ் சுமார் 7000 குழந்தைகளைக் கண்டுபிடித்து ஊசி போடுவதில் தீவிரமாக ஈடு பட்டிருந்தது.

போலியோவினால் பெருந் துன்பத்திற்காளான 130 குழந்தைகளுக்குச் செயற்கை உறுப்புகள் மற்றும் கால்களில் மாட்டிக்கொள்ளக்கூடிய காலிபர்கள் அளிக்கப்பட்டன. அரசு புனர் வாழ்வு நிலையத்துடன் இணைந்து எம் ஆர் எல் ஏற்றுக் கொண்டுள்ள புனர்வாழ்வுத் திட்டத்தின் பகுதியாக அவ்வப்பொழுது பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப் பட்டன.

கிராம மக்களுக்கு அடிப்படை மருத்துவப் பணிகளை அளிக்கும் வகையில் எம் ஆர் எல் தகுதி பெற்ற டாக்டரைக் கொண்டுள்ள ஒரு மருத்துவ நிலையத்தையும் நடத்தி வருகிறது. ஒரு ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்கும் எண்ணத்தில் எம் ஆர் எல், பசுமையான மரங்களைப் பெருக்கிடத் திட்டமிடப்பட்டப் பணியைச் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் கீழ், சுத்திகரிப்பு ஆலையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் சுமார் 1,00,000 செடிகள் ஏற்கனவே நடப்பட்டு விட்டன.

சக்தியைச் சேமிக்கும் பணியில் :

சக்தியைச் சேமிப்பதற்கான தேசியச் செய்தியைப் பரப்புவதோடு எம் ஆர் எல், கிராமங்களுக்கு மிகவும் ஏற்றத் தொழில் நுணுக்கங்களின் அபிவிருத்திப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அது கோபார் வாயு ஆலைகள் மற்றும் காற்றாலைகளை மணலியில் நிறுவி உள்ளது. மேலும் சக்திக்கான புதிய கண்டுபிடிப்புக்களை கண்காட்சிகள் மற்றும் விஞ்ஞான சம்மேளனங்களில் சோதனை ரீதியாக அறிமுகப்படுத்தி வருகிறது. இங்கு சூரிய அடுப்புகள் மற்றும் வழக்கத்திற்கு மாறான சக்திகளை உபயோகித்து இயங்கும் சாதனங்களைக் காட்சியில் வைக்கிறது.

ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஒரு நேசக்கரம்...


அருகாமையிலுள்ள கிராமங்களிலிருந்து வரும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக எம் ஆர் எல்லால் துவக்கப்பட்டதுதான் 'தி இண்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் சர்வீஸ் சொசைட்டி லிமிடெட்'. இதுவரை ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருந்தோர்க்கும் 'இண்ட்கோசெர்வ்' புதிய வசதிகளை ஏற்படுத்தி தந்துள்ளது—ஆம் 1000 குடும்பங்களுக்குமேல் இதனால் பலனடைந்தனர்.


அதுதான் எம் ஆர் எல்— சுத்திகரிப்புப் பணிக்கும் மேற்பட்டதொன்று அது. மணலியின் வளர்ச்சியில் ஊக்கம் கொண்ட ஒரு பிரஜை.

MRL

மதராஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்

(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
ரிஃபைனரி ஹவுஸ்,
மணலி, சென்னை 600 068.


நமது ஆபீஸ் ப்யூன் பத்து ஆ
கால புரட்சிகரமான பொன்
சேவையைப் பாராட்டி நடத்து
இந்தப் பேரணி வெற்றி!
மாபெரும் வெற்றி!
மெமோ
நியூஸ்
நான் மந்திரின்னு உன் பிள்ளைங்களுக்கு எல்.கே.ஜி.
யூ.கே.ஜி. சிபாரிசுக்கு வந்துட்டே! என் பிள்ளைங்களுக்காக
நானே ஒவ்வொரு சிபாரிசுக்காகப் பறக்கறேன்!
போய்யா!..
நம்ம தஞ்சாவூருக்குப் ப்ளேன் சர்வீஸாம்!.. சிலுக் வந்துடுவாங்க பாரு ஜோலி!
சிலை கிடக்குது!.. தஞ்சாவூர்ப் பெரிய கோயிலையே 'பார்ட், பார்ட்டாக் கழட்டி ப்ளேன்லே கடத்திடுவாங்க!
சரக்கு மாஸ்டர் வேலை கேட்டு வந்தா, 'சத்துணவு கூடத்துலே வேலை பார்த்த யான்னு எப்படி கரெக்டா கேட்டீங்க?


பிள்ளை வரம் வேண்டி வந்தவர்கள் ஆலமரத்தை பிரதட்சணம் வராமல் அப்பிரதட்சணமாகத்தான் சுற்றி வரவேண்டும்!
தமிழக அரசாணை
ஐயோ!.. திருடன்! தொன்னீ! ஹெல்ப்!
காஷியர்
அட என்யா கூச்சல்! திருடனே விட்டுடறே! கணக்குலே பணம் கட்ட வந்தவனைப் பாத்து ஏதுமா கூச்சல் போடறே!
அறிவிப்பு... நாலு இலக்கம் சம்பளம் வாங்கும் அழகான பெண்ணுக்கு வரன் தேவை! லௌகீகாங்களுக்கு நேரில் அணுகுக!.. முகவரி...
சென்ட்ரல் ஸ்டேஷன் டீ.வி.யில் விளம்பரப் புதுமை!
கபில் தேவ் மாதிரி, கரெஸ்பாண்டஸ் கோர்ஸ்லே 21 வது டெஸ்ட் அட்டெம்ப்ட்லே நிச்சயம் பாஸ் பண்ணுவேம்பா!
ஹையா! 'தெலுங்கு கங்கை'க் கிணறு! பத்து குடம் தண்ணி......
பணத்தைக் கொட்டி செலவு பண்ணி கிணறு எடுத்தேன்! ஒரு சொட்டு தண்ணி வரலே! 'தெலுங்கு கங்கை'ன்னு பெயர் வச்சேன்!.. வயத்தெரிச்சல், போய்யா!
தெலுங்கு கங்கை

சர்வே வரிக் கொடுமைக்கு சர்சார்ஜ் வேறு!

17.5.86 பிற்பகல் 3.15க்கு டெல்லி தொலைக்காட்சி நிலையம் 'புதிய கல்விக் கொள்கை' என்ற தமிழ் நிகழ்ச்சியை ஒளி பரப்பியது. மூன்று அறிஞர்கள் கலந்துரை யாடிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் தன் உரையின் இடையே, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்றார். அடுத்தவர் உடனே, திரு வள்ளுவர் மிக அழகாகச் சொல்லியிருக் கிறார் என்று கூறி கணியன் பூங்குன்றனாரை இருட்டடிப்புச் செய்தார். இம்மாதிரி நிகழ்ச் சிக்கு வருபவர்கள் கொஞ்சம் தயாரிப்போடு வந்தால் நன்றாக இருக்குமே!

— ஸி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.

* * *

சமீபத்தில் லாட்ஜ் ஒன்றில் தங்கியிருந் தேன். கடை வீதிக்குப் போய், நான் அறைக் குத்திரும்பியபோது.என் பக்கத்து அறையின், ஜன்னல் வழியாக 'ரூம் பாய்' பார்த்துக் கொண்டிருந்தான்! என்னைக் கண்டதும் நழுவிவிட்டான். நான் அங்குபோய்ப்பார்த்த போது, ஜன்னல் கதவில், ஒரு சிறிய ஓட்டை, உள்ளே நடப்பது நன்கு தெரியும் அளவிற்கு இருந்தது. அந்த அறையில் இளம் தம்பதி யினர் தங்கியிருந்தனர். பிறகு, நான் விவரம் கூறி அவர்களை எச்சரித்தேன். என் அறை யிலும் ஜன்னலில் அதே போல, துவாரம் இருந்தது. வெளியூரில் லாட்ஜில் தங்கும், இளம் தம்பதியினர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

— ஆர். வசந்தகுமார், கும்பகோணம்–1.

* * *

சைக்கிள் 'ஹாண்டில் பாரில்' பையை மாட்டிக் கொண்டு போகும்போது திடீ ரென்று ஒரு இடத்தில் சைக்கிளின் பின் சக்கரம்சுற்றாமல்சிரமப்படும்.கீழே இறங்கிப் பார்த்தால் பின் சக்கரம் ஃப்ரீ வீலில் ஒரு கயிறு சுற்றிக் கொண்டு இறுகிப் போயிருக் கும். அதைச் சிரமப்பட்டு எடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தால் ஹாண்டில் பாரில் இருந்த பை மாயமாய் மறைந்திருக்கும்! இது போன்ற திருடர்கள் மாம்பலம் ரங்கநாதன் தெரு, கிண்டி, ஆலந்தூர் ஆகிய இடங்களில் உண்டு. ஜாக்கிரதையாக இருங்கள்!


— வைரம் ராஜகோபால், சென்னை–61

* * *

தமிழ்நாட்டில் பெரும்பாலான கிராமங் களில் விவசாயிகளிடமிருந்து 'சர்வே செலவு வரி' என்ற பெயரிலே வரி வசூலிக் கப்பட்டு வருகிறது. இந்த வரி, பல தாலூக் காக்களிலும்பலவிதமாகக்கணக்கிடப்பட்டு, பலவித அளவுகளில் நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. சட்ட விதிப்படி, மிகச் சிறிய-தொகை யான 'கூலியும் கல் கிரையமும்' மட்டும் வசூலிக்க சர்க்காருக்கு அதிகாரம் கொடுக் கப்பட்டிருக்க, நம் சர்க்கார் அந்த அதி காரத்தை மிகப் பயங்கரமான முறையிலே துஷ்பிரயோகம் செய்திருக்கிறது. தொழி லாளர் கூலிக்கும், கல் கிரையத்திற்கும் ஆன செலவுகள் பற்றிய கணக்குகள் நியாய மானவையாகவும், உண்மையில் செய்த செலவுகளாகவும் இருக்க வேண்டும். ஆனால் செலவுகள் மிகைப்படுத்தப்பட்டிருக் கின்றனவோ என்று ஐயுறுகிறோம். நடாத கல் நட்டதாகவும், கொடுக்காத கூலி கொடுத்ததாகவும்கணக்குஎழுதப்பட்டிருப்ப தாக கேள்விப்படுகிறோம். மேலும், சர்க்கார் செய்த செலவுகளை மட்டும் வரியாகக் கோர வில்லை. அந்தச். செலவுகளுடன் 300 சத விகிதம் சர்சார்ஜ் என்ற பெயரிலே சேர்க் கப்பட்டிருக்கிறது. அதாவது செலவு தொகை யைப் போல் நான்கு மடங்கு வசூலிக்கப்படு கிறது. சர்வே சட்டத்தில் சர்சார்ஜ் விதிப் பதற்கு எவ்வித விதியும் கிடையாது.

இந்த வரி நீதிக்கும், நேர்மைக்கும் புறம் பானது; சட்டப்படியும் செல்லுபடியாகக் கூடியது அல்லை.— ஸி. குஞ்சாமி, கோவை.

புதிய கோணத்தில் புறநானூறு



புறநானூறு என் கைகளில் புரள்கிறது.
புறநானூறு என்பது — தமிழர்களின்
போர்ப்பரணி!
வணங்காமுடித் தமிழர்களின் வாழ்க்கை
வரலாறு.
உறங்காத உணர்வுகளின் ஊர்வலம்.
ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு.
வில்லோடு நின்றவரை நடுகல்லோடு
நிற்க வைத்த
வெற்றிகளின் கணக்கெடுப்பு.
கல்லாக நின்றவரை கவிதைச் சொல்லாக
நிற்க வைக்கும்
கனவுகளின் படப்பிடிப்பு
புறநானூறு என் கைகளில் புரள்கிறது.
இல்லை.....
புறநானூற்றில் நானே புரள்கிறேன்.

* * * * *

திரும்புகிறேன்.

உயரத்தில் மாட்டப்பட்டிருக்கும் உலக வரைபடத்தில் இந்தியா! இந்தியாவின் கீழே.....

கன்னியா 'குமரி'யின் காலிலிருந்து கழன்று விழுந்த சலங்கையைப் போல் இலங்கை.

எப்போது வேண்டுமானாலும் இந்தியப் பெண் எடுத்துக் கட்டிக் கொள்ளட்டும் என்று தயாராகத் தண்ணீர் தெளித்து வைத்ததுபோல் — தனியாகவே இருக்கிறது!

பாரதம் ஒரு பரதம் ஆட நினைத்தால் போதும் —

ஆயுதமாய் இருக்கும் இலங்கை இந்தியாவின் காலில் ஆபரணமாய் ஆகிவிடும்!

ஆனால் —

ஆசைக்காக அல்ல — ஓர் அவசரத்திற்காகக் கூட — இந்தியா இப்போது ஆடத் தயாராக இல்லை! அதனால் — இலங்கை ஆட்டம்போட்டுக்கொண்டிருக்கிறது.காட்டமான ஆட்டம்!

அன்னிய நாட்டுக் கூலிப்படைகளையும், சொந்த நாட்டின் காலிப் படைகளையும் சேர்த்துக் கொண்டு அரசாங்கமும் ராணுவமும் ஆடுகிற பேயாட்டம்!

இத்தகைய சூழ்நிலையில் —

நெருக்கிக் கொண்டிருக்கும் நெருப்பின் நாக்குகளை நறுக்கிக் கொண்டிருக்கிறார்கள் நமது இளைஞர்கள்! அவர்கள் —

விடுதலைகேட்டுப்போராடிக்கொண்டிருக்கும் வீரர்கள்! அவர்கள் — வெறும் தீவிரவாதிகளல்ல — தீயில் குளிக்கும் தியாக மறவர்கள்!

அவர்கள்தான் —
புறநானூற்றுப் புலிகள்!
போராட வந்த புயல்கள்!
உள்ளத்தில் பெருமித உணர்வுகளோடு உறங்கப் போகிறேன்!

* * * * *

விழித்ததும் செய்தித் தாள்களைத் திருப்புகிறேன்.

கண்களில் கனல் நுழைகிறது. உடலில் ஆயிரம் தேள் வந்து கொட்டுகிறது:

— புலிகளுக்குள் போராட்டம்.
— தமிழ்ப் படைகள் ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டன.
— சபாரத்தினத்துக்குச் சமாதி!

தமிழனே! தமிழனே!
உலகமெங்கும் நீ உதைபடுகிறாயே...
உன்னை நீயே உதைத்துக் கொள்வதென்ன...?

* * * * *

கண்களை மூடிக் கொள்கிறேன். கைகளில் தானாகவே புறநானூறு புரள்கிறது. இப்போது புதிய கோணத்தில் அதன் பொருள் புலப்படுகிறது.

புறநானூறு.....
இணைய முடியாத இதயங்களின் கதை.
மூவேந்தர்களுக்குள் நடந்த மோதல்களின்
தொகுப்புரை.
தமிழன் — ஒருவனை ஒருவன் தகர்த்துக் கொண்டதைப் பற்றி அன்போடு நடத்திய ஆராய்ச்சி..
சோழன் பாண்டியனை உதைத்ததையும், பாண்டியன் சேரனை மிதித்ததையும், சேரன் சோழனைத் துவைத்ததையும் பாருக்கெல்லாம் பகிரங்கப்படுத்தும் பாட்டுப் பட்டியல்!
இப்போது எனக்குப் புறநானூறும்
புரிகிறது....
'புறநானூற்றுத் தமிழர்களின் ரத்த ஓட்டத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது!

* * * * *

பக்கம் பார்த்துப் பேசுகிறேன்

மு. மேத்தா

"உன் அங்கங்கள் என்ன
ஆக்டோஃபஸா?
தன்
கவர்ச்சிக் கரங்களால்
என்னைக்
கசக்கிப் பிழிகின்றனவே!"

நடிகை ராணிஸ்ரீக்கு வரும் ரசிகர் கடிதங்களில் ஒன்று இது. தினமும் இப்படி ஆயிரம் ஆயிரமாக அவளுக்கு வரும்.

நடிகை ராணிஸ்ரீ, தக்காளிப் பழத்துக்கும், கொவ்வைக் கனிக்கும் பிறந்தவள் என ரசிகர்கள் உயிரை விட்டனர்.

அவளுக்கு உடம்பெல்லாம் இளமை இதமாக ராகம் பாடியது; அதுவும் உச்ச ஸ்தாயியில்!

3 – D படத்தில் தோன்றி அ(ர)ங்கம் முழுவதையும் நிரப்பிவிட்டாள் ராணிஸ்ரீ. ரசிகர்கள் திணறிவிட்டனர்.

அவளின் ஒவ்வொரு உறுப்பும் ஒரு காவியம்.

முக்கியமாக அந்த மூக்கு....

அதைப் பற்றித்தான் இப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது.

சினிமா உலகமும், ரசிகர் மன்றங்களும், பத்திரிகைகளும் இதைப் பற்றியே காரசாரமாக விவாதித்தன.

ஒரு சாரார் 'ஆமாம்' என்றனர். எதிராளி கோஷ்டியினர் 'இல்லை' எனக் கடுமையாக மறுத்தனர்.

இதுதான் சங்கதி.

நடிகை ராணிஸ்ரீ தனது மூக்கைப் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் புது விதமாக வடிவமைத்துக் கொண்டதாக வதந்தி. அதற்காக ரகசிய அமெரிக்கப் பயணம் மேற்கொண்டதாகவும் கூறப்பட்டது.

பழைய (மூக்கின்) புகைப்படத்தையும், புதிய (மூக்கின்) படத்தையும் ஒன்றாகப் பிரசுரித்து வதந்தியை நிரூபிக்க முயன்றது ஒரு வாரப் பத்திரிகை. நாட்டிற்கு மிகவும் முக்கியமான விஷயம் பாருங்கள்!

"இது கேமரா ட்ரிக்ஸ்தான். மற்றபடி அதே மூக்குதான்."

"அதுதான் இல்லை. உற்றுப் பார்த்தால் வித்தியாசம் தெரியும்."

— இப்படி கடுமையான ஆராய்ச்சி வேறு.

"பழைய மூக்கே அழகாக இருந்தது. புதிய மூக்கு சரியில்லை. கொஞ்சம் கோணல்" இப்படி விமரிசித்தது ஒரு சினிமா பத்திரிகை.

"மூக்கு மட்டுமா கோணல், வாழ்க்கையும்தான்" என்று கிசுகிசுத்தது 'ஒரு மாதிரி'யான பத்திரிகை.

"மூக்கு மட்டும் கெட்டுவிடவில்லை. அதனோடு சேர்ந்து ராணிஸ்ரீயின் நடிப்பும் கெட்டுவிட்டது" என ஒரு வாசகர் கடிதம் ஒப்பாரி வைத்தது.

"ஆமாம், முன்னைப் போல இப்போதெல்லாம் நடிகை ராணிஸ்ரீ ஒத்துழைப்பு கூட தருவதில்லை என இண்டஸ்ட்ரியலில் பேசிக் கொள்கிறார்கள். இனிமையாகப் பழகும் தன்மையுடையவர், மூக்கு ஆபரேஷனுக்காக அமெரிக்கா சென்று வந்ததிலிருந்து



★ நடிகையை



மிஞ்சிய நடிகை

காரணமின்றிச் சிடுசிடுப்பாக நடந்து கொள்கிறார்'' — இது மற்றொரு பத்திரிகையின் குற்றச்சாட்டு.

இந்த மூக்கு விஷயத்தை ராணிஸ்ரீ இது வரை ஏற்றுக் கொள்ளவுமில்லை. எதிர்த்ததும் கிடையாது.

இதனால் அவளுக்கு நல்ல பப்ளிசிட்டி தான் கிடைத்தது. அதனால் அவளின் படங்கள் முன்பைவிட அதிக பரபரப்பாக ஓடின.

'பிரபலத்துக்குக் காரணம் புதிய மூக்கின் ராசியா, அல்லது டூ—பீஸ் நீச்சல் உடையின் மகத்துவமா?' — இப்படியொரு கவர்ச்சியான பட்டிமன்றத்தை ரசிகர்கள் தெருத் தெருவாக, டீக்கடை டீக்கடையாக நடத்தினர்.

நிலைமை இப்படியிருக்க, ராணிஸ்ரீயின் மூக்கு ரகசியத்தை உடைப்பதில் நிருபர்கள் அயராது உழைத்தனர்.

'அந்தப் புகழைப் பெறப் போவது யாரோ?' என நிருபர்களுக்குள் ஆவலும், போட்டியும் கனலாகப் புகைந்து கொண்டு இருந்தன.

நிருபர்கள் நடிகையிடம் அது பற்றி நேரடியாகவும், மறைமுகமாகவும் கேட்டு நச்சரித்தனர்.

தொந்தரவு தாங்காமல் ராணிஸ்ரீ பல நாட்கள் தலைமறைவாகிவிட்டதாக ஒரு செய்தி.

கடைசியில் அந்தப் புகழைத் தட்டிச் சென்றார் ஒரு நிருபர்.

தான் அமெரிக்காவில் மூக்கு ஆபரேஷன் செய்து கொண்டதாக ராணிஸ்ரீ ஒப்புக் கொண்டதாகச் செய்தி வந்தது.

நச்சரிப்புத் தொல்லை தாங்காமல் ஆஸ்பத்திரியின் பெயரைக்கூட ராணிஸ்ரீ கூறும்படி செய்துவிட்டார் அந்தத் திறமை மிக்க நிருபர்.

ஆக, ஒருவழியாக ரகசியம் விடுபட்டது. பல மாதங்களுக்குப் பிறகு பழசாகியும் விட்டது.

அந்த போயிங் விமானம் அமெரிக்க மண்ணில் நங்கூரமிட்டு நின்றதும் முதலில் இறங்கியவர் டாக்டர் சுந்தர்நாத்தான்.

பிரபலமான டாக்டர் அவர், தேசிய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் முக்கியமான உறுப்பினர்.

பல மருந்துக்களுக்கு ஃபார்முலா கண்டு பிடித்தவர்.

அபாயகரமான ஆபரேஷன்களை மட்டும் 'அட்டண்ட்' செய்ய அழைக்கப்படுபவர். மருத்துவ மகாநாடுகளில் கலந்து கொள்வதற்காக அடிக்கடி நாடு நாடாய் சுற்றுபவர்

நடிகை ராணிஸ்ரீயின் பரம ரசிகர்.

ராணிஸ்ரீ சொன்னால் உயிரையும் விட்டு விடுவார்.

அவளின் நடிப்புத்தான் அவள் மீது தன்னைப் பித்து கொள்ள வைத்துவிட்டது என அவர் வெளியே கூறினாலும், பித்துக்குக் காரணம் நிச்சயமாக 'வேறு' தான்.

ஒரு முக்கியமான மகாநாட்டில் கலந்து கொள்ள அவருக்கு அழைப்பு வந்தது. அதில்

கலந்து கொள்ளவே இந்த அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டிருந்தார் டாக்டர் சுந்தர்நாத்.

அமெரிக்க விமான நிலையத்தில் கார் காத்திருந்தது. ஏறினார். போனார். உலகெங்கும் இருந்து பல மருத்துவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

ஜேம்ஸ் என்ற அமெரிக்க மருத்துவர், சுந்தர்நாத்தின் நண்பரானார். அவர் வேலை செய்யும் மருத்துவ மனையின் பெயரைக் கேட்டதும் டாக்டர் சுந்தர்நாத்திற்கு ஓர் இனிமையான அதிர்ச்சி.

தான் மூக்கு ஆபரேஷன் செய்துகொண்டதாக ராணிஸ்ரீ கூறிய ஆஸ்பத்திரிதான் அது.

ஜேம்ஸ் அதன் தலைமை மருத்துவர். எனவே அவர்தான் அவளுக்கு ஆபரேஷன் செய்திருக்க வேண்டும். நடிகை ராணிஸ்ரீ பற்றி நாசூக்காகக் கேட்டார் சுந்தர்நாத்.

"அப்படியொரு நடிகை எங்கள் ஆஸ்பத்திரிக்கே எதற்காகவும் வரவில்லையே" என அடித்துக் கூறினார் ஜேம்ஸ்.

சுந்தர்நாத்துக்கு லேசான அதிர்ச்சி. அப்படியென்றால் ராணிஸ்ரீ ஏன் பொய் சொல்ல வேண்டும்?

சிந்தனையில் சுழன்றார் சுந்தர்நாத்.

அந்த மகாநாட்டுக்கு எல்லா அமெரிக்க மருத்துவமனைகளில் இருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

அனைவரையும் சுந்தர்நாத் சிரத்தையெடுத்து விசாரித்தார்.

அப்படியொரு பெண் வரவில்லை என அனைவரும் கூறிவிட்டனர்.

இந்தியா திரும்பியதும் மற்றொரு தேசிய மகாநாடு நடந்தது. அங்கும் தன் விசாரணையை சுந்தர்நாத் நடத்தினார்.

முடிவில் உள்நாட்டிலும் ராணிஸ்ரீ மூக்கு ஆபரேஷன் செய்யவில்லை என ஊர்ஜிதமானது.

மூன்று நாட்களாகத் தூக்கமும், உணவும் இன்றி அவதிப்பட்டார் சுந்தர்நாத்.

அவர் எதிரே வித்தியாசமான மூக்குகளுடன் இரண்டு ராணிஸ்ரீக்கள் போட்டோத்தனமாகச் சிரித்தனர்.

இரண்டு புகைப்படங்களையும் உற்று நோக்கினார் சுந்தர்நாத்.

பழைய மூக்குடன் கூடிய முகத்தில் இளமையும், இனிமையும் பிரகாசித்தன. புதிய மூக்குடன் போஸ் கொடுத்திருந்த ராணிஸ்ரீயின் முகத்தில் அவை முழுமையாக இல்லையென்பது அவர் மனத்துக்கு உறைத்தது.

உஷாரானார்.

வேறு வழியின்றிப் போலீசில் புகார் செய்து, தமது சந்தேகத்தையும் கூறினார்.

பிரபல டாக்டரின் புகாரைச் சிரத்தையோடு ஏற்றது போலீஸ் இலாகா.

விசாரணை பரபரப்பாக நடந்தது.

முடிவில் 'ராணிஸ்ரீ' கைது செய்யப்பட்டாள்.

துப்புத் துலக்கியதில் வெளி வந்த திடுக்கிடும் விஷயங்களாவன:

நடிகை ராணிஸ்ரீ கொலை செய்யப்பட்டுப் பல மாதங்கள் ஆகிவிட்டன.

நடிகையின் வீட்டுத் தோட்டத்திலிருந்தே அவளின் பிணம் அழுகிய நிலையில் தோண்டி எடுக்கப்பட்டது.

கொலை செய்தவள் ராணிஸ்ரீயின் பெரியப்பா மகள் சுபா.

அவள் தோற்றத்தில் அப்படியே ராணிஸ்ரீயை உரித்து வைத்தது போல இருப்பாள். பண ஆசையும், சுகபோகத்தில் அவளுக்கிருந்த தாகமும் அவளை கொலைகாரியாக்கி விட்டன. தங்களின் உருவ ஒற்றுமையைப் பயன்படுத்திச் சதித்திட்டம் தீட்டினாள் சுபா.

அதன்படி தன் காதலனுடன் ஊரை விட்டு ஓடினாள். இருக்கும் இடமே தெரியாமல் மறைந்து போனாள். எல்லாம் ஒரு செட்—அப்தான். சதித் திட்டத்தின் முதற் கட்டம் இது.

பல மாதங்கள் கழிந்தன.

ஒருநாள் இரவு ரகசியமாக ராணிஸ்ரீயின் பங்களாவுக்கு வந்தாள். திட்டமிட்டபடி வேலைக்காரனின் உதவியோடு நடிகை ராணிஸ்ரீயைப் படுக்கை அறையில் கொலை செய்தாள். பிணத்தைத் தோட்டத்தில் புதைத்தாள்.

விடிந்ததும் சுபா, ராணிஸ்ரீயாக மாறிச் செயல்பட்டாள்.

சாமர்த்தியமாக யாவரையும் ஏமாற்றியவள், ராணிஸ்ரீயின் ரசிகர்களிடம் ஏமாந்துவிட்டாள்.

சுபாவே கவனிக்காத மூக்கு வித்தியாசத்தை, ரசிகர்கள் திரையில் பார்த்தே கண்டுபிடித்துவிட்டனர்.

திடுக்கிட்டாள் சுபா. யோசித்தாள்.

'மூக்கு ஆபரேஷன்' என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டாள்.


ஆனால்....

இப்போது சுபா தூக்குத் தண்டனைக்காகக் காத்திருக்கிறாள்! டாக்டர் சுந்தர்நாத் தற்போது மனநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கேள்வி.

பிரயாணி: எப்பவும் மீட்டருக்கு மேலே அதிகமா கேட்கறீங்களே; அப்புறம் எதுக்கு மீட்டர் இருக்கு?

டாக்ஸி டிரைவர்: சும்மா, மீட்டர்னு ஒண்ணு இருந்தால்தானுங்களே அதுக்கு மேலே கேட்க முடியும்?

— ஈ. எஸ். ஆர். சாதிக்பாஷா.



பாரதி புதையல்

கல்கி-வானதி பரிசுத் திட்டம்

'பாரதி புதையல் பெருந்திரட்டு' — விடுவி விடுப் போட்டி முடிவுகள்:

முதல் பரிசு ரூ 1000/– (ரூ 500 வீதம் இருவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது)

பரிசு பெறுவோர்:

இ. பாலசுப்ரமணியன்
முதுகலைத் தமிழாசிரியர்
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
வெள்ளியணை 639 118.

திருமதி பவானி ராமஸ்வாமி,
2/3, Type III,
Westland,
Khamaria,
Jubalpur 482 005.

இரண்டாவது பரிசு ரூ 600/–

ரூ. 200 வீதம் மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பரிசு பெறுவோர்:

திருமதி லலிதா துரைசாமி
W/o. P. துரைசாமி,
3, வ.உ.சி. முதல் தெரு,
இராசிபுரம் 637 408
சேலம் மாவட்டம்

நீரஜா மூர்த்தி,
'ஸ்ரீநிவாஸ்'
11, 9வது கிராஸ்,
ஹனுமந்தா நகர்,
பெங்களூர் 560 019.

ஆர். பி. சாரதி,
'ஸ்ரீராகவம்'
3C, ஜெயராமன் தெரு,
இலக்குமிபுரம்,
குரோம்பேட்டை,
சென்னை 600 044.

மூன்றாவது பரிசு ரூ 501/–

ரூ 167 வீதம் மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பரிசு பெறுவோர்:


கே. என். லலிதா,
8, குஹாலயம்,
கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாவரம், சென்னை 600 023.

ஜி. தேன்மொழி
D/o. எம். கோவிந்தராஜன்,
45, கிழக்கு தெரு,
திருவிடைமருதூர்,
612 104 தஞ்சை மாவட்டம்.

கே.எஸ். சுகுமார்
'காவேரி' பிளாட் எண்: 181,
ஸ்ரீஸாயி நகர்,
விருகம்பாக்கம், சென்னை 600 092.







ஸ்கூல் விட்டு வீட்டுக்கு வந்தபோது ஏகமாய்க் களைப்பாயிருந்தது தாராவுக்கு. நாற்பத்தி எட்டு மாணவர்களின் நோட்டுப் புத்தகங்கள் இடக்கையைக் கனமாய் அழுத்த அவற்றை ஜாக்கிரதையுடன் மேஜை மேல் வைத்தாள். தன்னையும் அறியாமல் முகம் பார்க்கும் கண்ணாடியின் பக்கம் கண்கள் சென்றன. அடேயப்பா! களைப்பிலும்கூடத் தான் இத்தனை அழகாகவா இருக்கிறோம் என்று ஒருகணம் மனசு பெருமிதப்படத்தான் செய்தது.

"தாரா ஒரு நிமிஷம்...." ஈஸி சேரில் சாய்ந்து மும்முரமாய் ஏதோ ஓர் ஆன்மீகப் புத்தகத்தைச்சிரத்தையாய்ப்படித்துக்கொண்டிருந்த சிவபாதம் இவள் பக்கம் திரும்பிக் கனிவான குரலில் அழைத்தார்.

"என்னப்பா?" என்று கடிகாரத்தைக் கழற்றியவாறு கேட்டாள் தாரா.

"வந்தும்மா.... உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.... டிபன் காப்பி சாப்பிட்டப்புறம் ஒரு பத்து நிமிஷம் எனக்காக ஒதுக்கணும்.... முடியுமாம்மா?"

ஒரு டீச்சர் டெஸ்ட் வைத்த போது!

வேதா கோபாலன்



கடிகாரத்தைப் பார்த்தாள். டியூஷன் குழந்தைகள் வருவதற்கு இன்னும் முழுதாய் அரை மணி நேரம் இருக்கிறது. அதற்குள் அப்பாவுக்குத் தாராளமாக அவளால் பத்து நிமிடங்கள் ஒதுக்க முடியும்.

அடுத்த கால் மணி நேரத்தில் தன் வேலைகளை முடித்துக் கொண்டு கையைத் துடைத்தவாறு அப்பாவின் எதிரில் வந்து உட்கார்ந்தாள். ஏதாவது பேசியாக வேண்டுமே என்று நினைத்தவள் போல, ''அம்மா இன்னிக்கு அட்டகாசமாய் அடை தட்டியிருக்கா இல்லை....'' என்று புன்னகையுடன் கேட்டாள்.



அதற்குள் நேர்த்தியாய் முகம் கழுவிப் பொட்டு இட்டுக் கொண்டு பளிச்சென்று வந்து உட்கார்ந்திருக்கும் தங்க பிம்பத்தைப் பெருமிதத்துடன் பார்த்தார் அந்தத் தந்தை.

''ஹூம்.... இத்தனை அழகாய் இருக்கே... உனக்கொரு மாப்பிள்ளை அகப்பட மாட்டேன்கறான். தாமுவோட பொண்ணை உன் கால்ல கட்டி அடிக்கணும்... அதுக்குப் போயி அருமையான வரன் குதிரப்போறது...'' என்று பெருமூச்சுடன் சொன்னார்.

தாமு என்கிற தன் நண்பர் தாமோதரனைப் பற்றி அப்பா அடிக்கடி பேசிக் கேட்டிருக்கிறாள். அவரையோ, இப்போது அப்பா குறிப்பிட்டுப் பேசும் அவரது மகளையோ, தாரா நேரில் பார்த்ததில்லை. அவள் பெயர் கூட என்னவென்று தெரியாது. இப்போது எதற்காக இவ்வளவு அங்கலாய்ப்புடன் அப்பா அவர்களைப் பற்றிப் பேசி இவ்வளவு அலுத்துக் கொள்ள வேண்டும்?

''அந்தப் பொண்ணுக்கு வரன் வந்திருக்காம். மாப்பிள்ளை ரொம்ப நல்லவனாம். பெண்ணைக் கடைக்கண்ணில் பார்த்துவிட்டு ஓ.கே. சொல்லிட்டான்னா பார்த்துக்கோயேன். ரொம்ப டிமாண்ட் செய்யாத குடும்பம்னு தாமுவுக்குத் தோணுதாம். அது விஷயமாய் இப்போ உன் உதவி வேணும்...''

பகீரென்றது தாராவுக்கு. யாரோ ஒருத்தியின் கல்யாண விஷயத்தில் இவள் எப்படி உதவ முடியும்? இத்தனைக்கும் அவளுக்கே வரன் வந்தால்கூடத் தப்பித் தவறியும் வீட்டில் டிஸ்கஸ் பண்ணிவிடாத அப்பாவே இப்படிப் பிரஸ்தாபிக்கிறாரே!

''வந்து.... உன் ஸ்கூல்ல நாலாம் கிளாஸ் 'பி' செக்ஷன்ல சரண் அப்படின்னு ஒரு மாணவன் இருக்கானாமே! அந்தக் குழந்தைக்கு மாமாவாம் இந்தப் பிள்ளை விவேக். நைஸா எப்படியாவது பிள்ளை எப்படிப்பட்டவன்னு விசாரிச்சுச் சொல்லணும். முடியுமானால் அந்த விவேக்கிடம் நேரில் பேச முயற்சி பண்ணி அவனைப் பத்தின கணிப்பைச் சொல்லணும். தாமு என்கிட்டே ரிக்வெஸ்ட் பண்ணிக்கிட்டான்...''

அப்பாடா! இவ்வளவுதானே? நாலாம் கிளாஸ் 'பி' செக்ஷன் என்பது அவள் தமிழ் எடுக்கும் வகுப்பு. அந்த சரண் என்னும் பையன் படுசூட்டிகையானவன். ஒரே ஒருநாள் கொட்டும் மழையில் ஸ்கூட்டரும் குடையுமாய் வந்து வகுப்பிலிருந்து தன் மருமானை அழைத்துக் கொண்டு போவதற்காக வந்திருந்தான் அந்த மனிதன். ஆனால் அவனின் முகம்கூட இப்போது அவளுக்கு நினைவில் நிற்கவில்லை.

''நான் தமிழ் எடுக்கிறேன்பா அந்த சரண் கிளாஸுக்கு. ரொம்ப சுலபமான வேலை தான் குடுத்திருக்கீங்க. சரியாய் ஒரே ஒரு வாரம் டைம் குடுங்க. அந்த.... அவன் பேர் என்ன.... விவேக்.... அவனைப் பற்றி முழு விவரமும் கொண்டு வந்து உங்களண்டே கொட்டிடறேன்'' — பெருமிதமாய்ச்

சொன்னவாறு எழுந்து கொண்டாள். டியூஷன் மாணவர்கள் ஒவ்வொருவராய் வர ஆரம்பித்துவிட்டார்கள்.

அடுத்த நாளிலிருந்தே அப்பா கொடுத்த வேலையில் முழுமூச்சாய் இறங்கி விட்டாள் தாரா. அவளிடம் உள்ள நல்ல குணம் அதுதான். யாராவது ஏதாவது வேலையை அவளிடம் சர்வ சாதாரணமாய் ஒப்படைத்துவிட்டால் கூடப் போதும். அதைப் பெரும் பொறுப்பாய் ஏற்றுக் கொண்டு, மும்முரமாய்ச் செய்து முடித்து விடுவாள். ஏனோதானோவென்று நாலு பேரிடம் விசாரித்து அவள் சொல்லியிருக்கலாம். ஆனாலும் அப்படிச் செய்ய அவளின் பொறுப்புணர்ச்சி இடம் கொடுக்கவில்லை. தன்னிடம் இடப்பட்ட பணியைச் செம்மையாய்ச் செய்ய விரும்பினாள். அவள் அதிர்ஷ்டமோ என்னவோ, அடுத்த நாளே சரணின் பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பற்றிப் பேச அந்த மனிதன் விவேக்கே வந்து சேர்ந்தான்.

அழகாய் இருந்தான். பளீரென்று சிரித்த போது சின்னதாய் மூக்கினடியிலிருந்த மீசைக்கும், சிவந்த உதட்டுக்கும் இடையில் இருந்த மச்சமும் சேர்ந்து சிரித்தது. குரலில் இருந்த மென்மை அவனை இன்னும் கண்ணியமானவனாய்க் காண்பித்தது. ஒருகணம் அந்தச் சாரதாவை நினைத்துப் பொறாமையாய்க் கூட இருந்தது தாராவுக்கு.

''மிஸ்டர்.... இந்தச் சரண் தொடர்ச்சியாய் முதல் ராங்க் எடுக்கிறவன்தான். ஆனாலும் கடந்த இரண்டு மூன்று தடவையாய் ரொம்ப மோசமான மார்க்ஸ். முதல் ராங்க்கிலிருந்து ரொம்பவும் பின்னாலே போயே போயிட்டான். இதுபத்தி உங்ககிட்டே தனியாய்ப் பேசணும். கொஞ்சம் வெளியே வர முடியுமா?'' அவனைச் சோதிக்க அவள் செய்யப் போகும் முதல் டெஸ்ட் இது! அதை அறியாமல் அப்பாவித்தனமாய் அவனும் மரத்தடிக்கு அவளுடன் வந்தான்.

''உங்க மருமான் படிப்பில் குறைஞ்சு போய் ,மார்க்கு கம்மியாய் வாங்கலே.... இங்கே நிறைய பாலிடிக்ஸ். இதையெல்லாம் சரிக்கட்டி சரண் ஃபர்ஸ்ட் ராங்க் வாங்க வைக்கிற சாமர்த்தியம் என்கிட்டே இருக்கு. ஆனால், அதுக்கு ஒரு நூறு ரூபாய் செலவாகும். தந்தீங்கன்னா உங்க மருமான் மெடல் கூட வாங்குவான் பாருங்களேன்...'' காதிலுள்ள பொன்வளையம் ஊஞ்சலாடத் தலையாட்டியவாறு உற்சாகமாய்ப் பேசினாள். இதற்கு அவன் என்ன சொல்கிறான் என்பதைப் பொறுத்துத்தானே அவள் கணிப்பு இருக்கப் போகிறது!

விவேக்கின் முகம் கறுத்துச் சிறுத்தது. ''ச்சே.... என்ன இப்படிக் கேட்கறீங்க... இப்படிப் பணம் கொடுத்துத்தான் என் மருமகன் ராங்க் வாங்கணும்னா, அவன் கடைசி ராங்க் எடுத்தால்கூட அது நேர்மையாய் எடுத்ததுன்னு நாங்க சந்தோஷப் பட்டுப் போம். இந்த லஞ்சம் குடுக்கல் வாங்கல் எதுவுமே எனக்குப் பிடிக்காது. ஐயம் சாரி, வரேன்...'' என்று சொல்லிவிட்டு அவன் எரிச்சலுடன் கிளம்பிப் போனான்.

அவள் அவனுடைய ரியாக்ஷனை மனத்துக்குள் குறித்துக் கொண்டாள்! தேவலே. நல்ல மனிதனாய்த்தான் தோன்றுகிறான். ஓர் இளம் பெண் குழைந்து குழைந்து பேசினால் கூட உறுதியாய் இருக்கிறானே! இது பெரிய ப்ளஸ் பாயிண்ட்தான். மற்றும்சிற்சில சின்ன விவரங்களை சரண் மூலமாய் விசாரித்துத் தெரிந்து கொண்டாள்.

நாலாம்கிளாஸ்குழந்தை என்ன பெரிதாய் விவரங்கள் சொல்லிவிடப் போகிறது என்று நினைத்துதான் கேட்டாள். பயல்மகா கெட்டிக்காரன். தன் மாமா வெளியில் சுற்றாதவராம். வீடே கதி என்று கிடப்பாராம். டி.வி.யில் சினிமா பார்ப்பதுடன் சரியாம். வீட்டில் செய்யும் டிபன்தான் மிகவும் பிடிக்குமாம். நிறையச் செலவு பண்ண மாட்டாராம். அவசியமான செலவை நிறுத்தவும் மாட்டாராம். அடேயப்பா! இந்தக் காலத்துக் குழந்தைகள் எத்தனை சுறுசுறு!

விவேக் பற்றிக் கேள்விப்பட்ட, நேரில் அறிந்த சமாசாரங்கள் அவளை மிகவும் வியப்பில் ஆழ்த்தின. சாரதா அதிர்ஷ்டசாலிதான். முன்பின் பார்த்திராத அந்தப் பெண் மீது மெல்லிய பொறாமைகூடப் படர்ந்தது. அழகானவன் மட்டுமல்லாது இத்தனை குணமுள்ளவன் புருஷனாய் வாய்க்க அவள் கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும். கலகலப்பாய்ப் பேசுகிறான். அவளைப் பார்த்துச் சம்மதமும் சொல்லிவிட்டான். இவனை வேண்டாம் என்று நிச்சயம் அவர்கள் சொல்ல முடியாது!

அன்றைக்குமாலைஸ்கூல்விட்டுவீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத வகையில் சளசளவென்று பெரிதாய்ப் பெய்ய ஆரம்பித்த மழைக்குப் பயந்து அவள் கண்ணில் பட்ட வீட்டுக்குள் நுழைந்தபோது, அது எதேச்சையாய் விவேக்கின் வீடாக இருக்கும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. 'அங்கிளுக்குத் தனியாய் ஃப்ளாட் இருக்கு' என்று மத்தியானம் சரண் சொன்னது நினைவுக்கு வந்தது. இந்த அபார்மெண்ட்ஸ் வழியாய் எத்தனையோ தடவைகள் அவள் போயிருக்கிறாள்.

ஜன்னல் பக்கத்தில் பனியனும் லுங்கியுமாய் அமர்ந்து வேர்க்கடலை கொறித்துக் கொண்டிருந்தவன், தாரா முழுவதுமாய் நனைந்து வராந்தாவில் ஒதுங்கினதைப் பார்த்துப்பதறி எழுந்தான். உபகார சிந்தனை மிகுந்தவன் போலும். ''உள்ளே வாங்க மேடம். இந்தாங்க டவல். தலையைத் துடைச்சுக்குங்க....'' என்று டவலைக் கொடுத்தவன், சர்வ ஜாக்கிரதையாய் வாசற் கதவை விரியத் திறந்து வைத்தான். மனத்துக்குள் இன்னொரு பிளஸ் மார்க் போட்டுக் கொண்டாள்.

தனக்கு முதுகைக் காண்பித்துக் கொண்டு மழையைப் பார்த்தபடி நின்றவனின் பக்கம் அவள் பார்வை நிலைகுத்தியிருந்தது. 'எத்தனை கண்ணியமானவன்! அதோடு எத்தனை

அழகானவன்....!' அவள் மனம் சில கணங்களுக்குத் தறிகெட்டு ஓடிவிட்டது. இவன் மட்டும் தனக்குக் கணவனாக வாய்த்துவிட்டால்....

அவளையும் அறியாமல் வெளிப்பட்ட ஏக்கப் பெருமூச்சு மழையின் ஓசையை மீறி அவன் செவிகளுக்குஎட்டியிருக்கவேண்டும்.

சட்டென்று திரும்பியவன் அவள் பார்வையில் தெரிந்த ஆதங்கத்தைப் புரிந்து கொள்ளத் தவறவில்லை.

எதிர்பாராத விதமாய்ப் பிடிபட்ட தாரா அவனது பார்வையின் கடுமை தாளாமல் தலை குனிந்தாள்.

மழை நின்றுவிட்டிருந்தது. ''வரேன் மிஸ்டர் விவேக். ரொம்ப தாங்க்ஸ். டவலை, டவல் ராடில் போட்டிருக்கேன்'' என்று சொல்லிவிட்டுப் படியிறங்கி நடந்தாள். தவிர்க்க முடியாதவளாய் ஒருதடவை அவன் நிற்பதைத் திரும்பிப் பார்த்துவிட்டுப் போனாள்.

சரியாய் ஒரு வாரம் முடிந்துவிட்டது. இன்றைக்கு அப்பா அவள் அபிப்ராயத்தைக் கேட்கப் போகிறார். அவளுக்கு மனத்துக்குள் ஏதோ அடைப்பதைப் போலச் சங்கடமாய் இருந்தது. யாரோ ஒருத்திக்காக அத்தனை அக்கறையாய் விசாரித்ததில் மனம் கெட்டுப் போனதுதான் மிச்சம். ச்சே. தன் மனம் எவ்வளவு கேவலமாய் வேலை செய்கிறது. இன்னொருத்திக்குப் புருஷனாய் ஆகப்போகிறவன் என்று தெரிந்தும் அவனைப் பற்றி இவ்வளவு ஏக்கத்துடன் செயல்படுவது மட்டமான செயலல்லவா....

''என்னம்மா தாரா.... உனக்குக் கொடுத்த வேலையைப் பொறுப்பாய் முடிச்சாச்சா.... வா... இப்படி வந்து உட்காரு. அந்த விவேக் பத்தி சொல்லு....'' என்றார் சிவபாதம்.

''அவர்.... அவர்.... தங்கமான மனுஷர். அவரைக் கல்யாணம் பண்ணிக்க அந்தச் சாரதா ரொம்பக் குடுத்து வெச்சிருக்கணும். ஒரு கெட்டப் பழக்கமோ, கெட்ட குணமோ கூடக் கிடையாது....'' என்று சொன்னபோது குரல் தழுதழுத்தது.

''வெரிகுட். அப்போ அவனை உனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்றே.... யாரோ ஒரு சாரதாவுக்காக வேலை மெனக்கெட்டு உனக்கு அந்த வேலையைக் குடுக்கலேம்மா! உன்னை ஸ்கூலில் பார்த்துவிட்டுச் சம்மதம்னு சொன்ன விவேக்கை நீயும் நன்னா புரிஞ்சுக்கத்தான் இந்த ஏற்பாடு செய்தேன். திருப்தியா....?'' என்று தந்தை கேட்டபோது திக்குமுக்காடித்தான் போய்விட்டாள் தாரா.

ஆனால் —

அடுத்த நாள் சிவபாதம், விவேக்கைப் பார்த்துத் தன் மகளின் சம்மதத்தைத் தெரிவித்துத் தான் அவனை டெஸ்ட் செய்யச் சொல்லி மகளிடம் சொன்னதைக் குறிப்பிட்டபோது —

''மன்னிச்சுக்குங்க சார்.... முதலில் உங்க மகளின் புற அழகைப் பார்த்துச் சம்மதம்னு சொன்னதுக்கு நான் ரொம்பவும் வருத்தப்படறேன். அவங்களோட பிஹேவியர்ஸ் என்னைப் பயமுறுத்திவிட்டது. ஐயம் வெரி ஸாரி....,'' என்று தெளிவாய்ச் சொன்னான் விவேக். ''என்னதான் ஒரு மனுஷனை டெஸ்ட் பண்ணணும்னாலும் இத்தனை கேவலமாய் உங்க பெண் நடந்துக்கிட்டிருக்கக் கூடாது!'' என்று சொன்னதைக் கேட்டு அடித்து வைத்த கற்சிலையாய் நின்றார் சிவபாதம்.





லஞ்ச் டைம்

8

(சாப்பாட்டு மேஜையில் ராகவாச்சாரியைத் தவிர வேறு எல்லோரும் கூடியிருக்கிறார்கள்.)

பாண்டி: என்ன, ஜி.எம்.மைக் காணோம் இன்னும்? எம்.டி.யை மட்டும்தானே 'கிட்நாப்' பண்றதா நிர்மலா சொன்னா? ஜி.எம். ராகவாச்சாரியையும் சேர்த்து 'கிட்நாப்' பண்ணிட்டாளா, அவ பேட்டை ஆளுங்க?



ஆனந்த்: ஆமா, பேச்சுத் துணைக்கு அவரும் இருக்கட்டும்னு ரெண்டு பேரையும் ஒண்ணா தள்ளிட்டுப் போய்ட்டாங்க போலிருக்கு!

ரகுவீர்: மாடசாமி, நிர்மலா இன்னிக்கு வந்திருக்காளா இல்லியா? எனக்கு ஏண்டாப்பா இவகிட்ட எல்லாம் இதைப் பத்திச் சொன்னேம்னு இருக்கு!

(ராகவாச்சாரி அவசரம் அவசரமாக உள்ளே நுழைகிறார்.)

ராகவா: மாடசாமி, இன்னிக்கு நான் கையிலே ஒண்ணும் எடுத்துண்டு வரலே. ஓடிப் போய் ஒரு மசால் தோசையோ, சப்பாத்தியோ வாங்கிண்டு வா.

சாம்ப: என்ன சார், எம்.டி.க்கு விஷயத்தைச் சொல்லிட்டேளா?

ராகவா: எதை? ம்ஹும்.... என்ன சொல்றேள் நீங்க?

சாம்ப: அதான்.... அவரை 'கிட்நாப்' பண்ண நிர்மலா பிளான் பண்ணினதை! முன்னாலயே நீங்க அவர்கிட்டே சொன்னாத் தானே பாவம் அவர் டிரஸ், சாப்பாடு எல்லாத்தோடயும் தயாரா இருப்பார்?

ராகவா: நீங்க என்னை என்ன சொன்னாலும் சரி. நிர்மலாவோட ஐடியா எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலே. அதுவும் அவளோட ஆளுங்களைப் பார்த்தா எனக்குக் கதி கலங்கறது. ஒண்ணு கிடக்க ஒண்ணைப் பண்ணினாங்கன்னா அத்தனை பேருக்கும் உத்தியோகம் கோவிந்தா! அதனாலதான் அவரை 'வார்ன்' பண்ணிட்டு வந்தேன்: இஸிட் எ க்ரைம்?

ஆனந்த்: விபா மிஸ்ரா மேல் பி.வி. காரந்த் மண்ணெண்ணெய் ஊத்திக் கொளுத்திட்டதாச் சொன்னாங்க. அவர் பெரிய கலைஞர். அவர் அப்படியெல்லாம் செய்யவே மாட்டார்னு அவரோட நடிப்புலக நண்பர்கள் மட்டுமில்லே, மனைவிகூடச் சொல்றா! கிரைமே கிரைமா இல்லாதபோது, ஒரு கிரைமைத் தடுக்க நீங்க பண்ணின வேலை நிச்சயம் கிரைமே இல்லே!

பாண்டி: அப்பப்பப்பப்பா.... ஒரே விசு வசனம் மாதிரி தலையைச் சுத்துது. சரி. 'கிட்நாப்' இல்லே. வாட் நெக்ஸ்ட்?

ராகவா: இருக்கு. ஒரு குட் நியூஸ். ரகுவீரை விஜயவாடாவுக்கும் மாத்தலே, விசாகப் பட்டணத்துக்கும் மாத்தலே. அவன் இங்கேயேதான் இருக்கப் போறான். போதுமா?

பாண்டி: அதுதானே நம்ப பிளான்! இப்பச் சொல்லுங்க, நிர்மலா இந்த ஐடியாவைச் சொல்லலேன்னா எம்.டி. ரகுவீரை மாத்தாம விட்டிருப்பாரா?

மாடசாமி: சார், மசால் தோசை இல்லியாம். வெஜிடபிள் உப்புமா வாங்கி வந்திருக்கேன். நிர்மலா வருது சார். விஷயத்தைச் சொல்லிடுங்க. இல்லேன்னா அவ ஏற்பாடு பண்ணிடப் போறா எம்.டி.யைத் தூக்கிட்டுப் போக!

ராகவா: நிர்மலா, நீ எம்.டி.யை கிட்நாப் பண்ற ஐடியாவை உட்டுடு. ரகுவீரை மாத்தலே. அதுக்குப் பதிலா வேணா மாடசாமியை கிட்நாப் பண்ணிட்டுப் போயிடு!

நிர்மலா: அவரு இல்லே என்னைக் கடத்திக்கிட்டுப் போயிடுவேன்னு எங்க அண்ணாரு கிட்டச் சொன்னாரு அன்னிக்கு!

மாடசாமி: தா.... தா.... தா.... இதானே வேண்டாங்கறது! நான் எப்ப புள்ளே சொன்னேன்?

வெள்ளி சந்தனப்பேலா பரிசு!



நினைவூட்டுகிறோம்!

லஞ்ச் டைம் தொடரைக் கவனமாகப் படிப்பதுடன் பத்திரப்படுத்தியும் வைத்திருங்கள்!

12 வது கடைசி அத்தியாயத்தில் நீங்கள் பங்கேற்க ஒரு போட்டி அறிவிக்கப்படும்!

பரிசு : வெள்ளி சந்தனப் பேலா!

ஆறுதல் பரிசுகளும் உண்டு!

நிர்மலா: இப்போ சொல்லலேன்னு? அன்னிக்கு, என்னை உனக்குக் கட்டி வக்க வேண்ணு தேசிங்கு ராஜன் கணக்கா என்னைக் குதிரைலேயே தூக்கிட்டுப் போயிடுவேன்னு சொல்லலே?

ராகவா: ஐயோ, அது தேசிங்கு ராஜன் இல்லே. பிருதிவி ராஜன்!

நிர்மலா: யாரோ ஒரு ராஜன். உண்டா இல்லியா கேளுங்க.

மாடசாமி: அதெல்லாம் ஒரு வேகத்துல சொல்லிடறதுதான். அப்படியேசெஞ்சிட்டா அப்புறம் நாலு பேர் முகத்துல நாளக்கி முழிக்கறது எப்படி?

ராகவா: முழி முழின்னு முழிக்க வேண்டியதுதான்!

ரகுவீர்: ரொம்ப தாங்க்ஸ் ஸார். ஒரே கல்லுல ரெண்டு மாங்காய் அடிச்சுட்டீங்க. டிரான்ஸ்பரும் இல்லே. கடத்தலும் இல்லே. நிம்மதி!

ஆனந்த்: ஜி.எம்.னு பின்னே எதுக்கு பிரமோட் பண்ணிப் போட்டிருக்கு அவரை? இந்த மாதிரி, ஆயுசுல ஒரு தடவையாவது புத்திசாலித்தனமா நடந்துக்கத்தானே?

பாண்டி: "உஸ்.... ரொம்ப் க்லாட்டா பண்ணினீங்கன்னு ஜி.எம்.க்குக் கோபம் வந்து நம்ம யாரையாவது கிட்நாப் பண்ணச் சொல்லிடுவார் நிர்மலாகிட்ட!

(சுசீலா அவசரம் அவசரமாக வருகிறாள்.)

சுசீலா: ரகுவீர் இருக்காரா? எங்கே அவர்?

ரகுவீர்: என்ன சுசி? என்ன ஒரே டென்ஷனா ஓடி வரே? எனிதிங் ராங்?

சுசீலா: யாரோ உங்க அப்பாவோட க்ளோஸ் பிரெண்டாம். இன்னிக்குக் காலேலே வீட்டுக்கு வந்து எங்க அம்மாகிட்ட ரொம்ப வேகமாப் பேசினாராம். 'உங்க பொண் என் பையனோட வாழ்க்கையைக் கெடுக்கறா. ஒதுங்கிடச் சொல்லுங்கோ. வேற பையனா நாங்களே பாத்து உங்க பொண்ணுக்குப் பண்ணி வைக்கறோம்'னு உங்க அப்பா சொல்லச் சொன்னாராம்.

ரகுவீர்: ரொம்ப மிரட்டினாராமா?

சுசீலா: அதெல்லாம் சொல்லத் தெரியலே அம்மாவுக்கு. போனதும் ஒரே அழுகை. 'ஜாக்கிரதையாய் இரு'ன்னு.

ஆனந்த்: இதென்னடா இது! ஊர் உலகத்துல ஒருத்தன் காதல் பண்ண மாட்டானா? கல்யாணம் பண்ணிக்க மாட்டானா? இதுக்கெல்லாம் ஒரு பையனுக்கு பெண்ணுக்கு உரிமை இல்லியா? பயப்படாதே சுசீலா. ப்யார் கியா தோ டர்னா கியா?

பாண்டி: டர்டர்னு அவர் கிழிக்கப் போறார் ரகுவீரோட முதுகுத் தோலை.... மாடல் ஸ்கூல்ல சேர்ந்து, படிக்கறதுக்கு முன்னாலேயே நீ இப்படி இந்திலே பேசினேன்னா எனக்குக் கோபமான கோபம் வரும் ஆமா!

சுசீலா: இப்ப என்ன பண்றதுன்னு தெரியலியே!

ரகுவீர்: டோண்ட் ஒர்ரி! இதுக்கெல்லாம் பயப்படவே தேவையில்லே. அப்பா அப்படி ஒண்ணும் குரூரமா நடந்துக்க மாட்டார். முடிஞ்ச வரைக்கும் மிரட்டிப் பார்க்கலாமேன்னு நினைச்சிருப்பார்.

ஆனந்த்: அவர் சொல்ற பெண் எங்க இருக்கா? நல்ல பணக்காரப் பெண்ணுன்னு சொன்னியே ரகுவீர். அட்ரசைக் குடு. நான் வேணா ட்ரை பண்றேன்!

ராகவா: ரகு. ஒருதகப்பனாரோட உணர்ச்சிகளைப் புரிஞ்சுக்கறது ஒரு பிள்ளையோட கடமை இல்லியா?

ரகுவீர்: சார், அவர் என்னோட உணர்ச்சிகளைப் புரிஞ்சுக்காம மதிக்காம நடந்துக்கறது மட்டும் சரின்னு படறதா உங்களுக்கு?

ராகவா: யாரும் யாரையும் பகைச்சுக்கக் கூடாது. அதுதான் என்னோட பாலிஸிப்பா. பகைச்சுண்டாலும் வெறும் மிரட்டலோட நிறுத்திக்கணும்.

ஆனந்த்: சார், நீங்க நம்ம வெளிநாட்டு விவகார இலாகால இருக்க வேண்டியவர்.

தவறிப் போய் இங்கே ஜி.எம்.மா வந்துட் டீங்க.

மாடசாமி (ஓடி வந்து): சார், எம்.டி. உங்களே உடனே வரச் சொன்னுர். நீங்க சாப்பிட்டாலும் சாப்பிடலேன்னாலும் கையோட கூட்டிட்டு வரச் சொன்னுர்.

ரகு: போய்ட்டு வாங்க சார். அடுத்ததா என்ன பிராப்ளத்தை வச்சுகிட்டு மண்டை யைக் குழப்பிட்டிருக்காரோ?

நிர்மலா: எதுனு வேணும்னு என் கைலே சொல்லு சார். நான் பாத்துக்கறேன்.

ஆனந்த்: ஆமா, உங்கிட்டே சொல்லிப் புட்டு நாங்க நிம்மதியா இருக்க முடியுமா நிர்மலா? ஆளே உடு.

பாண்டி: எம்.டி. இப்ப எதுக்கு ஜி.எம்.மை எச்சல் கையும் அதுவுமா ஓடிக்கிட்டு வரச் சொல்றார்? புதுசா இவர் என்ன குளறுபடி பண்ணப் போருரோ?

சாம்ப: இல்லேப்பா, சமயத்துல சில நல்ல காரியமும் பண்றார் நம்ம ஜி.எம்.

ஆனந்த்: அதோ, ராகவாச்சாரி நேரே சீட்ல போய் உக்காந்துட்டாரே. கையில தாடை. தாடையில கை.... கொஞ்சம் லேசா சிரிப்பு எட்டிப் பாக்குது உதட்டுல.... திடீர்னு புருவம் எகிறுது..... மைதிலி, என்ன சமா சாரம்னு கண்டு பிடிக்க வேண்டியது உன் கடமை! ப்ளீஸ் ரஷ்.

மைதிலி: நீங்க குடுக்கற ரன்னிங் கமெண்ட்ரியைப் பார்த்தா, நிலைமை எப்படி இருக்கப் போறதுன்னே தெரியலே சார்.... கோபமா, சந்தோஷமா, ஸ்கீமிங்கா....

சாம்ப: சரி, நான் போய் முதல்ல விசா ரிக்கறேன். நீங்க சாவகாசமா வாங்க. (ராக வாச்சாரியின் ஸீட்டை நோக்கி வருகிறார்.)

ராகவா: சாம்பசிவம், மைதிலி எங்கே? அவசரமா ஒரு சர்க்குலர் அனுப்பணும். எம்.டி. ஆர்டர். அவ இன்னுமா சாப்பிட் டுண்டு இருக்கா?

சாம்ப: லஞ்ச் டயம் முடிய இன்னும் பத்து நிமிஷம் இருக்கு சார். அவ மெதுவா வரட் டுமே?

ராகவா: நோ... நோ... மைதிலி வந்தா உடனே அந்த சர்க்குலரை அனுப்பிச்சிட்டுத் தான் மத்த வேலையைப் பார்க்கணும். இட் இஸ் அர்ஜன்ட் அண்ட் இம்பார்டென்ட்!

சாம்ப (லஞ்ச் ரூமை நோக்கி): மைதிலி.... மைதிலி... மைதிலி...

ஆனந்த்: இது என்ன கோர்ட்டா, ஏலக் கடையா?

மைதிலி: என்ன சார்.... அவசரமாக் கூப் பிடறேள்...

ராகவா: எஸ். அவசரம். ரொம்ப அவசரம். ஒரு சர்க்குலர் அடிச்சு எம்.டி. கையெழுத் துக்கு அனுப்பணும். அப்புறம் அதை நோட்டீஸ் போர்டுக்கு அனுப்பணும்.

சாம்ப: அப்பாடா! ஏதோ டைரக்டர்ஸ் போர்டுக்கு அனுப்பப் போறீங்கன்னு நினைச்சா, நோட்டீஸ் போர்டுன்னுட்டீங் களே!

ராகவா: சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இங்கே வேலே பார்க்கிறவா எல்லா ரும் நல்லா டிரஸ் பண்ணிண்டு நேரே ஆபீ சுக்கு வந்துடணும். இதுதான் சர்க்குலர் சமாசாரம். மடமடன்னு அடி.

மைதிலி: என்ன சார், ஏதாவது பார்ட்டியா என்ன?

ராகவா: சொன்னதைச் செய் மைதிலி. டயம் இல்லே. இன்னிக்கு வெள்ளிக்கிழமை.

சாம்ப: எதுக்கு சார் நாளேக்கி எல்லாரும் வரணும்? என்ன ஸ்பெஷல்?

ராக்வா (ஒரு கண்ணைச் சிமிட்டியபடி சிரித்து): எல்லாம் நாளே ஒரு மணிக்குத் தெரியும்!

(திரை)

(தொடரும்)

''ஆபீஸ் ஊழியர்கள் எல்லாருக்கும் பஜ்ஜியும், சொஜ்ஜியும் தந்தியே! என்ன விசேஷம்?''

''நேற்று என்னைப் பெண் பார்க்க வருவதாகச் சொன்னவங்க வரலே 'ஸார்!!''





''நேத்து பாடம் எது வரைக்கும் சொல்லித் தந்தேன்?''

''பெல் அடிக்கிற வரைக்கும், சார்!''

ஒரு பக்கம் காதலித்துப் பின் எல்லை மீறி ஒரு குழந்தைக்குத் தாய் என்ற நிலைமை வரப்போகிறது என்று தெரிந்தவுடன், தொட்டவளை விட்டுப் பிரிந்த காதலன். அப்புறம் அந்தப் பெண்ணும் அவள் மகளும். (சுஜாதா — ரேவதி). இன்னொரு பக்கம் வயதுக்கு வந்த மகளுடன் மனைவியை இழந்து தவிக்கும் கணவன். கணவன்காரு ஜெய்சங்கர். (கதை மூலம் தெலுங்கு தேசமாமே!)

காதலனால் கைவிடப்பட்ட அம்மாவைக் கண்டபடி ஏசும் சமூகத்திலிருந்து காப்பாற்ற, அம்மாவுக்கு ஒரு நிலையான அந்தஸ்தைச் சமூகத்தில் கிடைக்கும்படி செய்வதற்காக, பெண் ரேவதி, அம்மா சுஜாதாவை, டாக்டர் அங்கிள் ஜெய்சங்கருடன் கோத்து விடுகிறாள். கணவன், மனைவியாக.

அட, நிமிர்ந்து உட்கார்ந்து விட்டீர்கள்! ரேவதி படத்தின் பாதிக்கதை இதுதான் சார். அப்புறம் சுஜாதா ஜெய்சங்கர் வீட்டுக்குப் போனவுடன் ரேவதிக்கு முளைக்கும் பிரச்னைகள், அதை அவர் சமாளிக்கும் விதம் மீதிக் கதை. முன் பாதியைச் சமுதாயச் சாடலாகவும், பின் பாதியை ஒரு பெண்ணின் கண்ணீர்க் கதையாகவும் பிணைத்துக் கொடுத்துவிட்டார்கள்.

சுரேஷ் செகண்ட் ஹீரோ. அதிகமாய் வேலை இல்லாத காரணத்தாலோ என்னவோ வந்து போகிறார் என்று மட்டும் சொல்லத் தோன்றுகிறது. தாடியையும் மீசையையும் வைத்துவிட்டு அவரைத் தீவிரவாதி என்று சொல்கிறார்கள். பச்சைக் குழந்தை என்று சொல்லியிருந்தால் பாந்தமாய் இருந்திருக்குமோ?

ஆனந்த் பாபு தேர்ட் ஹீரோ. வாத்து நடை நடந்து, கோணங்கித்தனமாய்ப் பேசி— இனிமேல் 'அந்த' மாதிரி காரெக்டர்கள் வேண்டுமானால், ஆள் தேடி அலைய வேண்டாம் என்று சொல்ல வைத்து விடுகிறார்.

ஹீரோவே இல்லை. ஹீரோயின்தான். ரேவதி தூள் கிளப்புகிறார்.

நிழல்கள் — ரவி, ராஜலட்சுமி சம்பந்தப்பட்ட கற்பழிப்பாகட்டும், தற்கொலையாகட்டும், படத்தில் ஒட்டாதது மட்டுமல்ல, மிகையும் கூட.

பாடல்கள் இரண்டு மூன்று கேட்கும்படி உள்ளன.

ஒரு பக்கம் சுரேஷ் பொறுப்பில்லாமல் தீவிரவாதியாய்ப் போனதால், அனுராதா ஆட்டக்காரியாய் மாறினார் என்று ஒரு குண்டு போட்டு, நல்லவராகத் தெரிந்த சுரேஷைப் பொறுப்பற்றவராகக்காட்டிவிட, மனத்தில் ஒரு ரகளை. இன்னொரு பக்கம் கைவிட்டுப் போன காதலன் திடீரென்று திரும்பி வந்து அவன் உத்தம சிகாமணிதான் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லும் போது (ஷரத்பாபு, ஜோர் பாபு) மனத்தில் இன்னொரு ரகளை. ஆண்களே நல்லவர்கள் என்கிறார்களா, கெட்டவர்கள் என்கிறார்களா? சுந்தர் K. விஜயனின் டைரக்‌ஷனில் முதல் படமாம். பிசிறு இல்லை. பொருக்கு இல்லை.





ரேவதி



விக்ரம்

இங்கிலீஷ் ஜேம்ஸ் பாண்ட்களாய்ப் போன தலைமுறை ஆசாமிகளைப் பார்த்து அலுத்துப் போன கண்களுக்குத் தமிழில் ஒரு சந்தோஷ வித்தியாசம்!

முறுக்கின தசைகள் + முணுக்கென்ருல் துப்பாக்கி முளைக்கும் கைகள் + குட்டிக் கரணம் அடித்து போடுகிற ஜப்பான் யுத்தங்கள் + சுறுசுறு, துறுதுறு = நம்மூர் ஜேம்ஸ் பாண்ட் கமல்ஹாசன்! 'உய்' என்று விசிலடிக்கத் தோன்றுகிறது.

கதையைத் தேடிப் பிடித்து ஆராய்ச்சி செய்தால் அங்கங்கே நிலா சைஸ் பொத்தல்கள். இருந்தாலும் மன்னிக்கலாம். (இங்கிலீஷில் மட்டும் லாஜிக் என்ன வாழ்ந்து விட்டதாம்!)

டைட்டில்ஸ்: விதவிதமான கோட்சூட்டில் கமல்ஹாசன்! நீளம் மாறும் துப்பாக்கிகள். பின்னலிருந்து வெளிச்சம். குரூப் பெண்கள் – தமிழில் புதுசு.

அன்பான பெண்டாட்டி. கிளுகிளு பாட்டு. பெட்ரூம். வயிற்றில் கையை நிறுத்தி 'இங்கே உங்க வாரிசு' (வெட்கத்துடன்) – அந்தக் கர்ப்பிணி மனைவி வில்லனின் ஆளால் டுமீல். கணவனை பழி வாங்கப் புறப்படுகிறுன் – தமிழில் பழசு.

மனைவியைக் கொன்றவனைக் கமல் துரத்தும் அந்தக் காட்சி. கூரைகள், சுவர்கள், உயரங்கள். தடதட ஷுக்கள். அந்த ஓட்டத் துரத்தலில் நம் நெஞ்சமே படக், படக், தடக், தடக். அப்புறம் அந்த மோட்டார் சைக்கிள் துரத்தல். சைட் காரில் உதவியாளினி. அந்த சைட் கார் தனியே கழன்று போக, லாரி, பஸ்ஸை எல்லாம் சாப்பிட்டு, கடோசி கடோசியாக தியேட்டர் ஒன்றில் வண்டி தடாலடியாய் நுழைந்து.... வெகு சுலபமாய் திரையில் வில்லன் உலா வர.... ஏவுகணையுடன் கதையும் சலாமியா தேசத்தில் போய் லாண்ட் ஆகிறது.

சலாமியா: பிரம்மாண்ட அரண்மனை. அட்டகாச அம்ஜத்கான். கவர்ச்சிகரமான டிம்பிள். விலைம்பு படைகள். பிரத்யேக எலிக் கோயில் இருட்டு. துரத்தல்கள், ஓடல்கள், துப்பாக்கிகள், விமானத்தில் சத்யராஜ்.... என்று பின் பாதி – தப்பு – பின் முக்கால் படம், ஒட்டக நடை நடக்கிறது.

அரண்மனை உப்பரிகைகள், கோயில் மதில்கள், பாலைவனங்கள் என்று கமல் ஹாசன் தப்பித்து ஓடிக் கொண்டே இருக்கிருர். ஆப்பிரிக்க கலெக்ஷனுக்கு இவரிடம் முதல் உண்டியைக் குலுக்கி இருக்கலாம்.

மொழி பெயர்ப்பாளர் ஜனகராஜ் சில ஜாலி நிமிடங்களைத் தருகிருர். இளவரசி டிம்பிளும், கமலும் உள்ளே படுக்கையறையில். டிம்பிளின் டயலாகை மொழி பெயர்க்க, சாத்தின கதவுக்கு வெளியே ஜனகராஜ். "வாய்யா. கிட்டே வாய்யா. இன்னும் கிட்டே வாய்யா..." – குரலில்தான் என்ன குழைவு என்ன குழைவு!

"இந்த எச்ச சாரலைச் சாப்பிட்டுச் சாப்பிட்டே எனக்கு வயசாய்டிச்சி" என்று ஆதங்கப்பட்டு குபீர்ச் சிரிப்பை வரவழைக்கும் மனேரமா, இன்னும் கொஞ்சம் வந்திருந்தால் இன்னும் கொஞ்சம் சிரித்திருக்கலாம்.

க்ளைமாக்ஸில் ஏவுகணையை அரைகுறை புரோக்ராமினுலேயே கமல் திசை திருப்பிவிட, அது ஏறக்குறைய தில்லி வரை சென்று திசை திரும்ப, கமலே டைம்பாம் வைத்திருக்க, (ஏன், எதற்கு?) ராணி படையும் சத்யராஜ் படையும் அடித்துக் கொள்ள, கடைசியில் விமானம் புறப்பட்டு அதில் சத்யராஜ் கமலின் உதவியாளினியுடன் தப்பிக்க, குதிரையிலேயே துரத்தி, கமல் விமானத்தைப் பிடித்து ஏறி......

பேசப்பட்ட படம் – சரி! பேசும்படியான படம்தானு – கேள்வி!

கண்ணே கனியமுதே

எடுத்த எடுப்பில் ஸில்அவுட்டில் ரஹ்மான் முத்திரை பிடிப்பதைக் காட்டுகிறார்கள். அப்புறம் வெளிச்சமும் இல்லாத இருட்டும் இல்லாத கடல், செடி கொடி என்று காமிரா உலா வருகிறது. அசோக்குமாரின் காமிரா உலா ராஜ உலாதான்.

வழக்கம்போல் ரஹ்மான் பரதம், பாங்ரா, வெஸ்டர்ன் என்று மாற்றி மாற்றி 'எப்படி ஆடுகிறேன் பார்?' 'எப்படி ஆடுகிறேன் பார்!' என்று ஆடிக் காட்டுகிறார். ஸ்டண்ட் ஸீன்களில் எகிறிக் குதித்து அடிக்கிறார். அழ வேண்டிய ஸீன்களில் அழுது காமிக்கிறார்.

இதெல்லாம் முடிந்த பின்னால்தான் கதை சொல்ல ஆரம்பிக்கிறார்கள். கிட்டத்தட்ட இடைவேளை வந்துவிடுகிறது.

மனைவி எதிரிலேயே இன்னொருத்தியைக் கூட்டி வரும் மிருதங்க வித்வான் ஜெய். அவரது செயலைக் கண்டு பொருமி வீட்டை விட்டு, மகனை விட்டு ஓடும் மனைவி சுஜாதா. அப்பா, அம்மாவின் இந்தப் போக்கினால் விரக்தியடைந்து வீட்டை விட்டு ஓடி வரும் மகன் ரஹ்மான். கடைசியில் தவறை உணர்ந்த அப்பா இறந்து போன பின் தாயும் மகனும் ஒன்று சேர்கிறார்கள்.

நூலிழைக் கதையில் உணர்ச்சிகளை வைத்து எவ்வளவு தூரம் விளையாட முடியும் என்று சோதித்துப் பார்க்கிறார்கள் டைரக்டர்கள் சக்தி—கண்ணன்.

அமலாதான் கதாநாயகி. ரஹ்மானின் பாலைவன வாழ்க்கையில் ஒரு சோலை. நடிப்பில் ஓரளவு மெருகு. பயத்தையும் அழுகையையும் வெகு சுலபமாக முகத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

நட்டுவாங்கம் பண்ணிக் கொண்டே பாடும்போது சுஜாதா பக்கவாத்தியக்காரரைப் பார்த்து ஒரு வெட்டு வெட்டி புன்சிரிக்கிறாரே வெகு இயல்பு.

ஜெய்சங்கர் பாத்திரம் கனமே இல்லாத, மூன்றாந்தர எவர்ஸில்வர் பாத்திரம். இதற்கு ஜெய் எதற்கு?

எம்.எஸ்.வி. ம்யூஸிக். இழந்த இடத்தை எட்டிப் பிடித்துவிடுவது என்று மனிதர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார் போல. இரண்டு பாடல்களை அமர்க்களமாகப் பண்ணியிருக்கிறார்.

நேர்மையான அமைச்சர் செந்தாமரையும், அவருடைய கோடாலிக் காம்பு மகனும் படத்திற்குத் தேவையேயில்லை. ஸ்டண்ட் ஸீன் என்று ஒன்று வேண்டுமே என்று தலையைப் பிய்த்துக் கொண்டு சேர்த்திருக்கிறார்கள் போலும்.

நீண்ட நாட்கள் கழித்து மகன் அம்மாவைப் பார்த்துவிட்டு, உடனே தான் இன்னார்தான் என்று சொல்லக்கூடாதோ? க்ளைமாக்ஸ் வரைக்கும் காத்திருக்க வேண்டும் என்பதற்காக 'அம்மா தவிக்கட்டும், அந்தத் தவிப்பை நான் பார்க்கிறேன்' என்று ஒரு சப்பைக் கட்டு.

படம் 'நீட்'டாக இருந்தாலும், பாடல்கள் 'நீட்'டாக இருந்தாலும், நடிப்பு, இன்ன பிற எல்லாம் 'நீட்'டாக இருந்தாலும்கூட மனசு தான் 'நீட்'டாக ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறது!

— ஜெயமன்மதன்



வட்டமேஜை

ஒரு கோடி கண்கள் போதாது!

* மேலட்டையில் என். பிரபாகரின் கலைவண்ணத்தைப் பார்த்துக் 'காண கண் கோடி வேண்டும்' என்று நினைத்தேன்.... ஆனால் கன்னியாகுமரியின் கதையைப் படித்ததும் கண்ணீர் விடுவதற்கு அந்த ஒரு கோடி கண்களும் போதாது என்று தோன்றியது.'

அரக்கோணம். எம். சுப்புரத்தினம்.

* அட! போங்க சார்! எந்தச் சபையைக் கலைப்பது, எந்த நடிகைக்குப் பதவி அளிப்பது என்பது போன்ற பிரச்னைகளையே தீர்க்க தமிழக முதல்வருக்கு நேரம் இல்லாதபோது கன்னியாகுமரி மக்களுக்கு ரயில் வசதி இல்லை என்று அறிந்து மத்திய அரசிடம் பேசிப் பிரச்னையைத் தீர்த்து வைத்துவிடப் போகிறாராக்கும்!

கும்பகோணம்—1. பா. கிருஷ்ணதாஸ்.

* குலசேகரத்திலுள்ள திற்பரப்பு அருவியைப் பற்றி இந்தக் கோடைக் காலத்தில் புதியதொரு செய்தியை எங்களுக்கு முதலில் அளித்தது கல்கிதான்.

தாத்தையங்கார்பேட்டை. ஆர். பிரதீபன்.

* பெரும்பாலான நகர சபைத் தலைவர்கள் நிதி மோசம் செய்யப்பட்டுவிட்டது என கூறும் இக்காலத்தில், நிதி பற்றி நாகர் கோவில் நகர சபைத் தலைவர் திருப்தி தெரிவித்திருப்பது ஆறுதலாக உள்ளது.

மன்னார்குடி. வி. அமிர்தலிங்கம்.

* நாகர்கோவில் ஹரிஜன மாணவர் விடுதியில் வசிப்பவர்கள் மாணவர்கள் அல்ல, எதையும் தாங்கும் இதயம் கொண்ட தெய்வங்கள்!

நெல்லிக்குப்பம். எஸ்.ஜெ. சலீம் தமிஜுதீன்.

* வாஸந்தியின் 'கிழக்கே ஓர் உலகம்' மிகவும் சுவாரசியமான பயணக் கட்டுரை. இருபது வாரங்களும் அவருடன் பிரயாணம் செய்தது போல் இருந்தது.

சிதம்பரம். ஆர். தமிழரசி தேவசேனாதிபதி.

* வெளியூர் பயணம் சென்று திரும்பியதுமே 'என்ன வாங்கி வந்தாய்?' என்று கேள்வி கேட்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதைத் தனது முடிவுரையில் மிக அழகாகவே சொல்லிவிட்டார் வாஸந்தி.

தஞ்சை—2. கரந்தை இரா. சரவணன்.

* காதல் ஜோக்ஸ் அனைத்தும் புளித்துப் போன 'கடி'கள்தான்....!

மன்னார்குடி—12. பி. ஆர். கோபாலன்.

* எம்.ஜி.ஆர்., கருணாநிதி தொடர்பான கேள்விக்குத் தராசு பதில் கண்டேன். உமது விமர்சன தர்மத்திற்கு **Hats off!** நீர் பதில் அளித்த பாங்கு நீர் ஒரு 'மிஸ்டர் அட்டகாசம்!' என்று எண்ண வைத்தது.

ஸ்ரீரங்கம். முருகதாசன்.

* பிரதமர் ராஜீவ் காந்திக்குக் கமலபாதி எழுதிய (தலையங்கம்) கடிதம் மிக அருமை!

அரவக்குறிச்சிப்பட்டி. எம். அசோக் ராஜா.

* 18.5.86 இதழில் நாகப்பட்டினம் போன்ற பெருநகரில் பொது டெலிஃபோன் வசதி ஒன்றுகூட இல்லையே என்று உங்கள் நிருபர் கலெக்டரைக் கேட்டிருக்கிறார். இப்படி ஒரு தவறான தகவலை யார் உங்கள் நிருபருக்குக் கொடுத்தது? நாகப்பட்டினத்தில் நாகூர் உள்ளிட்ட நகராட்சி எல்லைக்குள் 21 பொது டெலிஃபோன் கருவிகள் இயங்குகின்றன. இவற்றில் எஸ்.டி.டி. வசதியும் டிரங்கால்வசதியும் இருகருவிகளில்உள்ளன.

கும்பகோணம். எம். நடராஜன்,
டிவிஷனல் இன்ஜினியர், டெலிகிராப்ஸ்.

* 'தேவிபாலா எழுதிய 'டிராகுலாவாக மாறுகிறாளா....?' என்ற கதை (18.5.86 இதழ்) சர். ஆர்தர் கானன் டாயில் எழுதிய **'Sussex Vampire'** என்ற ஆங்கிலக் கதையின் தமிழாக்கமே. மூலக் கதாசிரியரைப் பற்றி மூச்சு விடாதது ஏன்?

சென்னை—59. ஆர்.ஜி. சுப்பிரமணியன்

இது போன்று பல கடிதங்கள் எமக்கு வரவே தேவி பாலாவிடம் விளக்கம் கேட்டோம். அவர் பதில்:

சில மாதங்களுக்கு முன்னால் தாயே பிள்ளையைக் கடித்து ரத்தம் உறிஞ்சியதாக அம்பத்தூரில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்தத் தாய் ஒரு மன நோயாளி என்பது பிறகு தெரிய வந்தது. அதை அப்படியே எழுதத்தான் நினைத்தேன். ஆனால் உண்மையாக இருந்தும் அது ஏற்றுக் கொள்ளும்படி இல்லை. எனவே அதையே ஒரு தற்காப்பு நடவடிக்கை என்று உருவாக்கி கற்பனை சேர்த்துக் கதையாக மாற்றினேன்.

கதை வெளியான நாலாவது நாள் வாசக நண்பர்களிடமிருந்து சூடான கடிதங்கள். ஷெர்லாக் ஹோம்ஸ் கதையை தழுவியிருப்பதாகக் குற்றச்சாட்டு. அதன் பிறகு நானே ஸ்ட்ராண்ட் மாகஸினில் அதைப் படித்து அதிர்ச்சியடைந்தேன். **Thoughts coincide** ஆகலாம் இல்லையா? ஆனாலும் சர் ஆர்தர் கானன் டாயல் உலகப் புகழ் பெற்றிருப்பதால் நான் அவரைக் காப்பி அடித்திருப்பதாகத்தான் சொல்வார்கள். எனக்குக் கற்பனைப் பஞ்சம் இதுவரை வந்ததில்லை. இது என் விளக்கம்! நம்புவது உங்கள் விருப்பம்!

சென்னை. தேவி பாலா.

(உண்மையைக் கண்டுபிடித்துக் கூற ஷெர்லாக் ஹோம்ஸ்தான் வரவேண்டும்! — ஆர்.)

சுட்டும் விழிச்சுடர்களை அணைய விடலாமா?



* டாக்டர் ஆர். கோபாலகஸ்வாமி

அந்தச் சிறுவனுக்குப் பாடம் சரியாக வரவில்லை. ஆசிரியர் கரும் பலகையில் எதையாவது எழுதினால், சிறுவன் தன்னுடைய சிலேட்டில், வேறு எதையாவது எழுதுவான்.

புத்திசாலியான அந்த ஆசிரியர் பையனை மிரட்டவோ அடிக்கவோ செய்யாமல் பெற்றோருக்குத் தகவல் அனுப்பினார்.

"உங்கள் குழந்தையின் கண்களைச் சோதனை செய்து பாருங்கள்."

ஆசிரியரின் ஊகம் மிகச் சரியாக இருந்தது. பையனின் கிட்டப் பார்வைக் கோளாறுக்குஉடனடியாகச் சோதனை செய்து கண்ணாடி போடச் செய்தார்கள். இப்போது பையன் படிப்பில் நெம்பர் ஒன்.

'எண்சாண் உடம்பில் சிரசே பிரதானம்' என்பார்கள். அந்தச் சிரசுக்கும் கண்களே மிகவும் பிரதானமானவை. பிறவியிலேயே பார்வையிழந்தவர்கள். அனுதாபத்துக்கு உரியவர்கள்தான். ஆனாலும் பிறந்து. விளையாடி, பள்ளியிலும் படித்து வளர்ந்த பிறகு பார்வை பழுதாவது என்பது அதை விடக் கொடுமை. உரிய நேரத்தில் கண்களைக் கவனித்து வைத்தியம் பார்க்கத் தவறுவோமானால், நிரந்தரமாகவே கூடப் பார்வையை இழந்துவிட நேரும் என்று கொஞ்சம் 'மிரட்டுகிறார்' டாக்டர் ஆர். கோபாலகஸ்வாமி. டாக்டர் சொன்ன பல தகவல்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

கண்கள் பாதிக்கப்படக் காரணம்

* பேறு காலத்தில் தாயாருக்கு அம்மை, ரொபெல்லா காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படுமானால், பிறக்கப் போகும் குழந்தையின் பார்வை கெடலாம்..

* தாய்க்கு 'கனோரியா' போன்ற நோய் தொற்றியிருந்தால், பிரசவத்தின்போது குழந்தையின் கண்களில் நோய்த் தொற்று உண்டாகும். கண்கள் பிசின் போல் ஒட்டிக் கொள்ளும்.புளிச்சை வரும். உடனே குணப்படுத்திவிடலாம்.

* குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் ஊட்டச் சத்துக் குறைவு ஏற்படுமானால், பேதி போன்ற நோய்கள் ஏற்படுமானால், கார்னியா என்கிற கருவிழிப்படலம் மென்மைப்பட்டுப் பழுதாகிவிடும். தாய்ப்பாலின் அவசியம் இங்கு கவனம் பெற வேண்டும். அதைவிடச் சிறந்த ஊட்டச் சத்துள்ள பொருள் வேறென்ன இருக்கிறது?

* கில்லி போன்ற சிறு பிள்ளை விளையாட்டுக்கள், தொழிற்சாலைகளில் பாதுகாப்புக் குறைவினால் கண்களில் தெறித்துப் பாய்கிற உலோகத் துண்டுகள், மத்தாப்புப் பொறி, போன்றவை பட்டால், கண்களின் கார்னியாவில் பழுது ஏற்படும்.

* பள்ளியில் படிக்கும் குழந்தைகள் போதுமான வெளிச்சம் இல்லாமல் படிப்பது, படுத்துக் கொண்டோ புத்தகத்தை வெகு அருகில் அல்லது வெகு தொலைவில் வைத்துப் படிப்பது, ஓடும் வண்டியில் படிப்பது எல்லாமே நாளடைவில் பார்வையைக் கெடுத்துவிடும்.

* அம்மை போன்ற நோய் ஏற்படும் போது, கார்னியாவிலும் கொப்புளங்கள் ஏற்பட்டுப் பார்வை பழுதடையலாம்.

பார்வைக் கோளாறுகளைச் சீராக்கத் தக்க பருவம் பள்ளிப் பருவம்தான். வளர்ந்து படித்து வேலைக்கு என்று ஏக எதிர்பார்ப்புகளோடு போகிற ஓர் இளைஞன் பெருத்த ஏமாற்றம் அடைவது இந்தப் பார்வைக் கோளாறுகளால்தான். ரெயில்வே, கப்பல் படை, விமானப் பணி, இராணுவம் என்று வேலைக்குப் போகிறவர்களுக்குக் கண்டிப்பாகப் பார்வைச் சோதனை உண்டு. தனக்கு அப்படி ஒரு கோளாறு இருப்பதாகவே தெரியாத பலர், இப்படி வேலைக்குப் போகும் போது சோதனையில் விழுந்துவிடுகிறார்கள்.

இந்தத் தோல்வி கண் பார்வை போவதை விட மோசமானது.

முன்கூட்டியே சோதனைகள் செய்து, ஏற்ற படிப்பைத் தொடர்ந்திருந்தால், இப்படிப் பட்ட எதிர்பார்ப்பு, ஏமாற்றங்களைத் தவிர்த் திருக்கலாமே!

தலைவலி

மலச்சிக்கல், இரத்த அழுத்த நோய், சைனஸ் கோளாறுகள் தவிர, கண் கோளாறுகளும் தலைவலிக்கு முக்கியமான காரணமாகின்றன. நாற்பது வயதான பிறகு க்ளகோமா என்கிற கண்ணீர் அழுத்த நோய் வரலாம். விளக்கைப் பார்த்தால் சுற்றிலும் வானவில் மாதிரி வட்டமாகத் தெரியும். காலையில் எழுந்ததும் கண்ணைச் சுற்றி மங்க லாக வலி எடுக்கும். கவனிக்காமல் விட்டு விட்டால்பார்வை நரம்பு பழுதடைந்துவிடும். அப்புறம் ஒன்றுமே செய்ய முடியாது.


ஐம்பது வயதுக்கு மேல் பொதுவாக காட ராக்ட் என்கிற கோளாறு ஏற்படலாம். பார்வை லென்ஸ் ஒளி மங்குவதால் இது ஏற்படுகிறது. விழியிலுள்ள பழுதடைந்த லென்ஸை அகற்றிவிட்டு செயற்கையான லென்ஸ் ஒன்றைப் பொருத்திவிடுகிறார்கள். இப்படிச் செய்யாமல், தக்க முறையில் கண்ணாடியில் லென்ஸ் வைத்தும் பார்வை யை மீட்கலாம்.

கிரகணம் பார்த்தால் கண் பார்வை பாதிக்கும். விழித் திரையில் மெகுலா (**Macula**) என்று ஒரு பகுதி இருக்கிறது. கிரகணத்தைப் பார்க்கும்போது, புற ஊதாக் கதிர்கள் நேரே சென்று மெகுலாவைத் தாக்கும்போது அங்கு கொப்புளம்போல் உண்டாகி விடுகிறது. பார்வையின் மையப் பகுதியில் மங்கலாகிவிடும்.

வண்ணங்களை உணர முடியாது

வண்ணங்களுக்கும் பார்வைக்கும் தொடர்பில்லை. இன்ன நிறம் என்று பிரித்து அறிந்து இனம் கண்டு கொள்வது மூளை யின் வேலை. பலருக்கு நிறக் குருடு என்று ஒரு நோய் உண்டு. (**Colour Blindness**). இதைப் பார்வைக் கோளாறாகக் கருதி குணப்படுத்த முடியாது. சிவப்புத் தபால் பெட்டி நீல அட்டைப் போட்ட புத்தகம் என்று பிரதான மான வண்ணங்களை இனம் கண்டு கொள்ள முடிந்தாலும், கலந்து இருக்கும் விதம் வித மான நிறங்களை இனம் கண்டு கொள்ள முடியாது. இதற்கான சோதனைகளில் எத் தகைய நிறக் குருடு என அறிந்து கொள்ள லாம்.

பாவம் பண்ணினால் கண் பார்வை போய் விடும் என்பதாக ஒரு சாபச் சொல் உண்டு. அறிவு பூர்வமாகப் பார்த்தால் இதை ஏற் பதற்கில்லை. எனினும் மது அருந்துதல், முறை யற்ற செக்ஸ் நடவடிக்கைகள் இவை கண் பார்வையைக் கெடுக்கக் கூடிய பாவங்கள்



தான். பொதுவாக மதுப் பழக்கம் பார்வை நரம்பையைக் கட்டாயம் பாதிக்கும்.

வீட்டை விட்டு வெளியே போய்த் திரும்பும்போது கண்ட கண்ட குப்பைகள் தூசுகள் கண்ணில் விழலாம். சுத்தமான தண்ணீரால் முகம் கழுவினால் போதுமானது. கண்களில் இயற்கையாகச் சுரக்கும் நீரிலேயே போதுமான பாதுகாப்பு இருக்கிறது.

விளக்கெண்ணெய் விட வேண்டுமா?

முன்பெல்லாம் தாய்மார்களுக்குச் சின்னக் குழந்தைகளின் கண்களுக்கு விளக்கெண்ணெய் இடுவது, குளிக்கும் போது நல்லெண்ணெய் போன்றவற்றைக் கண்களில் இடுவது - என்று பழக்கங்கள் இருந்தன. இவை எந்தப் பயனையும் தராத வீணான பழக்கங்கள்தாம்.

சிலருக்குப் பிறவியிலேயே மாறு கண், ஓரப் பார்வை (Squint Eye) இருக்கும். இது அதிர்ஷ்டமானது என்று ஒரு மூட நம்பிக்கை கூட உண்டு. ஆனால் பெண் குழந்தைகளானால் திருமண வயதில் அப்படி யாரும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. சின்ன சர்ஜரி மூலம், விழிகளின் பக்கத் தசைகளை ஒழுங்கு பண்ணினால் மாறு கண்ணை நேராக்கிவிடலாம். ரொம்பவும் சுலபமான வேலை இது.

சிலருக்கு முதல் நாள் இரவு படுக்கப் போகும்வரை கோளாறு இருந்திருக்காது. புத்தகம் படித்திருப்பார். டி.வி. பார்த்திருப்பார். காலையில் கண் விழிக்கும்போது பிரச்னை உண்டாகும். கீழ்ப் பக்கம் அல்லது மேல்பக்கம் அல்லது பக்கவாட்டில் ஒன்றுமே தெரியாது. கண் ஒரு காமிரா மாதிரி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பார்வை லென்ஸ் வழியே விழித் திரை என்கிற ரெடினாவில் படம் சரியாக விழுவதுதான் நல்ல பார்வை.

மேலே சொன்ன கோளாறு, ரெடினா திடீரென்று நகர்ந்து விடுவதால் ஏற்படுகிறது. காலங்கடத்தாமல் உடனே வைத்தியம் பார்த்தால், ரெடினாவை மீண்டும் பழையபடி சரியான இடத்தில் பொருத்திவிடலாம்.

கண் தானம்

இது பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. பத்திரிகைகளும் எழுதுகின்றன. ஆனாலும் பெருவாரியான மக்கள் இன்னும் செண்டிமெண்டலாகவே இருக்கிறார்கள். புதைக்கவோ எரித்துச் சாம்பலாக்கவோ போகிற உடம்பின் ஒரு சிறு பகுதி கண். இதைத் தானமாக வழங்க முன்வருவது, யாரோ ஒரு முகம் தெரியாத மனிதனுக்கு அல்லது சிறு குழந்தைக்கு பார்வையைத் தருகிறது. பார்வை என்பது ஓர் உறுப்பின் செயல்பாடு மட்டுமில்லை. மனிதனின் வாழ்க்கை, எதிர்காலம். இதற்கு உதவலாம் இல்லையா?

பேட்டி, கட்டுரை: **சுப்ரபாலன்**



(இண்டர்வியூவில்)

''சரி, நீ. எதிர்பார்க்கும் சம்பளம் என்ன?''

''சக ஊழியர்களிடம் நான் வாங்குகிற கடனை நீங்க அடைத்துக் கொண்டே வந்தால் போதும்....''

— கதர்லன்

கவலை ஏற்படும்போது அரவணைப்பவள்தான் உண்மையான தாய் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. அரவணைப்பே தேவை இல்லாத அளவு சொந்தக் காலில் நிற்கக் கற்றுக் கொடுப்பவளே உண்மையான தாய்.

— ப்ளூடார்க்.

தகவல்: எஸ். விஜயா சீனிவாசன்.

''இங்கே ஸ்டெனோ வேலைக்கு அப்ளிகேஷன் போட்ட ஆயிரம் பேரில் உன்னை மட்டும் நான் செலக்ட் பண்ணிய காரணம் என்ன தெரியுமா?''

''தெரியாது, சொல்லுங்கள் டார்லிங்!''

— ஈ.எஸ்.ஆர். சாதிக்பாஷா.

''நீங்க கதை எழுதறப்போ உங்களுக்கு ஒரு வாசகர் வட்டம் அமையறது ஆரம்பத்துல கொஞ்சம் கஷ்டம்....

''அப்புறம்?''

''அப்புறம் வாசகர்களுக்குக் கஷ்டம்!''

— நடேஷ் ஷா

டாக்டரின் மனைவி: ''அழகுதான்! ஊரிலிருந்து முதன் முதலில் வரும் மாப்பிள்ளையை 'சௌக்கியமா' என்று கேட்டு வரவேற்கச் சொன்னால் இப்படியா அவர் சௌக்கியத்தைத் தெரிஞ்சுக்கறது?''

— லலிதா செல்லப்பா





நடிகை: 'அம்மா, ஜிகினாஸ்ரீ! பிச்சை போடும்மா'னு இவ்வளவு உரிமையோட கேட்கறயே, யார் நீ?

பிச்சைக்காரன்: என்னைத் தெரியலே? நான் தான்ம்மா தயாரிப்பாளர் வீராசாமி! உன்னைக் கதாநாயகியாப் போட்டு முதல் முதல்லே படம் எடுத்தவன்!


— மு. மதிவாணன்

வால் தலை

ரப்பர் போவா எனப்படும் பாம்பு ஓய்வெடுத்துக்கொள்ளும்போது பந்துபோல் சுருட்டிக் கொண்டு தலையைக் கீழே வைத்துக் கொள்ளும். வாலைத் தலை போன்ற தோற்றத்தில் மேலே நீட்டிக் கொண்டிருக்கும். எதிரிகளை ஏமாற்றத்தான் இந்த யுக்தி!

— தில்லை தமிழரசன்

நன்றி: எக்ஸ்பிரஸ்



''உங்க பையன் ரொம்பப் புத்திசாலி சார்!''

''எப்படிச் சொல்றீங்க?''

''நான் வீட்டுக்குள்ளே நுழையும்போதே 'அம்மா! அப்பாவுக்கு இப்போ டிபன் காப்பி கொண்டு வராதே'ன்னு சொல்லிட்டானே!''

— எஸ். சீனிவாசன்

பிரின்ஸிபால்: எங்க காலேஜ்ல சேர நாங்க டொனேஷன் வாங்கறதில்லே.

''ரொம்ப நன்றி சார்!''

''புதுக் கட்டிடத்தில் ஒரு பகுதியை கட்டிக் கொடுக்க ஒத்துகிட்டா போதும்!''

வெங்கடரமணி





மூர் மார்க்கெட் தீக்காயங்கள் ஆறவில்லை

மூர்மார்க்கெட் வியாபாரிகளின் தீக்காயங்கள் இன்னும் ஆற்றப்படவில்லை. எண்பத்தைந்து மே இருபத்தொன்பதாம் தேதி இரவு மூர் மார்க்கெட் எரிந்து கொண்டிருக்கையில், அச்செய்தி கேட்டுப் பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்து, எதையும் மீட்டு எடுக்க முடியாதவர்களாய், அந்த அளவுக்குத் தீ பரவி எழுந்து நிற்க, 'எல்லாம் போச்சே!' என்று கதறி அழுது நின்றவர்கள்தான். இப்போதும் நிற்கிறார்கள்.

அப்போது தீயணைப்பு வண்டியின் வேகத்தை விடவும் அதிவேகத்தில் வந்து ஆட்சியாளர்களும், இன்ன பிற எதிர்த் தரப்பு அரசியல் தலைவர்களும் அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

சொன்னார்கள், அவ்வளவே!

அரசுத் தரப்பில் 'அல்லிக் குளத்தில் (மூர் மார்க்கெட் அருகிலேயே உள்ளது) ஆறு மாதத்தில் நவீன கட்டிடம் கட்டித் தரப்படும்' என்று அறிவிக்கப்பட்டது. தமிழக முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து கடைக்கு ரூபாய் இரண்டாயிரம் உடனடி நிவாரணத்தொகையாக அறிவிக்கப்பட்டது. நாட்டுப் பிரதமர் நிவாரண நிதியில் இருந்து கருகிப் போன வியாபாரிகளுக்குப் பத்து லட்சம் ஒதுக்கப்பட்டது. எல்லாம் சொல் அளவில்தான். ஓராண்டு காலம் முடிந்து போயும், நிவாரணத் தொகையே சரிவர எல்லோருக்கும் போய்ச் சேரவில்லை.

ஏ.பி.டி. பாய் என்று மூர்மார்க்கெட் வட்டாரத்தில் அழைக்கப்பட்டு வந்த எம். சம்சுதீன் என்பவர், தீ அவரது முதலீட்டை எல்லாம் முழுங்கிவிட்ட பின்னால், மன நோயாளியாகிப் போனார். கொஞ்ச நாட்களுக்கு மூர்மார்க்கெட் பக்கமே சுற்றி வந்தார். இப்போது எங்கேயோ காணவில்லை! இவரது மனைவி நிவாரணத் தொகையைப் பெற அலையோ அலையென்று அலைந்து வருகிறார். கிடைத்த பாடில்லை. 'இது உங்கள் ஆட்சி. உங்கள் குறைகளுக்கு ஓடோடி வாருங்கள்' என்கிறார்கள். ஓடிப் போகிறவர்கள் காயப்பட்டுத்தான் திரும்புகிறார்கள்!

மொத்தம் எண்ணூற்று ஐம்பத்தேழு வியாபாரிகள்தான். இத்தனை குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களுக்கு நிவாரணம் வழங்கி முடிக்க நமது அரசுக்கு ஓராண்டு போதவில்லை. இன்னும் எத்தனை ஆண்டுகள் தேவையோ தெரியவில்லை! துயர் துடைப்புப் பணிகளில்கூட எந்த அளவுக்கு நிர்வாகம் மெத்தனமாகச் செயல்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்!

கூடவே லஞ்சம் வேறு. துக்க வீட்டிலுமா துட்டைத் தட்டிப் பறிப்பது? வியாபாரிகள் லஞ்சம் கொடுத்தேதான் நிவாரணத்தொகையைப் பெற்று வந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கென்றே இடைத் தரகர்கள் தலையெடுத்து இருக்கிறார்கள். இவர்களிடம் ரூபாய் நூற்று முப்பது தர வேண்டுமாம். இவர்கள் முப்பது ரூபாயைத் தாங்கள் எடுத்துக் கொண்டு, நிவாரணத் தொகையை எடுத்துத் தருகிற பொறுப்பில் இருக்கிற அதிகாரிகளுக்கும் குமாஸ்தாக்களுக்கும் மீதம் நூறு ரூபாயைப் பங்கீட்டு செய்து தருகிறார்களாம்.

இதில் இன்னொரு குளறுபடியும் நடந்திருக்கிறது. முதல்வர், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடைக்கு ரூபாய் இரண்டாயிரம் என்றுதான் அறிவிப்புச் செய்ததாக வியாபாரிகள் சொல்கிறார்கள். ஆனால் பின்னால் அதி

காரிகள் ஒரு கடைக்காரருக்கு இரண்டாயிரம் என்று மாற்றிவிட்டார்களாம். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்த வியாபாரிகள் உண்டு. இவர்கள் மோதிப் பார்த்தார்கள். அரசு இயந்திரத்தை இளக்க முடியவில்லை! ஆக, ஒரு கடையைப் பறிகொடுத்தவருக்கும் இரண்டாயிரம்; நாலு கடைகளை இழந்தவருக்கும் இரண்டாயிரம்தான்! அப்படி இருக்கிறது தமிழக அரசின் நீதி பரிபாலனம்.



எம்.கே.பி.எஸ். மணி

இங்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். வியாபாரிகளிடையே ஒற்றுமை இல்லை. மூர் மார்க்கெட் பற்றிக் கொள்வதற்கு முன், நாலைந்து சங்கங்களாகச் செயல்பட்டு வந்தார்கள். எல்லோருமே ரோட்டுக்கு வந்துவிட்டார்கள். அதற்கப்புறமாவது ஒன்று சேரக் கூடாது?

சிறு கடை வியாபாரிகள் பெரிய கடை வியாபாரிகளைச் சந்தித்து 'எங்களையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள். எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்' என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் 'பெரிய'வர்கள் சம்மதிக்கவில்லை. 'எங்களைத் தீண்டத் தகாதவர்கள் போல் பார்க்கிறார்கள்; நடத்துகிறார்கள்' என்றார் சிறு கடை வியாபாரிகள் சங்கத் துணைத் தலைவர் எம். மணி. இந்தச் சங்கத்துக்கு அ.இ.அ.தி.மு.க. காரர் ஒருவர் தலைவராக இருந்திருக்கிறார். சங்கம் சங்கடமான நிலையில் இருக்கும் இக்கட்டத்தில் இப்போது அவர் இல்லை. இவர்களிடம் வசூல் நடத்த முடியாது என்பதற்காகக் கழன்று போய்விட்டாரோ, என்னவோ!

மணி, சக சிறு கடை வியாபாரிகளோடு சமீபத்தில் கோட்டை நோக்கி மௌன ஊர்வலம் போனார். ''பாதிக்கப்பட்டவர்கள் என்பதற்கான அடையாள அட்டைகள் தாருங்கள்; அல்லிக் குளத்தில் சீக்கிரமே மாற்றுக் கட்டிடம் கட்டித் தாருங்கள்; எங்களில் சிலருக்கு இன்னும் நிவாரணத் தொகை கிடைக்கவில்லை, அதைக் கிடைக்கச் செய்யுங்கள்; தற்காலிகமாக, வாழ்க்கையை ஓட்ட அல்லிக் குளத்தைச் சுற்றியுள்ள பகுதியில் வியாபாரம் செய்ய அனுமதி தாருங்கள்'' போன்ற கோரிக்கைகளோடு



முதல்வரைச் சந்திக்க முடியாததால் உண்ணாவிரதம்



• இப்போது ப்ளாட்பாரத்தில்....

நடந்தார். இவரின் ஊர்வலம் புறப்படுகிற நேரத்தில்பயமுறுத்துகிற அளவுக்கு போலீஸ் படை வந்து இறங்கி நின்றது. உண்மையிலேயே பயமுறுத்தவும் செய்திருக்கிறது!

இந்தச் சிறு கடை வியாபாரிகள் தீ விபத்திற்குப் பின்னால் மூர்மார்க்கெட்டின் வலப்புறம் புற நகர் (அரக்கோணம், திருவள்ளூர், கும்மிடிப் பூண்டி மார்க்கம்) மின்சார நிலையத்திற்குப் போகும் சாலையில் ப்ளாட்பாரத்தில் முடிந்த அளவுக்கு முதல் போட்டுக் கொஞ்சமாக வியாபாரம் செய்கிறார்கள் — சுமார் நூறு பேர். தினமும் இந்த வியாபாரிகள் போலீசுக்குத் தலா மூன்று ரூபாய் தருகிறார்கள்.

ஊர்வலம் போய் வந்த தினத்தன்று இவர்களைக் கடை விரிக்கப் போலீஸ் அனுமதிக்கவில்லை. பின்னால் சப்—இன்ஸ்பெக்டர் காலில் விழுந்து, குழந்தை குட்டிகள் பட்டினி கிடக்கின்றன என்று கெஞ்சி, அடுத்த நாளிலிருந்து பயந்து பயந்து வியாபாரம் செய்கின்றனர். போலீஸ் தினமும் வசூல் நடத்திக் கொண்டிருந்தாலும், அடிக்கடி வழக்கும் பதிவு செய்து விடுகிறது. வியாபாரிகள் போலீசுக்கும் அழுது, அபராதத் தொகையையும் கட்டிவிட்டு, வியாபாரத்தைத் தொடர்கிறார்கள்.

அல்லிக் குளத்தில் அரசு பதினைந்து லட்சத்தைக் கொட்டி நிரப்பிவிட்டது. கட்டிடத்துக்கு வரைபடம் தயாராகி, அதில் ஏதோ சிக்கல்; வழக்கு.

தவிர்க்க முடியாத காலதாமதம் ஆகுமானால் அரசு, வியாபாரிகளை அழைத்து ஆறுதல் தருகிற வகையில் இன்னின்ன உங்களுக்காகச் செய்ய இருக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். சிறு வியாபாரிகளின் குடும்பங்கள் பட்டினி கிடக்காமல் இருக்க அல்லி குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வியாபாரம் செய்யத் தாற்காலிகமாக அனுமதிக்கலாம். ஆளுக்கு மூன்று அடிதான் கேட்கிறார்கள். இவர்கள் கேட்கிற பகுதியில் வண்டிப் போக்குவரத்து கிடையாது. ஆனால் கருணையற்ற அரசு யந்திரம் இரக்கம் காட்டாதது மட்டுமல்ல; வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது. எப்படி?

இவர்களின் மகஜரைக் கோட்டையில் முதல்வர் அலுவலகத்தினர் பெறுகிற போது நையாண்டி செய்திருக்கிறார்கள். 'அப்படியா, நிவாரணத்தொகை எல்லோருக்கும் கிடைக்கவில்லையா? அல்லிக் குளத்தில் கட்டிடம் இன்னும் கட்டாமலா இருக்கிறார்கள்?' என்று கிண்டலாகக் கேட்டிருக்கிறார்கள்.

சிறு கடை வியாபாரிகள் ஊர்வலம் நடத்தியதற்கு அடுத்த நாள் பெரிய கடை வியாபாரிகள் மாநகராட்சி அலுவலகத்திற்கு எதிரே உண்ணாவிரதம் இருந்தார்கள்.

''நாங்கள் முதல்வரைச் சந்திக்க ஐம்பது தடவை முயன்றிருப்போம். முடியவில்லை. இரண்டு பஸ்களில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளோடு இரண்டு நாட்கள் இராமாவரம் தோட்டத்திற்கு சென்று பார்த்தோம். சந்திக்க முடியவில்லை. அதனால்தான் உண்ணாவிரதம் இருக்க வேண்டி வந்தது. முதல்வரைச் சந்திக்க வாய்ப்புக் கிட்டியிருந்தால் இதற்குத் தேவையே இருந்திருக்காது....'' என்றார் எம்.கே.பி.எஸ். மணி. இவர் பெரிய கடை வியாபாரிகள் சங்கமான 'மூர்மார்க்கெட் மார்ச்சண்ட்ஸ் அஸோஸியேஷன்' தலைவர்.

இவர்களிடம் சிறு கடை வியாபாரிகளைப் பற்றிக் கேட்டால், ''அந்தப் பேச்சே எங்

களிடம் எடுக்காதீர்கள். அவர்களைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்று சொல்லுகிறார்கள்.

சிறிதும் பெரிதுமாகச் சேர்ந்து மொத்தம் எண்ணூற்று ஐம்பத்தேழு வியாபாரிகள் தான் பாதிக்கப்பட்டார்கள் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. இவர்கள் கடைகளில் வேலை பார்த்தவர்கள், பொருட்கள் சப்ளை செய்தவர்கள், வட்டிக்குப் பணம் தந்தவர்கள் இப்படி ஏகப்பட்ட பேர். சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது இவர்கள் தரும் கணக்கு.

விபத்து ஏற்பட்ட பின்னால் இவர்களிடம் விசாரணை ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்டது மொத்தம் எத்தனை பேர் என்ற கணக்கு மட்டும்தான் எடுத்து இருக்கிறார்கள். மனோ தத்துவ நிபுணர்கள் குழு ஒன்று, தங்கள் தொழில்கள் அழிந்து போன நிலையில், இவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதா என்று அறிய மருத்துவ ஆராய்ச்சி விசாரணை செய்திருக்கிறது.

இந்தத் தீ விபத்து பற்றி எழுந்த சந்தேகங்கள் அப்படியே இருக்கின்றன. ஆனால் அரசு இது மின்சாரக் கோளாறினால் ஏற்பட்டது என்று கோப்பை மூடிவிட்டது.

ஏழெட்டு வியாபாரிகள் நஷ்டத்தைத் தாங்க முடியாமல் மனம் நொந்து இறந்து போய்விட்டார்கள். சிலர் மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

''அரசு அக்கறை காட்டவில்லை'' என்று சொல்லவே இவர்கள் பயப்படுகிறார்கள். குறை சொன்னால், அது பத்திரிகையில் வந்தால் அரசின் கோபத்துக்கு உள்ளாகி விடுவோமோ என்று அஞ்சி நடுங்குகிறார்கள். ''அல்லிக் குளத்தில் கட்டிடம் வேண்டும். அது மட்டும் எழுதினால் போதும் சார்....'' என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறார்கள். நமது மக்கள் ஆட்சியின் லட்சணம் அப்படி இருக்கிறது!

— சுப்பு. சிதம்பரம்

படங்கள்: கதிரை. துரை

ஒரு செல்வந்தரிடம் சென்று முல்லா 'ஓர் ஏழையைக் கடனிலிருந்து மீட்க நன்கொடை வசூலிக்க வந்திருக்கிறேன்' என்றார். 'பெருந் தொண்டு' என்று கூறி ஒரு பொற்காசை வழங்கினார் செல்வந்தர். பின்னர், 'யார் அந்த ஏழை' என்று கேட்டார். 'நானேதான்' என்று கூறி அங்கிருந்து நழுவினார் முல்லா.



சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அவ்வீட்டுக் கதவைத் தட்டினார் முல்லா. 'நன்கொடைக்காகத்தானே?' என்று ஏளனமாகக் கேட்டார் செல்வந்தர். 'ஆமாம்' என்றார் முல்லா.

'யாரோ ஓர் ஏழையைக் கடன் தொல்லையிலிருந்து மீட்கத் தானே?'

'உண்மைதான்.'

'கடனால் அவதிப்படும் அந்த ஏழை நீங்கள்தானே?'

'இல்லை' என்றார் முல்லா.

'அப்படியென்றால் மிக்க மகிழ்ச்சி. இதோ என் நன்கொடை' என்று பொற்காசு தந்தார்.

முல்லா திரும்பும்போது செல்வந்தர் கேட்டார்: 'முல்லா உங்களுக்கு இந்த மாதிரி பரோபகார குணம் வரக் காரணம் என்ன?'

'அதுவா, அந்த ஏழை கடன் வாங்கினது என்னிடமிருந்து தானே, அதனால்தான்!' என்றார் முல்லா.

— ப்ரியா பாலு

நல்ல பெயர் எடு!

கலைஞர் கருணாநிதி பெயரில் ஒரு பள்ளியோ, கல்லூரியோ, கட்டடமோ இருப்பின் அப்பெயரை எடுக்கின்ற ஒரு வேலையை இன்றைய தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது. இது குறித்து கலைஞர் திருக்குவளையில் ஒரு பள்ளியில் பேசும்போது இப்படிச் சொன்னார்:



'எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆனவுடன் பெரியவர்களையெல்லாம் பார்த்து வாழ்த்துப் பெற்றார். வாழ்த்தியவர்களில் ஒருவர் 'நல்ல பெயர் எடு!' என்று கூறினார். நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்றால் எந்தப் பெயரை எடுக்கலாம் என்று யோசித்தார் எம்.ஜி.ஆர். கருணாநிதியின் பெயர் நல்ல பெயர் என்பதால் அந்தப் பெயரை எடுத்துக் கொண்டிருக்கிறார்!'

— பாலு

வைரமுத்துவுக்கு நோபல் பரிசு பெறும் தகுதி உண்டா?

* ஆர். அரிகோபி, குடியாத்தம்

? ஞானபீடப் பரிசு பெற்ற, மறைந்த கன்னட எழுத்தாளர் மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் பற்றி...?

! தமது ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் மாநில முதல்வர் வந்து மாலையிட்டு மரியாதை செலுத்தும் அளவுக்குத் தமது தகுதியை வளர்த்துக் கொண்டவர். இறுதி ஊர்வலத்தின்போது ஐந்து கிலோ மீட்டர் தூரம் மற்றவர்களுடன் நடந்து சென்றார் ஹெக்டே. நமக்குத் தனிப்பட்ட பெருமை என்னவென்றால் தமிழைத்தாய்மொழியாகக்கொண்டவர் கன்னடத்தில் எழுதிப் பெரும் புகழ் பெற்றாரே என்பதுதான். அத்துடன் ராஜாஜியின் சில படைப்புக்களைக் கன்னடத்தில் மொழி பெயர்த்ததன் மூலம் தமிழுக்கும் சிறப்புச் செய்தார்.

* எம். இராஜேந்திரன், லால்குடி

? எம்.ஜி.ஆரைப் புகழ உருப்படியான காரியம் அவர் செய்தால்தானே என்று 8.6.86 இதழில் பதிலளித்திருக்கிறீர்களே? சத்துணவுத் திட்டம், தெலுங்கு கங்கைத் திட்டம், ஆலய மேம்பாட்டுக்காக வைப்பு நிதி திட்டம், புகளூர் காகித ஆலை இவையெல்லாம் யார் செய்த காரியம் ஸார்?

! இவற்றுக்காக அவரைத் தக்க தருணத்தில் கல்கி பாராட்டத்தவறவில்லை என்பதைக் கவனித்திருப்பீர்களே, ஸார்! சில திட்டங்கள் சரியாக அமுல்படுத்தப்படாத போது அதைக் குறை கூறவும் தயங்கியதில்லையே, ஸார்!

* பி.எஸ். பரமசிவம், மதுரை

? பஜன்லால் ராஜினாமா செய்ய பன்ஸிலால் முதலமைச்சர் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னணி ரகசியம் என்ன?

! வெங்கட்ராமையா கமிஷன் அறிக்கையை ஏற்பதென்றால், ராஜீவ்–லோங்கோவால் உடன்படிக்கையை அமுல்படுத்துவதென்றால் ஹரியானாவின் சில நலன்களைத் தியாகம் செய்யத்தான் வேண்டியிருக்கும். இதனைத் தியாகம் என்று உயர்வாக எண்ணாமல் தோல்வி என்றோ அல்லது ஹரியானா மாநிலத்தின் நலன்களை விட்டுக் கொடுத்து விட்ட துரோகம் என்றோ மக்கள் மதிப்பிட்டு விடுவார்களோ என்ற பயம் முதல்வர் பஜன்லாலுக்கு. அதனால் பிடிவாதமாக இருந்தார். பார்த்தார் ராஜீவ். ராஜ தந்திரம் பிரயோகிப்பதாக எண்ணி அவரை ராஜினாமா செய்ய வைத்து பன்ஸிலாலை முதல்வராக்கினார். தில்லிக்கு அழைத்துக் கொள்வதாக பஜன்லாலுக்கு சமாதானம் கூறினார். இதன் மூலம் முட்டுக்கட்டையையும் நீக்கியாயிற்று பஜன்லாலுக்குக் கொள்கைக்காகப் பதவி துறந்த மாவீரர் என்ற நற்பெயரையும் வாங்கிக் கொடுத்தாயிற்று என்று கணக்குப் போட்டார். ஆனால் பன்ஸிலால் முதல்வரானவுடனே அவருக்கும் ஹரியானா மாநிலத்தின் நலன்தான் முக்கியமாகப் போய்விட்டது. வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக இவரும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். எப்படியும் ராஜீவ், பூட்டா சிங், வெங்கட்ராமையா கூட்டு முயற்சியால் ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று எதிர்பார்ப்போம்.

* ப. உத்தண்டராமன், நெய்வேலி

? E.T. படத்தில் 'ஆகா, ஓஹோ' என்கிற மாதிரி அப்படி என்ன இருக்கிறது, சொல்லுங்களேன்?

! 'ஆகா' என்பது விஞ்ஞான ரீதியான சிந்தனை. இந்தச் சூரிய மண்டலம் தவிர இதர லட்சோப லட்சம் சூரிய மண்டலங்களுள் ஏதேனும் ஒன்றில் ஒரு கிரகத்தில் நம்மை விடவும் புத்திசாலிகளான ஜீவராசிகள் இருக்கலாம் என்றும் நாம் அவர்களைக் கண்டு பிடிப்பதில் வெற்றி காண்பதற்கு முன்னால் அவர்கள் நம்மைக் கண்டு பிடிப்பது சாத்தியமாகலாம் என்றும் அவர்களுக்கு நமது தலைசிறந்த விஞ்ஞானிகளையும் முட்டாள்களாக்கக் கூடிய அளவில் அதீத ஆற்றல்கள் இருக்கலாம் என்றும் ஒரு மறுக்கமுடியாத விஞ்ஞானக் கற்பனை. ஓஹோ என்பது இந்த வறண்ட விஞ்ஞானக் கற்பனையில் சராசரி மனித உணர்ச்சிகள் என்னும் நீர் பாய்ச்சி, ஒரு தாய், அவள் குழந்தைகள், அவர்களின் நண்பர்கள் என்ற கதாபாத்திரங்களை விளையச் செய்து, சம்பவ மலர்களைப் பூக்க வைத்து, மனநிறைவெனும் மணத்தைப் பரப்பி அதன் மேல் படர்ந்த பனித் துளிகளாக நம் கண்களைப் பனிக்கச் செய்த மாயம்!

* ஆஹா! ஓஹோ!



* போனர்





இந்த ஆஹாவுடன் ஓஹோ போட்டியிடும் போது வெற்றி பெறுவது அன்பு, பாசப் பிணைப்பு என்னும் மனித உணர்வுகள்தான். இதனிடம் விஞ்ஞானம், ஆட்சி அதிகாரம் எல்லாம் படு தோல்வி அடைகின்றன. இந்த அற்புதமான தத்துவத்தை, கதை உருவில் பிரமாதமாக நடித்து, விளக்கிக் காட்டுகிற குழந்தை நடிகர்களை ஆஹாஹா; ஓஹோஹோ என்றுதான் பாராட்ட வேண்டும்.

* உஷா கிருஷ்ணமூர்த்தி சென்னை — 42

? வைரமுத்துவுக்கு நோபல் பரிசு பெறும் தகுதி இருக்கிறதா?

! தகுதி இருக்கிறதோ இல்லையோ தன்னம்பிக்கை இருக்கிறது. நல்லதொரு கவிஞனுக்கு இருக்க வேண்டிய மன உறுதி இது. எவரெஸ்ட்டை எட்ட நினைப்பவன்தான் பெருமாள் மலைச் சிகரத்தையாவது அடைவான். பெருமாள் மலையை வென்றாலே போதும் என்று நினைப்பவன் பரங்கிமலை உச்சிக்குக்கூடப் போகமாட்டான். இங்கு நோபல் பரிசுக்காக ஜால்ராக்களால் பரிந்துரைக்கப்படும் பிரமுகர்களைப் பார்க்க வைரமுத்து ஒன்றும் குறைந்து போய்விடவில்லை. ஆனால் ஒன்று, தமிழ்நாட்டுக்கு வெளியே உலக அரங்கில் கவனத்தைக் கவர வேண்டுமானால் வைரமுத்துவின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டால்தான் உண்டு.

* வெ. இரமேஷ் நாதன்,
சிங்காரப்பேட்டை

? பொற்கோவிலில் மீண்டும் ராணுவம் நுழைந்தது குறித்து?

! உணர்ச்சி பூர்வமான அணுகுமுறையை ஒதுக்கி அறிவு பூர்வமாகக் கூறுவதானால், கோவில்கள் குண்டர்களின் கூடாரமாகப் பயன்படுத்தப்படும்போது அவசியம் நேர்ந்தால் மறுபடியும் போலீஸோ ராணுவமோ நுழையத்தான் வேண்டும்.

* க. தியாகராஜன், நெய்வேலி

? தமது 63வது பிறந்த நாளை ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு நிதி சேர்க்கும் நாளாகக் கருணாநிதி அறிவித்தது பற்றி?

! இதில் மத்திய அல்லது மாநில அரசின் பங்கு இல்லையாதலால் ஸ்ரீலங்கா அரசு ஆட்சேபிப்பதற்கில்லை. சேகரித்த நிதியை ஐந்து போராளிப் பிரிவினருக்கும் பகிர்ந்தளித்து மிச்சம் மீதியை சிறி சபாரத்தினத்தின் குடும்

நீங்கள் கேட்டவை — தராசு

பத்துக்கு ஆறுதல் நிதியாக வழங்கியது கலைஞரின் சாணக்கியம். எப்படியோ இவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள அந்தப் பணம் பயன்படுத்தப்படாமல் இருந்தால் சரி.

* எம். பிரபாகரன் திருமருகல்

? சமீபத்திய காதுல பூ சமாசாரம்?

! அ.தி.மு.க.வில் கருத்து வேறுபாடுகளே கிடையாது என்று கொ.ப.செ அழுத்தம் திருத்தமாகக் கூறியது.

* கே.வி.எஸ். மணியன், குடியாத்தம்

? வறுமை தாண்டவமாடும் இந்தியாவில் கோடிக் கணக்கான ரூபாய் இழப்புடன் 'பந்த்'கள் அவசியமா?

! ஒரு பந்த் காரணமாக ரூ 450 கோடி உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பது வி.பி. சிங் கணக்கு என்றாலும் சமீபத்திய தமிழக பந்த் ஈழச் சகோதரர்கள் விஷயத்தில் நமது ஒருமித்த மனநிலையை ஸ்ரீலங்கா அரசுக்கு மட்டுமின்றி இந்திய (மத்திய) அரசுக்கும் உணர்த்த அவசியமான ஒன்றே.

* கலை சிதா ரமேஷ், காரிமங்கலம்

? எம்ஜி. ஆரின் பத்தாண்டுக் கால ஆட்சி?

! ஆறாண்டு காலத் தூக்கம்.

* இரா. சுவாமிநாதன், சீர்காழி

? திருவள்ளுவர் பஸ் ஏறி மாமண்டூரில் டிபன் சாப்பிட்ட அனுபவம் உண்டா? எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டு இரவு மிளகு— பூண்டு ரஸம், பருப்புத் துவையல் சாப்பிட்ட அனுபவம் உண்டா?

! நான் சாப்பாட்டுப் பிரியன்தான்; ஆனால் வெறியன் அல்ல. ஆளை விடுங்கள்.

* ரூ 10 பரிசு பெறுபவர்:

வெ. இரமேஷ் நாதன்,
110, மின்வாரியம்,
சிங்காரப்பேட்டை — 635 307.

* தகுதி உண்டா?



* தமிழனுக்குப் பெருமை



* காதுல பூ!



* பந்த் பற்றி செ





பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி


மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் கும்பகோணம் "ராஜா வேத காவ்ய பாடசாலை" யை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணுக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ (அ) அவ்வப்போது ரூ. 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் சமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமானவரி விலக்கு உண்டு.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, 3 வது கிராஸ், ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் — 612 001.

ஆச்சர்யம்!

வித்தியாசமான விளம்பரதாரர் நிகழ்ச்சி



பதிமூன்று வாரங்களுக்கு, ஒவ்வொரு வியாழக் கிழமையும் இரவு ஏழு மணிக்கு இனி டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா உங்கள் வீட்டு டி.வி.யில் பாடுவார். அதற்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது ஹிந்துஸ்தான் லீவர் நிறுவனத்துக்கு.

ராகத்தின் பெயரைச் சொல்லிவிட்டு, சிறிய ஆலாபனை செய்து ஒரு சின்ன கீர்த்தனையும் பாடுகிறார். பின்னணியில் மகாபலிபுரம், காஞ்சிபுரம் கோயில்களும், சிற்பங்களும், கடற்கரையுமாக வித்தியாசமான 'மேடை'. ராமபிரான் விக்கிரகத்துக்கு அபிஷேக—ஆராதனை என்று, பாட்டுக்குப் பாட்டு; பக்திக்குப் பக்தி. (பிறகு, 'அவருடைய சட்டை என் சட்டையைவிட வெளுப்பா, எப்படி?' என்று விளம்பரம்!) டி.வி. திரையில் அப்புறம் நீங்கள் பார்ப்பது தமிழ் சினிமாக்களில், அதே ராகத்தில் அமைந்த பாடல்கள். அத்தகைய இரண்டு காட்சிகளைக் காண்பிக்கிறார்கள். (மினி ஒளியும்—ஒலியும்)

''நான் இசையமைப்பாளராக, நடிகராக, பின்னணிப் பாடகராக சங்கீத வித்வானாக இருந்திருக்கிறேன். நடிப்புக்குத்தான் எனக்குப் பரிசு இன்னும் கிடைக்கவில்லை. மற்ற எல்லாவற்றுக்கும் தேசிய அளவில் பரிசுகள் வாங்கியிருக்கிறேன். இந்த டி.வி. புரோகிராமில் நன்றாக நடித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன்!'' என்றார் பாலமுரளி, குறும்பாக. 'இந்துஸ்தான் லீவர், இந்துஸ்தானி இசை வழங்காமல், கர்நாடக இசையைத் தேர்ந்தெடுத்தார்களே, அதற்குப் பாராட்டவேண்டும்!' என்றார்.

பம்பாயில் இந்த நிகழ்ச்சியைப் பார்க்க முடியாதே என்பதற்காக, பொறுக்கி எடுத்த சிலருக்கு வீடியோவில் காண்பித்தார்களாம். ''அவர்கள் பாராட்டும் சரி, இங்கே பார்க்க முடியாதே என்ற ஏக்கமும் சரி — மிக அதிகம்!'' என்றார் இ.லீ. அதிகாரி ஒருவர்.

இதே நிகழ்ச்சி தெலுங்கில் ஹைதராபாதிலிருந்தும், மலையாளத்தில் திருவனந்தபுரத்திலிருந்தும், கன்னடத்தில் பெங்களூரிலிருந்தும் அந்தந்த மொழித் திரைப் பாடல் காட்சிகளுடன் ஒளிபரப்பாகும் என்றார்கள். மிகச் சாமர்த்தியமாக பாலமுரளியின் ஒத்துழைப்புடன் நிகழ்ச்சிகளைக் கோத்து இயக்கியிருக்கும் முரளி நல்லப்பா ('நல்ல முரளிப்பா!') இளைஞர், பம்பாய்க்காரர்.

பதிமூன்று வாரங்களுக்குப் பிறகு ரசிகர்களுக்கு இதில் ஒரு போட்டியும் வைத்து 2000 ரூபாய் பரிசும் வழங்கப் போகிறதாம் இந்துஸ்தான் லீவர் நிறுவனம்.

'எங்கள் நிகழ்ச்சியைவிட இவர்கள் நிகழ்ச்சி உசத்தியா, எப்படி?' என்று மற்ற நிறுவனத்தினர் நிமிர்ந்து உட்கார்ந்து யோசிக்குமாறு செய்துவிடுவார்கள் போலிருக்கிறது!

— சாருகேசி

அபிமன்யு 1986





சென்னை, போலீஸ் ஸ்டேஷன்கள் ஒவ்வொன்றிலும் ஓரிரு கான்ஸ்டபிள்களே இருக்கிறார்கள். காரணம், ஆப்பிரிக்கக் குழந்தைகளின் நலன் கருதி அண்ணா சாலையில் பலர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்; ஓட்டத்தை வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்த மக்களைக் கட்டுப்படுத்தப் போலீஸ் படையின் பெரும் பகுதி போய்விட்டது.

இந்தச் சமயம் பார்த்து வள்ளுவர் கோட்டத்திலிருந்து கூப்பிடு தூரத்தில்பெரிய கலவரம்!

கோடம்பாக்கம் நெடுஞ்சாலையின் இந்தப் பக்கம் இருப்பது தருமாபுரம். அந்தப் பக்கம் காமராஜர்புரம். இந்தப் பேட்டையைச் சேர்ந்த வயசுப் பெண் அந்தப் பேட்டைக்குப் போனபோது....

ஓர் இளைஞன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு அவளைக் கிண்டல் செய்ய...

அந்த அத்தியாயத்தின் வர்ணனை வரிகள் இந்தப் பேட்டையில் வாய் வார்த்தையாகப் பரவி படிக்கப்பட.....

அந்த இளைஞனை இவர்கள் சுற்றி வளைத்துத் தாக்க.... பின் மண்டை பிளக்க...

அவனை நண்பர்கள் கைத்தாங்கலாகப் பற்றி ரத்தம் சொட்டச் சொட்ட நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வருமுன்னரே....

இரு பேட்டையைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில்மோதல் உச்ச கட்டத்தை அடைந்துவிட்டது. கற்களும் சோடா புட்டிகளும் பறக்கின்றன!

இந்த விவரமும் நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனை எட்டுகிறது.... போன் மேலே போன்! "அவசரம்! அவசரம்!"

நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்ததோ ஹெட் கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் உள்பட மூன்று கான்ஸ்டபிள்களே. ஒருவரை அடிபட்டு வந்தவருடன் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு மற்றொருவருடன் கலவரப் பகுதிக்கு விரைந்தார் சுப்பிரமணியம். அப்புறம் என்ன நடந்தது? சுப்பிரமணியமே கூறுகிறார்:

"வள்ளுவர்கோட்டத்துக்கும்கோடம்பாக்கம் மேம்பாலத்துக்கும் இடையில் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. ஒரே ஜனக் கூட்டம். கூட வந்த கான்ஸ்டபிளிடம் கூட்டத்தை விலக்கி அனுப்புமாறு கூறிவிட்டு நான் சண்டை நடக்கும் இடத்தை நோக்கிப் போனேன். லட்டியைச் சுழற்றி அதிகாரம் செய்தேன். விரட்டினேன். "போலீஸ் வந்தாச்சு, ஓடு ஓடு!" என்று கத்தியபடியே கலைந்து ஓடினார்கள். ஆனால் கொஞ்ச தூரம் ஓடிய பிறகு திரும்பிப் பார்த்த சிலர், நான் மட்டும் தனியாக வந்திருப்பதைப் புரிந்து கொண்டு, "ஒண்டிக்காரனா வந்திருக்கான்டா! திருப்பி அடிடா!" என்று கத்தினார்கள். உடனே சரமாரியாகக் கற்கள் என்னைத் தாக்க ஆரம்பித்தன. லட்டியால் சிலவற்றைத் தடுத்தேன். ஆனால் சமாளிக்க முடியவில்லை. இடது மணிக்கட்டில், மார்பில் எல்லாம் அடி. அப்படியும் பொறுத்துக் கொண்டு கூட்டத்தைக் கலைந்து போகச் சொல்லி அதட்டி விலக்கினேன். ஒரு பெரிய கல் என் வலது கன்னத்தைத் தாக்கச் செய விழுந்தேன். தலை சுற்றியது. மயங்கி விழுந்தால் நிலைமை இன்னும் மோசமாகும் என்பதால் பல்லைக் கடித்துக்கொண்டு சமாளித்துக் கடைசிவரை நின்றேன். இதற்குள் இன்னும் சில காவலர்கள் அனுப்பப்பட்டு வந்து சேர, நிலைமை கட்டுக்குள் அடங்கியது. நேரே ஸ்டேஷன் வந்து ரிப்போர்ட் செய்துவிட்டு பிறகு ஆஸ்பத்திரிக்கு வந்து அட்மிட் ஆனேன்.

தனி மனிதராகக் கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்ததற்காக ஹெட் கான்ஸ்டபிள் சுப்பிரமணியத்துக்கு 250 ரூபாய் பரிசளித்துப் பாராட்டியிருக்கிறார் கமிஷனர் தேவாரம். "இந்தப் பரிசு எனக்குமட்டுமின்றி போலீஸ் படைக்கே உற்சாகம் அளிக்கும்; போலீஸின் நற்பெயரைக் காப்பாற்றும் விதமாகக் கடமையாற்ற ஒவ்வொரு காவலருக்கும் தூண்டுகோலாக அமையும்" என்கிறார் சுப்பிரமணியம்.

பேட்டி: மௌனஷ்மி

படம்: யோகா

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



இன்றைய நவீனத் தொழில் நுட்பத்தோடு, சிகரமான செயல்திறன், புதுமையான ஸ்டைலிங்—இவைதாம் ஒரு டிவியிலே நீங்கள் நாடும் இலட்சியம் எனில்—

இதோ, உங்கள் தேவைகளுக்கு முழு நிறைவு : புதிய PHX பிளாக் & ஒயிட் டெலிவிஷன்கள், TRENDSET கலர் டெலிவிஷன்கள். எப்படி என்று பாருங்கள்: கலர்க் காட்சிப் படைப்பில் புதுமைப் பாணிகள்.

PHX TRENDSET ஈடிணையில்லா மூலவர்ண விகிதப்பொருத்தம் இணைப்பெற்றுள்ள பயன் : நிரந்தரமான இயற்கை வர்ணப் பிரதிபலிப்பு.

8 சேனல்களின் நொடிநேரத் தேர்வுக்கு டச் பட்டன்கள்.

செங்குத்தான கலர் பார் டிஸ்ப்ளே.

உள்ளமைந்த ஒலி மியூட்டிங் ஸிஸ்டம்

2-வழி, 6 வாட்ஸ் லவுட்ஸ்பீக்கர் ஸிஸ்டம்.

பயனோங்கிய அதிநவீன பாஸ்:பெட் எலக்ட்ரானிக் டியூனர்.

PHX TRENDSET டில் பொதிந்துள்ள ஆட்டமேட்டிக் பணித்திறன்கள் மிக அதிகம் : ஆட்டமேட்டிக் டிகாஸிங் லாக்ஹூட், ஆட்டமேட்டிக் ஃப்ரீக்வென்ஸி கண்ட்ரோல், பீம் கரெண்ட் லிமிட்டர், பேஸ் அண்ட் ஃப்ரேம் ஸின்க்ரனைசேஷன், ஓவர்லோடு பாதுகாப்பு போன்ற பல.

மேலும், எல்லாவித VCR, வீட்டுக் கம்ப்யூட்டர்கள், விடியோ ஆட்ட சாதனங்கள் ஆகிய எதனோடும் இணைத்தியக்கத் தக்கது.

கறுப்பு-வெள்ளை டிவி புரட்சி

உங்களுக்குக் கிடைப்பவை :

—டிவி வகைகளின் வரிசை—3 ஸ்க்ரீன் சைஸ்களில்.

—முழுநிறைவு கண்ட பிளாக் & ஒயிட் பிரதிபலிப்பு

—எலக்ட்ரானிக் டியூனிங் எது வேண்டுமோ அது.

—ஆட்டமேட்டிக் செயற்பணிகள்

பைகோ உறுதிமொழி. PHX என்பது PEICO ELECTRONICS & ELECTRICAL LIMITED தயாரிப்பு ஆதலால் அதி உன்னதத் தரம் உங்களுக்குக் கிடைப்பது உறுதி.

தொடர்ந்து விற்பனைப் பின்தைய விரிவு மிக்க ஸர்வீஸிங் முழுமையாகக் கிடைத்திடும் உமக்கு, பைகோ-பயிற்சிபெற்ற டீலர்களின் பெருமண்டலக் கிளைகள் மூலம்.

ஆம், நெடுந்தூரம் முன்னேறிவிட்டது PHX தொழில் நுட்பம்— புதிய PHX டெலிவிஷன்களின் வரிசை, நெடும் தூரம் போகாமலே உமக்கு, கிட்டத்திலுள்ள டீலர்களிடம் கிடைக்கிறது. முந்துங்கள்



PHX

PHX பிளாக் & ஒயிட் டெலிவிஷன்கள்

TRENDSET கலர் டெலிவிஷன்

OBM/7447/TM

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

PHILIPS

பிலிப்ஸ்

ஒரு பல்பு உங்களை மிக அழகாக ஏமாற்ற முடியும் தெரியுமா?



இப்பொழுதெல்லாம் லைட் பல்புகள் அழகழகான வாக்குறுதிகளைத் தருகின்றன. நீடித்த ஆயுள், தரமேன்மை, அது இது என்று பல வாக்குறுதிகள்.

ஆனால் வாங்குவோருக்கு இவ்வாக்குறுதிகள் பற்றி சோதித்து அறிய வழியில்லை. ஏன் தெரியுமா? பார்த்தால் எல்லா பல்பும் ஒரே மாதிரிதான்.

கொஞ்சம் காலம் கழித்து தான் உண்மை புலப்படும். தரம் கெட்ட வெளிச்சமாகிவிடும். குறைந்த ஒளி தந்து, கூடுதல் மின்சாரத்தை விழுங்கி அற்ப ஆயுளிலே அதன் கதையும் முடிந்து விடும்.

இந்நிலையில் சரியான பல்பை எப்படித்தான் கண்டு பிடிப்பது?

50 ஆண்டுகளுக்கும் மேலாக நம்பிக்கைக்குப் பாத்திரமான பல்பைத் தேர்ந்தெடுப்பதுதான் பாதுகாப்பான முறை. அதாவது பிலிப்ஸ் நிறுவனம் 100 % சரியாக சோதிக்கப்படும் பல்புகளை வழங்கி, அவற்றின் மூலம் ஒவ்வொரு வாட்டிற்கும் நீங்கள் செலவிடும் பணத்திற்கு 100 % மதிப்பை அளிக்கிறது இந்த நிறுவனம்.

100 % நம்புங்கள்.
வாங்குங்கள் பிலிப்ஸ்.



தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான். ஆனால் பிலிப்ஸ் என்றாலே நம்பிக்கைக்கு உ

பிலிப்ஸ்–ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெய